# ஆனந்த விகடன்



பொங்கல் போனஸ்:

துரோகம் துரத்துகிறது!

—புஷ்பா தங்கதுரை

# துரோகம் துரத்துகிறது!



**புஷ்பா தங்கதுரை**

ராத்திரி வானம் கூடாரம் போல் கடலை மூடியிருந்தது! எங்கும் கரிதான இருட்டு! கரையும் தெரியவில்லை; நீரும் தெரியவில்லை.

175 அடி நீளம், 200 டன் டெட் வெய்ட், டிராலர் ட்ரின்கோமலீ அடியும் முனையுமாய் லாவி ஆடியது. அதன் எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டிருந்தன.

சிங்களவர் அதன் ஏணி மேலே ஏறி வீல் ஹவுசிற்கு வந்தார். தொந்திமேல் சராங் மடிப்பு! இடுப்பைக் கட்டிக் கொண்டு ஓர் அழகான வெள்ளைக்குட்டி! அவருடைய போனஸ் இணைப்பு!

—இடம் சரிதானா என்று சிங்களவர் கேட்க, காப்டன் சார்ட் ரூமிற்கு ஓடினார். சார்ட் மேப்பையும், கோஸ்டல் சார்ட்டையும் பார்த்தார். எக்கோ ஸவுண்டரில் ஆழம் பார்த்தார். எல்லாம் இதுதான் இடம் என்று சாதித்தன.

ஓடி வந்து சொன்னார்.

—பசங்கள் தூங்கறாங்களா? என்று சிங்களவர் சீறினார்.

கரையிலிருந்து சிக்னல் எதுவும் வரவில்லை. அதுதான் கோபம்!

காப்டனைப் பார்த்தார். — நாமே சிக்னல் கொடுக்கலாமா? என்றார்.

வயதான காப்டன் நிசப்தமாக இருந்தார். —உங்கள் இஷ்டம் என்று கண் பேசியது.

சிக்னல் போடும்படி உடன் உத்தரவு பிறந்தது!

டிராலரின் போர்ட் ஸைட் பக்கமாக ஒரு விளக்கு திரும்பியது. பச்சைக் கண்ணைத் திறந்து மூடியது.

இரண்டு நிமிடமான யுகங்கள்!

பிறகு இரண்டு மைல் தொலைவிலுள்ள கரையிலிருந்து ஒரு பச்சை வட்டம் ஜோராகப் பூத்தது. சந்தோஷத்தில் சிங்களவர் சிங்களவியை இறுக்கினார். அவள் மார்புகள் சோளிக்கு மேல் தளும்பின.

டிராலரின் பச்சையும், கரைப் பச்சையும் கண்ணடித்துப் பேசின. பிறகு மௌனமாயின.

கரையிலிருந்து கட்டுமரங்கள் புறப்பட்டு வர ஒரு மணி நேரம் ஆகியது. நிர்வாண உடம்புகளுடன் (கோவணம் நீங்கல்) வெடவெடக்க, டிராலர் அருகில் வந்து எல்லோரும் நர்த்தனமாடினார்கள்.

ஓர் ஆள், தொங்கும் ஏணியில் ஏறி டிராலருக்குள் வந்தான்.

சிங்களவர் டெர்ரிக், முன்னால் பிஸ்டலுடன் நின்றார்.

—காசி வரல்லையா? என்று கோபமாகக் கேட்டார்.

—அவருக்குக் குளிர் காய்ச்சல்! அதான் இவ்வளவு நேரம் ஆயிடுச்சு!

—நான் உங்களை எப்படி நம்புவேன்? என்றார் கடூரமாக.

—நம்புங்க! காசிக்கு ஜுரம் தீப் பறக்குது. கட்டுமரத்தில் ஏத்திப் பார்த்தோம். உட்கார முடியல்லே. குளிர்லே கத்தறாரு! இறக்கிட்டோம். எசமான் வேணுமின்னா எங்களோட ஆள் அனுப்பி கரையிலே பார்க்கலாம். கடல் மாரி மேலே ஆணை! பொய் சொல்லமாட்டோங்க!

சிங்களவர் நம்பவில்லை.

—நீங்க ஏன் முதல்லே சிக்னல் போடலே! 12-35-க்கு மேலே போடணும்னு தெரியாதா?

—தெரியும்! தெரியும் என்று தத்தளித்தான் ஆள்.—ரோட்டிலே இரண்டு லாரி போச்சுங்க! ஆட்களா இருந்தாங்க! போலீஸ்னு நினைச்சோம். ஏதாச்சியும் ஆயிடக் கூடாதேன்னு ரொம்ப நாழி சிக்னல் காட்டலே!

சிங்களவர் இன்னும் யோசித்தார். அந்தக் குட்டி இன்னும் அரித்தாள். அவர் மனசில் பெரிய அளவு கரைசல் ஏற்பட்டுக் கரைகள் சரிந்து கொண்டிருந்தன. 'உம்' என்று உத்தரவு இட்டார்.

பிறகு டிராலரின் ஹாச் திறந்தது.

ஹாங்காங், சிங்கப்பூர் சரக்குகள் பிளாஸ்டிக் மூட்டைகளில் உள்ளே செதிள் செதிளாகக் கிடந்தன.

கட்டு மர ஆட்கள் கறுப்பு நிழல்களாக மேலே வந்தார்கள். சிறிது நேரத்தில் கார்ட்டூன் படம் போல் விறுவிறுத்தார்கள்.

காஸட்கள், வாட்ச்சுகள், ப்ளேட்கள், பாலியிஸ்டர் துணிகள் அடங்கிய மூட்டைகள் வேகமாக இடம் மாறின.

ஒரு மணி நேரத்தில் முப்பது கட்டுமரங்களும் முப்பது புள்ளிகளாக இருட்டுள் மறைந்து விட்டன.

டிராலர் வட்டமடித்துக் கொண்டு அந்தச் சிங்களவப் பெண்ணின் சிரிப்போடு போய்விட்டது.

கரையில் கற்ருழையின் பின்னல் உட்கார்ந்திருந்த அவனுக்கு 'விக்' 'விக்' என்று அடித்துக் கொண்டிருந்தது.

கடந்த ஐந்து மணி நேரமாக இருட்டுடன் ஒட்டிக் கொண்டிருந்தான்.

எல்லாம் சரியாக நடக்கணுமே என்று பெரிய கவலே.

தூக்கம் 'கிலுக் கிலுக்'கென்று இழுத்தது.

இரவு அவளுடன் இல்லாதது முதல் தடவை!

அவளைப் பற்றித்தான் சதா நினைவு! கட்டிலில் கிடக்கும் அவளது கதுப்பான உடலே மனத்திலே திறந்து பார்க்க முயன்றபோது—

—குரு என்று குரல் வந்தது.

ஸ்பிரிங் தள்ளியதுபோல் எழுந்தான்.

—எல்லாம் முடிஞ்சு போச்சு குரு என்றது குரல்!

—சரக்கு கிடைச்சுதா?

—கிடைச்சுது!

—அப்பா! எனக்குப் பெரிய நிம்மதி!

—நானும் பயந்துட்டேன்! கையிலே பிஸ்டலேத் தூக்கிட்டான். நம்ம கதி அதோ கதின்னு நினேச்சேன். அப்புறம் 'ம்'னு சொன்ஞன் பாரு!... போன உயிர் வந்துடுத்து.

—எவ்வளவு இருக்கும்?

—லட்சத்துக்குக் குறையாது! உனக்கு வேட்டைதான். கவர்மெண்டிலே சொல்லி ரிவார்ட் வாங்கித் தரேன். அப்புறம் நாம்ப சொன்னபடி பங்கு வேறே போட்டுக்கரேம், அந்த வரும்படியும் உண்டு.

—சந்தோஷம் ஸார்!...ஒரு காரியம்! காசிக்கு விஷயம் தெரிஞ்சா என்னேக் கொத்திடுவான், கொத்தி!

—பயப்படாதே! வீட்டைச் சுற்றிப் பாரா போட்டிருக்கேன். ராத்திரிக்குள்ளே ஆப்டுடுவான்.

—இதுவரைக்கும் கிடைக்கல்லியா, ஸார்?

—கிடைக்கலே! கிடைச்சுடுவான்! நீ பயப்பட வேணும்.

—நாட்டிலே நடக்கிற நடப்பு தெரியுமில்லே.

—எமர்ஜென்ஸி!

—ஆம்மாம்! யார் ஆப்டாலும் உள்ளே தள்ளிடலாம்! நாளே காலே ஸ்டேஷனுக்குப் போகமாட்டேன். வீட்டுப் பக்கம் வந்துடு.

—எஸ் ஸார்.

இன்ஸ்பெக்டர் திரும்பிப் போனர்.

அவன் புறப்பட்டான்.

வீட்டுக் கதவைத் தட்டும்போது ஐந்தரை.

யாரும் திறக்கவில்லே.

—கமலம்!

கதவை இரண்டாம் முறை!

பாதங்கள் தரையில் பாவுகிற சத்தம்-யாரு என்று அவள் குரல்!

—நான்தான்.

—யாரு?

—நான்தான்! நான்தான்! நான்தான்!

கதவு 'லொட்'டென்றது.

கமலம் வெளுத்திருந்தாள். அவனேத் தூக்கப் பார்வையாகப் பார்த்தாள்.

—எங்கே போயிருந்தீங்க?

—பெரிய வேட்டை போ! ராத்திரி முழிச்சதெல்லாம் தாளும்! 25 கிடைக்கும் போ!

அவனுக்குத் தெரியும்! அப்படி ஒரு காரணம் இல்லாவிட்டால் ஒரு ராத்திரி அவனை மறந்திருக்க மாட்டான்.—இருபத்தைந்து?

—ஆமாம், இருபத்தைந்து! பின்னாலே மூணு சைபர்!

—நீங்க செய்யறதெல்லாம் எனக்குப் பயமாயிருக்கு!

— ஒண்ணும் பயப்படாதே! போலீஸ் நம்ப கையிலே.

—ராத்திரி இரண்டு வாட்டி யாரோ கதவைத் தட்டினாங்க.

ஒரு ஃபுல்ஸ்டாப் போட்டுக் கொண்டு நின்றான் — யார்?

—கேட்டேன்! பதில்சொல்லலை. நான் திறக்கலே. எனக்கு பய்மாய்ப் போச்சு.

—கனவு கண்டிருப்பே?

—கனவா? கதவு 'லொட லொட'ன்னு ஆடித்து! கண்ணாலே பார்த்தேன். முதல்ல உசத்தி தாப்பாளா போடுங்க! உதைச்சா திறந்துடும்.

நிசப்தமாகி விட்டான்.

யாராயிருக்கும்? காசியா? அல்லது அவனது அடியாளா?

நிமிர்ந்தபோது அவள் நாற்காலியில் விரைத்திருந்தாள். அவள் கண்கள் இன்னும் இரவுச் சம்பவங்களைப் பார்த்துக் கொண்டிருந்தன.

—பயமா கமலம்?

சொப்பனத்திலிருந்து வந்தாள்.

—நீங்க சம்பாதிச்சது போறுங்க.

—ஏன்?

—பயமாயிருக்கு!

—நான் நியாயமாத்தானே நடந்துக்கறேன்?

—அப்படியானல் நேத்திக்கு ஏன் ஒருத்தன் வந்து கதவைத் தட்டணும்? இந்த ஊரிலே போட்டி பொறாமை அதிகமா இருக்குங்க! இல்லாட்டி ராமக்கா இப்படித் தெருவிலே வந்து நிப்பாளா?

ராமக்காவை அவனுக்குத் தெரியும். அவள் புருஷனும் இன்னொருவனும் நேஷனல் ஹைவேயில் 2000 பால்பாயிண்ட் பேனாக்களோடு பிடிபட்டார்கள். பொடி கேஸ்தான். போலீஸ் அவர்களை உள்ளே தள்ளி விட்டார்கள்.

அந்த விஷயம் நடந்து ஒன்பது மாதம் ஆகிவிட்டது. இப்போது ராமக்காவும் குழந்தைகளும் சந்தியில் நிற்கிறார்கள்.

—இவங்களெல்லாம் சமூக விரோதிங்க கமலம்!

—ராமக்காவா?

—ராமக்கா புருஷன்.

—அதுக்காக ஒரு குடும்பத்தை இப்படித் தத்தளிக்க வைக்கலாமா?

—நானா வச்சேன்?

—வச்சவங்களைச் சொன்னேன். அந்தப் பொண்ணு என்னத்தைக் கண்டது? பாவம், என்னமா நகை போட்டிருந்தாளாம்! எல்லாத்தையும் வித்துட்டு இப்போ தெருவிலே நிற்கிறாளாமே! சொல்லிச் சொல்லி அழுதாளே! ஏங்க? உங்களுக்குத் தெரியுமா? இதை மாதிரி நிறைய குடும்பங்க இந்த ஊரிலே பாழாயிருக்காமே?

—கமலம்! இவங்களெல்லாம் கடத்தல்லே சம்பாதிச்சாங்க! கடத்தல் சட்ட விரோதம்! இதிலே மாட்டிக்கிட்டாங்கன்னா யாரு என்ன செய்ய முடியும்?

—யாரு எப்படிப் போனாலும் போறுங்க! எல்லாத்தையும் விட்டுத் தள்ளுங்க! நீங்க நாம்ப யார் விஷயத்திலேயும் போக வேண்டாம். யார் விரோதத்தையும் சம்பாதிக்க வேண்டாம். நாம்ப இதுவரை சம்பாதிச்சது போதும்.

—எவ்வளவு சம்பாதிச்சிட்டோம், நீ போதும்கிறே கமலம்?

—ஒண்ணு இருக்குமா?

—ஒண்ணரை! இன்னும் ஒரு ஒண்ணரை சம்பாதிப்போம். ஊரைவிட்டே போய்விடுவோம்.

—உங்களுக்கு இந்த ஆசை மட்டும் விடாது!



அன்று பகல் முழுவதும் வெளியே போகவில்லை. போனால் ஏதாவது நடந்து விடும் என்று ஒரு நெருடல் இருந்தது. தூங்க முயன்றான். கனவுகள் கியூவில் வந்தன.

சம்மட்டியால் யாரோ தலையில் அடிக்க, கண்ணில் தீப்பொறி தெற, திடுக்கிட்டு எழுந்தான். மணி ஆறு. யாரோ தட்டறாங்களே.

சோம்பலைக் கழட்டிப் போட்டு, பாதி வேட்டி கட்டி, முதல் மாடிப் படியில் நின்றபோது . . . . .

கீழே கதவு திறந்தது. அதன் நீண்ட சதுர வெளிச்சத்தில் காசி நின்றான்.

குரு கண்ணைக் கசக்கினான்.

—நான்தாண்டா என்றான் காசி.

அந்த 'டா' கத்திபோல் செருகியது.

—நீ உருப்புடுவியாடா?

சமையல் கட்டிலிருந்து கமலம் வந்து வாசலைப் பார்த்து மேலே அவனையும் பார்த்து ஆச்சரியக்குறியோடு நின்றாள்.

—பாவி! ஊரிலே இருக்கிற ஜனங்களை எல்லாம் கெடுத்திட்டே! குடும்பங் களைப் பாழடிச்சுட்டே! பாண்டித் தெருலே போய்ப் பார்த்தியா? அவனவன் தட்டு முட்டுச் சாமான்லாம் வித்துட்டுப் போய்ட்டாண்டா, பாவி!

'பளீர் பளீர்' என்று வார்த்தைகள் வந்தன. குரு வியர்த்தான்.

—என்னை ஏம்பா திட்டறே?

—கேள்வியா கேட்கிறே! மனசைத் தொட்டுப் பாருடா, எதுக்குத் திட்ட றேன்னு தெரியும்! ஊரிலே ஜனங்களுக்கு வேறெ பொழைப்புக் கிடையாதுடா! நிலம் கிடையாது, நீச்சு கிடையாது. சர்க்கார் உதவி கிடையாது. கள்ளக் கடத்தல் பண்ணறாங்க! பொழைக்கிறாங்க! நாட்டிலே எல்லாரும் நேர்மையிலே வாழறாங்களா? அவனவன் லஞ்சம் வாங்கறான்! ஏமாத்தறான்! கொள்ளையடிக்கிறான்! கலப்படம் செய்யறான்! பணம் சம்பாதிக்கிறான். கடத்தல்லே நீ என்னடா தப்பு கண்டு புடிச்சுட்டே? தெரியும்டா! என்னை நீ கண்ணி போட்டுட்டு வந்தே! காண்பிச்சுக் குடுத்திட்டே! இந்த ஒரு கப்பல் சரக்குக்கு என் பெண்டாட்டி தாலியையெல்லாம் கழட்டிப் பணம் வாங்கினேன்டா, பாவி! வீட்டிலே நகை, கிகை, பாத்திரம், பண்டம் எல்லாம் போட்டு லட்ச ரூபாய்ச் சரக்கை வரவழைச்சேண்டா! ஒரு நொடியிலே காட்டிக் கொடுத்து என் வாழ்க்கையைப் பாழாக்கிட்டியே! என் ஆஸ்தியே போச்சேடா! இனிமே என்னாலே தலை எடுக்க முடியுமாடா? பெண்ணுக்குக் கல்யாணம் கட்ட முடியுமாடா? என்னைக் காசுக்கு எவனாச்சியும் மதிப்பானாடா? என் சந்தோஷத்தை இப்படி ஒரு நொடியிலே பிடுங்கிட்டே! உருப்படுவியா...? இதெ பாரு.....

அவன் கத்தியை உறுவினான். ரெண்டு முறை அது பளபளப்பு காட்டியது. வாயை 'ஆ' என்று திறந்த கமலம், உள்ளே உதறிக் கொண்டு போனாள். பின்னால் ஒரு படி ஏறினான் குரு.

—'டேய்' பயந்தாங்கொள்ளி! ஓடாதே! உன்னை நான் தண்டிக்க வேண்டாம்! கடவுள் தண்டிப்பார்! டேய்! என்னை ஒழிச்சுட்டேன்னு பார்க்காதே! என் பின்னாலே மூணு பேர் இருக்காங்க! உன்னைப் பார்த்துப்பாங்க!

இரண்டே இரண்டு நிமிஷத்தில் முடிந்து விட்டது. கத்தியைத் தன் விலாவில் செருகி, அதே வேகமாக வயிற்றில் நெடுக்காகவும் இழுத்து விட்டான். பிறகு வலியைக் கூவாமல் மடிந்து கீழே சம்மணமிட்டுச் சரிந்து விழுந்தான். இந்த ஜப்பானியத் தற்கொலை முறை அவனுக்கு எப்படித் தெரிந்தது, தெரியவில்லை. குரு அதிர்ந்தான்.

கீர்ச்சை பூஜிப்பவர்கள் இருக்கிறார்கள். 'பூ'வென்று தள்ளுபவர்கள் இருக்கிறார்கள்.

இவை இரண்டுக்கும் நடுப்பட்ட நிலைகளில்தான் மற்ற எல்லோரும்!

குரு ஒரு தனி பிரகிருதி!

ஆரம்பத்தில் காசின் மேல் ஒரு கரிசனம்!

போகப் போக அது பெரும் பற்றாக வளர்ந்து இப்போது ஒரு பித்து!

இவ்வளவுக்கும் ஒரு வெண்ணெய் வியாபாரியாக ஆரம்பித்தது அவன் வாழ்க்கை.

வெண்ணெயுடன், பின்னல் வற்றல், அப்பளாமும், ஊதுவத்தி, சந்தனங்களும் சேர்ந்து கொண்டன.

ஐம்பது மைல் தொலைவிலிருந்த பெரு நகரிலிருந்து ஹோல்ஸேல் ரேட்டுக்கு வாங்கி வந்து இந்த நகரின் கடைகளுக்கு அப்படியே தள்ளுவது அவன் வழக்கம்.

வாரத்திற்கு மூன்று நாள் ஆர். டி. எம். பஸ் சர்வீசில் மூன்று பெரிய மூட்டைகளையும், ஒரு பெரிய வெண்ணெய் டின்னையும் வைத்துக் கொண்டு, பேருந்து நிலையத்தில் அனல் பறக்கும் சூட்டில் வந்து இறங்குவான்.

அங்கிருந்து கூலியோ வண்டியோ வைத்துக் கொள்ளாமல் இரண்டு மைல் தொலைவில் நகரத்தின் மறு ஓரத்தில் இருக்கும் வீட்டுக்கு அவற்றைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வருவான்.

அந்த நாளில் கமலம்—ஏன் இப்படித் தூக்கிட்டு வரீங்க? கூலி வச்சுக்கக் கூடாதா என்று கேட்பாள்.

—நீ ஒண்ணு! எட்டணு கேப்பாண்டி, எட்டணு! என்று எட்டணுவைவிட விழியைப் பெரிதாகக் காட்டுவான்.



ருஷ்யாவில் எங்கு திரும்பினாலும் லெனினுடைய சிலைகளைத்தான் காண முடியும். அந்த அளவுக்கு அவரை நாடு போற்றுவதற்குக் காரணம், அவரது தாய் தான். லெனின் இளமைப் பருவத்தில் அவரது எதிரிலேயே அவருடைய தாய் ஜார் மன்னரால் சுட்டுக் கொல்லப்பட்டார். 'என் தாயைப் போன்று நாட்டிலுள்ள தாய்மார்கள் சுட்டுக் கொல்லப்படாமலிருக்க, ஜாரின் கொடுங்கோலாட்சி ஒழிக்கப்பட வேண்டும்' என்று சூளுரைத்தார். அதன் விளைவு தான் ருஷ்யப் புரட்சி.

— கே. எஸ். தயாளன்

கமலம் வந்தபோது வெறும் அழகை மட்டும்தான் கொண்டு வந்தாள்.

அவ்வளவு பெரும் அழகை அவன் எதிர்பார்த்தவனல்ல.

கடவுள் தனக்குத் தந்த அதிசய பொக்கிஷம் என்று நம்பினான்.

கமலம் எழுந்தாளா, சாப்பிட்டாளா, குளித்தாளா, தூங்கினாளா என்று அவளது எல்லா நடவடிக்கையிலும் அக்கறை செலுத்தி அவள் வாழ்க்கையுடன் விரவி நின்றான்.

அவனது ஒரே பொழுதுபோக்கு அவள்தான்!

அதைத் தேடித்தான் தினமும் வேட்கையுடன் ஓடி வருவான்.

—கமலம்! நீ தினமும் எனக்குப் புதுப் பெண்ணாகத் தோன்றுகிறாய் என்று கூறுவான்.

அதை அவள் ஆரம்பத்தில் மிகையாக நினைத்தாள்.

ஆனால் போகப் போக மிகையல்ல என்று தெரிந்தது.

ஒவ்வோர் இரவும் அந்த நித்தியச் சடங்கிற்காக வரும்போது அவனிடம் காணும் புதிய வேகத்தைப் பார்த்தால்.....முதல் இரவில் இருந்த ஆர்வம் எத்தனை வருடங்களாகியும் இம்மியும் குறையவில்லை என்று தெரிந்தது. அவளுக்கு அதில் பெருமிதம்.

பணமும் கமலமும் இப்படி ஒரே தராசில் இருக்க, சமீப காலத்தில் பணத்தின் இழுப்பு அதிகமாகி விட்டது. காரணம், பணம் பறிக்கும் புது வழி தெரிந்து விட்டது — யதேச்சையாக. ஸ்மக்ளர் என்று இன்ஸ்பெக்டர் ஒருவர் அவனை அரெஸ்ட் செய்தார். அப்போது குரு தான் நிரபராதி என்று நிரூபித்ததுடன் இன்ஸ்பெக்டர் தேடும் கள்ளச் சரக்கு எந்த இடத்தில் இருக்கிறது என்பதற்கான சிறு துப்பையும் கொடுத்து விட்டான்.

அது பலித்ததும் அவனுக்கும் இன்ஸ்பெக்டருக்கும் ஒரு நிரந்தர சிநேகிதம் தொடர ஆரம்பித்தது.

கடத்தல் பொருள்கள் எங்கே வருகின்றன, யார் யாருக்குப் போகின்றன, யார் கிடங்கில் இருக்கின்றன என்பன போன்ற விஷயங்களுக்கு இன்ஸ்பெக்டர் அடிக்கடி குருவை அணுகத் தொடங்கினார்.

அவனுக்கும் இந்த விஷயங்களில் ஓர் ஆர்வம் ஏற்பட்டது.

எப்படியாவது விசாரித்து அறிந்து இன்ஸ்பெக்டருக்கு விஷயங்களைக் கொடுக்க ஆரம்பித்தான்.

அதில் அவனது ஆர்வம் பின்னர் ஒரு வெறியாகவே வளர ஆரம்பித்தது.

இவ்விதம் ஒரு இன்ஃபார்மராக மாறிய பிறகு, பணம் நூறுகளில் வர ஆரம்பித்தது.

அது வளர்ந்து ஆயிரங்களுக்குப் போய்விடவே, அவள் இரண்டாமவளாகப் போய்விட்டாள்.

பணம் அவன் முதல் மனைவி!

பணம் அவனுக்கு ஒரு அப்ஸெஷன்!

ஒரு தணியாத தாகம்!

இந்தப் பற்று விருட்சமாக வளர்ந்தால்கூடப் பரவாயில்லை. விஷ விருட்சமாக வளர்ந்து விட்டது.

கடத்தல்காரர்களைத் தேடுவதிலும், காட்டிக் கொடுப்பதிலும் அவனுக்குப் பெரிய உத்வேகம் வந்து விட்டது.

அதற்காக வேண்டிய துப்பு அறிவதில் அவனது பெரும்பான்மை நேரமும் ஓடியது.

போகப் போக அவனது துப்புகளால் கடத்தலில் ஈடுபட்டோர் சட்டத்திடம் சிக்கிக் கொண்டு அவஸ்தைப்படுவதையும் அவன் ரசிக்க ஆரம்பித்தான்.

அவர்களது குடும்பங்கள் தலைவனை இழந்து அல்லாடுவதையும், படிப்படியாகத் தரித்திர நிலைக்குப் போவதையும் வெகுவாக ரசித்தான்.

இப்படித் தரித்திர நிலைக்குப் போகும் குடும்பங்கள் தங்கள் பொருள்களை யெல்லாம் விற்க முன் வரும்போது, அவற்றை மிகவும் குறைந்த விலைக்கு வாங்கிச் சேகரம் பண்ணுவதை ஒரு பெரும் ஆசையாகக் கொள்ளத் தொடங்கினான்.

இவ்விதம் அவனுக்கு மற்றொரு வருமானம் பெருகிக்கொண்டே போனது.

ஒரு லட்சம் ஆனால் திருப்திப்படுவேன் என்று நினைத்தவன், இப்போது ஒன்றரை யானாலும் திருப்திப்படவில்லை.

லட்சியம் இப்போது மேலே ஏறிக் கொண்டது.

கமலத்தை அரும்பாடுபட்டு ஆசுவாசப்படுத்தி, லாங் பஜார் லட்சுமி லாட்ஜ் அறையில் விட்டுவிட்டு, ஒரு தாற்காலிக நிம்மதியுடன் இன்ஸ்பெக்டர் வீட்டை நோக்கிப் போனபோது இரவு எட்டு மணி!

சீமை ஓட்டு வீட்டுக்குள் இன்ஸ்பெக்டர் இருந்தார். சாப்பிட்ட விச்ராந்தி. பனியனில் இளம் தொந்தியும் மிகையான இரண்டு மார்புகளும் தெரிந்தன.

—ஸார்.

—யாரு?

தாழ்வாரத்தைத் தாண்டிய லேசு வெளிச்சத்தில் குரு உற்பத்தியானான்.

—என்ன சமாசாரம்? என்றார்.

—காசி தற்கொலை பண்ணிக்கிட்டான் ஸார்.

பேப்பரைக் கீழே போட்டார்—எப்போ?

—அரை மணி முன்னால்! நம்ம வீட்டிலேதான் ஸார்!

அவன் நடந்ததை விவரித்தான்!

இன்ஸ்பெக்டர் ஏமாற்றமாயிருந்தார். — அவனைப் பிடிச்சா எல்லாரையும் பிடிக்கலாம்னு பார்த்தேனே என்றார்.

—நம்ப வீட்டிலே வந்து செத்துட்டான் ஸார். அதான் என் கவலை.

—அது ஒரு பிரச்னைதான்! நீ ஒண்ணு செய்யி! உடம்பை அப்புறப்படுத்திடு! இல்லாட்டி உம் மேலே அனாவசிய சந்தேகம் வரும்.

—எங்கே அப்புறப்படுத்தணும் ஸார்?

—தோட்டிக்குளம் இருக்கு பாரு! அங்கே புதர்லே போட்டுடு. நாளைக்குக் காலை யிலே நாங்க அங்கே உடல் கிடந்ததா ரிப்போர்ட் எழுதிக்கிறோம்.

—எப்படி ஸார் அங்கே கொண்டு போறது?

—இரண்டு ஆளை வச்சுக்க! காரியத்தை முடி!

—ஊரிலே தெரிஞ்சுதுன்னு?

—மிஸ்டர்! இப்போ எமர்ஜென்ஸி! யாரும் வாலாட்ட முடியாது, தெரியுமில்லே?

—ஒரு விஷயம், ஸார்!

—சொல்லு!

—யாரோ மூணு பேர் அவன் பின்னுலே இருக்கிறதா சொன்னுன் ஸார்.

—மூணு பேரா?

மேஜையை ஒற்றை விரலால் தட்டினுர். சிந்திப்பதைப் பெரிய டிராமா வாக்கி மோட்டைப் பார்த்தார். யார் அவுங்க?

—அதான் தெரியலீங்களே!

—எல்லா கடத்தல் ஆசாமிகளையும் பிடிச்சாச்சுனு நினைச்சேன்.

—இல்லே ஸார்! அவன் சொன்னதை நம்பறேன். இன்னும் மூணு ஆசாமி நிச்சயம் இருக்கணும். அவங்க வெளியிலே இருக்கிற வரைக்கும் எனக்கு ஆபத்து தாங்க!

> ஸ்வீடனில் ஆயிரக்கணக்கான வீடுகளில் டெலிவிஷன்கள் சீல் வைக்கப்பட்டன. திடீரென்று இப்படிச் செய்யக் காரணம்? மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து டெலிவிஷன் லைசென்ஸ் கட்டணத்தைக் கட்டாததுதான். அதற்குக் காரணம்? டெலிவிஷன் திருவனத்தின் மீதான கோபம். 'வெறும் செக்ஸ், சண்டைக் காட்சிகளையே பார்த்துப் பார்த்து அலுத்துவிட்டது. நிகழ்ச்சிகளை மாற்ற வேண்டும்' என்பது அவர்களது கோரிக்கை. பிறகு அதற்கேற்ப நிகழ்ச்சிகளில் சில மாற்றங்கள் செய்ய ஆரம்பித்தது டெலிவிஷன் நிறுவனம்.
>
> —டைம் - ராமுசாமி

—சரி, அவங்களைக் கவனிப்போம்!

ராத்திரி ஒன்பது மணிக்கு மேல் நாட்டார் தொட்டியிலிருந்து ஒரு கட்டை வண்டியை வாடகைக்கு வாங்கி வந்தான். மூன்று சாக்குகளைப் பலசரக்கு மண்டியில் வாங்கினுன்.

வீட்டின் கதவைத் திறந்தான்.

இரத்தம் வீச்சம் அடித்தது. காசி வலியில் ஒருக்களித்திருந்தான். முகத்தில் கோபம் அப்படியே.

கீழே கோணியை விரித்து அந்த உடம்பை ஒரு கட்டையால் தள்ளினுன்.

நகரம் விளக்கை அணைத்துவிட்டுத் தூங்க ஆரம்பித்திருந்தது.

கம்ப வெளிச்சம் பத்தடி வட்டத்துக்கு மட்டும் ஏழைத்தனமாக தூவியிருக்க..

கட்டை வண்டியில் அந்த மூட்டையை ஏற்றி, உறங்கும் ரஸ்தாவை ஓசையுடன் எழுப்பிக் கொண்டு தோட்டிக்குளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

லட்சுமி வாட்ஜுக்கு ராத்திரி பதினுெரு மணிக்கு வந்தபோது கமலம் இன்னும் தவித்துக் கொண்டிருந்தாள். பயம் எலும்புக் குருத்து வரை ஓடி இருந்தது. முதலில் தான் செய்ததையெல்லாம்—வண்டி கொண்டு வந்தது, உடலை அப்புறப்படுத்தியது, ரத்தத்தைக் கழுவியது — சொல்லலாம் என்று நினைத்தான். அவளுக்கு மேலும் புளியைக் கரைக்கும்—எல்லாத்தையும் செய்து முடிச்சு, வீட்டைச் சுத்தம் பண்ணிட்டேன் என்று இரண்டே வாக்கியத்தில் நிறுத்தினுன்.

அவள் முகத்தில் பீதி உறைந்திருந்தது. சரியாக மூச்சு இல்லை. கண்களில் பூச்சாண்டிகள் வந்து போனுர்கள். அவனையே அவள் நம்ப மாட்டாள் போலிருந்தது.

— ஒண்ணு சொல்றேன், கமலம்! கொஞ்ச நாளைக்கு இந்த ஊரிலே இருக்கக் கூடாது! உங்க சித்தப்பா வீட்டிலே கொண்டு விட்டுடறேன். விஜயாவை நீ பார்த்த மாதிரியும் இருக்கும்!

— நீங்களும் வாங்க!

— ஜோலி இருக்கு! முடிச்சுட்டு ரெண்டு நாளிலே வந்துடறேன்.

— நிச்சயமா?

— நிச்சயம்.

நிம்மதியாகப் படுக்க விட்டான். மேலே அவளை இழுத்து அடை காத்தான். விரல் தொடுவது போல் ஒரு மார்பின் நுனி அவனைத் தொட்டது. நீ என்று சுட்டிக் காட்டுவது போல் ஒரு கற்பனை! லேசாகப் புன்னகை! அப்பா! என்ன பாடுபடுத்திவிட்டாள்! என்ன சமாதானம் செய்தும் கேட்கவில்லை. கடைசியில் — லாட்ஜிலே தங்கிடலாம், இங்கே இருக்க வேண்டாம் என்று சொன்ன பிறகு தான் தணிய ஆரம்பித்தாள். அன்றைய ராத்திரியை நினைத்தாலே....

காலையில் எட்டரைக்கு பஸ் ஸ்டாண்டில் நின்றார்கள். மேற்கே போகும் பஸ்! அது அவளை எடுத்துக் கொண்டு, பின்புறத்து அழுக்கு நம்பர் பிளேட்டைக் கடைசியாகக் காட்டிக் கொண்டு டாட்டா சொன்னது.





மாலையில் பேப்பர் வாங்கினான். தேசிய நாளிதழ் அக்கப்போர்களைச் சுடச்சுட அச்சடித் திருந்தது. இரண்டாம் பக்கத்தைப் பிரித்தான். கீழே டபுள் - காலம் தலைப்பில் 'கடத்தல்காரர் தற்கொலை' பண்ணியிருந்தார்.

— பிப். 7. இன்று காலை ரப்புக்குளம் புதர் ஒன்றில் என்பவரது உடல் கண்டு க்கப்பட்டது. கத்தியால் ர் தம்மைக் குத்திக்கொண்டு கொலை பண்ணிக் கொண் என்று நம்பப்படுகிறது. முந்திய நாள் அவரது கடத்தல் சரக்குகள் போலீஸாரிடம் அகப்பட்டதே இந்தத் தற்கொலைக்குக் காரணம் என்று போலீசார் சொன்னார்கள்.... உடல் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது.

ஒரு கவலை மறைந்தது. இன்ஸ்பெக்டர் சொன்னபடி செய்து விட்டார். ஓட்டலுக்குப் போய் சாப்பிட்டான். வெளியே வந்தான்.

கால், பாண்டித் தெருவுக்கு இழுத்தது.

தெருவின் முனையிலிருந்து நடந்தான், மெள்ள மெள்ள. அடேயப்பா! என்ன களேபரம் பண்ணினாங்க! தெருவுக்குள்ளே நுழைஞ்சா ரேடியோச் சத்தம்! பாட்டுச் சத்தம்! லதா இருபத்தினாலு மணி நேரமும் இந்தத் தெருவிலே பாடுவா. வெஸ்டர்ன் மியூசிக் வேறே! காது ஓட்டையாயிடும்.

அப்புறம் இந்தப் பசங்க வருவாங்களே, பார்க்கணுமே! பாலியிஸ்டர் மயம்! முரட்டுக் கலர்கள்! சிங்கப்பூர் டேஸ்ட்! ஒவ்வொருத்தன் கையிலும்

முட்டைபோல முழிக்கிற மோதிரம்! முழங்கையில் இருட்டு வாட்ச்சுகள்! கிறிஸ்டலில் நேரம் சொல்லுபவை! செருப்புகூட கப்பலில் வந்தாத்தான் ஆச்சா? அடேயப்பா! என்ன தினுசுங்க!

இப்போ......

தெருவிலே ஈ காக்கை ஆடணுமே! மனிதர்கள்- கிழிசல் ஆடைகளில் வந்தார்கள். குழந்தைகள் உள்ளூர் கமர்கட்டைச் சாப்பிட்டன. சங்கீதங்கள் போன இடம் தெரியவில்லை. அநேக வீடுகள் தவிட்டுக்கு விலை போயிருந்தன. கார் நின்ற வாசல்களில் இப்போது அடுப்புக் கட்டைகள் காய்ந்து கொண்டிருந்தன.

கடைசிவரை பார்த்து விட்டான். ஒரு தெரு அழிந்து கைம்பெண் ஆனதில் ஒரே திருப்தி!

அடுத்த தெரு தேர்க்கால் தெரு!

அந்த வழியில் போகும்போது, அந்தத் தேரின் மிதுனச் சிற்பங்கள் அவன் கடைக்கண்ணுக்கு ஒரு சுவாரஸ்யமான தீனி.

கடைக்கணித்தான்.

தேர்க்கால் இருட்டுக்கு இன்னொரு துண்டு இருட்டு இருந்தது. முதலில் பொருட்படுத்தவில்லை! ஆனால் பிடரி 'குறுகுறு'வென்று நோண்ட, தலைக்குள் ஒரு சிவப்பு விளக்கு எரிந்தது.

—யாரோ கவனிக்கிறாங்கடா!

திரும்பிப் பார்த்தான். இப்போது துண்டு நிழல் இல்லை. 'சரசர'வென்று அடுத்த சந்தில் நுழைந்தான்.

அறுபது செகண்ட் நின்றுவிட்டு, திடீர்ப் பாய்ச்சலில் தேர்க்கால் தெருவுக்கே வந்தான். நினைத்தது வீண் ஆகவில்லை.

தெருக்குப் பின்னாலிருந்து ஓர் ஆசாமி வெளி வந்திருந்தான். குருவைப் பார்த்து அசந்துவிட்டு, எதிர் சாரி ஓரமாக 'சரசர'வென்று ஒரு சாரைப் பாம்பு போல் நெளிந்து போனான்.

யார் இவன்?

மூளையைக் குடைந்தான். ஞாபகமில்லை.

வீட்டுக்கு வந்தான். கூடத்தில் காசியின் நெடி! அவனது கோபமான முகம் ஒரு பயங்கர கிராம தேவதை போல்........

வீட்டை மாற்றி விடுவோமா?

இவ்வளவு குறைந்த வாடகையில், ஒரு வீடு கிடைக்குமா?

இன்னும் ஒன்றரை சேர்த்தால் போதும், வீட்டை என்ன, ஊரையே விட்டு விடலாம்.

யார் அவன்?

கடத்தல்காரனா?

....சட்டென்று ஒரு கதவு மூளையில் திறந்தது. ஒரு 16 எம் எம் காட்சி அதில் சின்னதாக ஓடியது. எட்டு மாதங்களுக்கு முன்பாக கே. டி. எம். பஸ்ஸில் காசியுடன் அந்த ஆசாமி... பஸ் இறங்கினவுடன் பாலுசாமி என்று கூப்பிட்டது... இருவரும் அனாவசிய அவசரத்துடன் தனியாகப் பிரிந்து போனது....

அடுத்த நிமிடத்தில் குரு கதவைப் பூட்டினான். வெளியே தாவினான்.

இன்ஸ்பெக்டர் சல்லாபித்துக் கொண்டிருந்தார். மனைவிக்கு அழகு கிடையாது. கட்டுமஸ்தான உடம்பு! நாட்டிலிருந்து விளைந்தவள்!

புருஷனும் பெண்டாட்டியும் முதலில் ஊருக்கு வந்தபோது வேறிச்சோடியிருந்தார்கள். இப்போது அம்மா பேரிலெல்லாம் தங்கம் பூத்து விட்டது. இன்ஸ்பெக்டருக்குச் சதை.

அவனைப் பார்த்ததும் பேச்சை வெட்டி ஓடி வந்தார்.

— பேப்பர் ரிப்போர்ட்டைப் பார்த்தியா, குரு? ஸூயிஸைட்னு ஒதுக்கிட்டோம்.

— பார்த்தேன். இப்போ இன்னொரு விஷயம், ஸார்!

— சொல்லு!

காலையில் பிரசவத்துக்காக மனைவியை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்த அந்த மனிதர் பிற்பகல் ஆஸ்பத்திரிக்கு போன் செய்து ''என் மனைவிக்கு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார். ''ஆண் குழந்தை பிறந்திருக்கிறது'' என்று சொன்னாள் நர்ஸ்.

''அப்படியா! செகண்ட் டெலிவரிக்கு அப்புறம் வந்து பார்க்கிறேன்'' என்றார் அவர்.

நர்ஸுக்கு ஒரே குழப்பம்..

''இப்போதுதானே முதல் டெலிவரி ஆகியிருக்கிறது!'' என்றாள்.

''நான் ஒரு போஸ்ட் மேன்'' என்று பதில் வந்தது!

-ஸரோ

— காசியோட கூட்டாளி தெரிஞ்சு போச்சு.

— மூணு பேருமா?

— இல்லே; ஒருத்தன்! அவன் பேரு பாலுசாமி! உடம்பு நடுத்தரம்! பழைய ஆக்ஸ்போர்ட் கிராப்பு! நெத்தி ரெண்டு பக்கமும் வழுக்கை. புஷ் மீசை! நாப்பது வயசிருக்கும்!

— எங்கிருக்கான்?

— எடந்தான் தெரியாது. அதனாலே தான் அடையாளம் சொன்னேன்.

இன்ஸ். யோசித்தார்—பேரு என்ன சொன்னே?

— பாலுசாமி!

இன்னமும் யோசித்தார்.

— உடனே பிடிச்சுடுங்க ஸார்! இல்லாட்டி ஆபத்து!

— உம்மேலே ஒருத்தன் கை வைக்க முடியாது போ! ஆளை சாயங்காலத்துக்குள்ளே புடிச்சுடறேன்! கவர்ன்மெண்டுக்கு எழுதிட்டேன். அவார்ட் வர மூணு மாசம் ஆகும்.

— இருக்கட்டும்! பணம் எங்கே போகுது, ஸார்?

இரண்டு நாள் ஒதுங்கி இருந்தான்.

பிறகு வளைக்குள் இருக்கும் எலியைப் புகை தள்ளுவது போல், அவன் நினைப்பின் சூடு அவனை விரட்டியது. பாலுசாமி வெளியில் சுற்றிக் கொண்டு வர, அவனால் வீட்டுள் நிம்மதியாக இருக்க முடியாது.

வழக்கமாகக் காலையில் இன்ஸ்பெக்டரைச் சந்திப்பது கிடையாது. வெளிச்சம் அவனுக்குப் பிடிக்காது. ஆனால் இன்று ஏழு ஏ. எம்-முக்கு அங்கே இருந்தான்.

— உன்னைத்தான் பார்த்துட்டிருக்கேன், குரு! ஆளைப் பிடிச்சுட்டோம்.

—எப்போ, ஸார்?

— நேத்தி காலைல!

— என்ன சொல்றான்?

— சொல்லுவானா? குறச்சாதனே! இதுவரைக்கும் ஒரு வார்த்தை கழலலெல்ல. ஆம்மாம்! டவுன்லே நாலைஞ்சு பாலுசாமி இருக்காங்களாமே?

— தெரியாது, ஸார்!

— அதான் சந்தேகம்! நீ வந்து அடையாளம் சொன்னா சரியா இருக்கும்!

— எங்கே ஸார் வரணும்? ஸ்டேஷனுக்கா?

— நோ நோ. அங்கெல்லாம் வச்சுப்போமா? வேலங்காட்டிலே இன்ஸ்பெக்ஷன் பங்களா ஒண்ணு இருக்கு. ராத்திரி ஒன்பது மணிக்கு வந்துடு. டி.எஸ்.பி. எல்லாம் வராங்க.

— ஆட்டுங்க!

விநோதமாக இருந்தது. காட்டு பங்களா! ராத்திரி ஒன்பது மணி!

என்ன விஷயமா இருக்கும்? பெரீசா எதையேன் நோண்டப் போறாங்களா?

இன்ஸ்பெக்டர் எமகாதகன். துட்டு ருசியை அறிஞ்சுக்கிட்டார். எப்படியாவது, எங்கிருந்தாவது பணம் வந்தால் தேவலைதான்! கடத்தல் உலகம் அதற்கு வழியாக இருந்தது. தங்கச் சுரங்கங்களைத் திறந்திருந்தது. வேறே வழிகளிலே போனா தங்கத்தைச் சுரண்டலாம்! இங்கே பாளம் பாளமாக வெட்டலாம்.

வேலங்காடு அனாதையாக இருந்தது. டவுனுக்கும் கடலுக்கும் குறுக்கா இருந்தது.

ஒன்பது மணிக்கு இருட்டு திண்ணமாக உட்கார்ந்திருந்தது. அந்தக் கச்சா சாலையைக் கண்ணால் பிடித்துக்கொண்டு போனான். அது வேண்டாத வளைவு வளைந்து கடைசியில் 'முனுக்' வெளிச்சங்கள் முன்பாகக் கொண்டு விட்டது.

பெரியதும் சிறியதுமாய் போலீஸ் வண்டிகள் தாறுமாறாகச் சிதறிக் கிடக்க,

காட்டைச் சிறிது ஒதுக்கு இடம் பண்ணிக் கொண்டு ஒரு சின்ன பங்களா, மூங்கில் தட்டி, கடப்பைக்கல் சகிதமாக நின்று கொண்டிருந்தது.

உள்ளே முட்டை பல்புகள் பலவீனமாக எரிந்து கொண்டிருந்தன.

ஒரு சரபோஜி மீசைக்காரர் வழிமறித்தார்.

— இன்ஸ்பெக்டர் சீதாபதி வரச் சொன்னார்.

நிற்க வைத்தான். உள்ளே போனான். சீதாபதி வந்தார். மஃ உடையில் இருந்தார். கக்கத்தையும் முதுகையும் வியர்வை கறுப்பாக்கியிருந்தது.

— வா, இப்படிப் போலாம்.

பங்களாவை அப்பிரதட்சிணமாகச் சுற்றிப் பின்னால் ஓர் அறைக்குள் ஏற்றினார். சாமான் அறையா? எலி வாசனை. இருட்டாக இருந்தது.

உள்ளே வந்த அந்தக் கணத்தில் ஓர் உணர்ச்சி அவனை மூடியது.

பங்களா கப்சிப் என்று சப்தமில்லாமல் இருந்தது. ஆனால் அது உண்டாக்கப் பட்ட நிசப்தம் என்று தெரிந்தது.

எத்தனையோ பேர், அவன் நினைப்பதற்கும் மேலாக எத்தனையோ ஆட்கள், அந்த பங்களாவுள் இருந்து கொண்டு ஏதோ ஒரு காரணத்திற்காக நிசப்தம் காத்துக் கொண்டிருந்தார்கள்.

காற்றிலேயே ஒரு மர்மம் வீசியது.

— இதப் பாரு என்றார் இன்ஸ்பெக்டர். ஒரு சன்னலை ஒரு விரலால் லேசாக அவர் திறந்திருக்க கீறிவிட்ட கோடுபோல் வெளிச்சம் தெரிந்தது — இங்கே வந்து பாரு.

பார்த்தான்.

படக்கென்று முகம் பின்னுக்குப் போனது. இன்ஸ்பெக்டர் அவனது ரியாக்ஷனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த இடுக்கு வழியாக வெளிச்சமான ஹால் தெரிந்தது. அதில் பனியன் போட்ட நாலைந்து முண்டாக்கள் நின்று கொண்டிருந்தார்கள். தேகத்தையும் பனியனையும் பார்த்தால் போலீஸ்தான்!

நடுவே பெரிய வட்ட மேஜை! அந்த நாளில் வெள்ளைக்காரன் அழகுக்கும் வேலைக்கும் உபயோகித்திருப்பான்.

அதில் ஓர் ஆளைக் கிடத்தியிருந்தார்கள்.

நிர்வாணம்.

அவன் மூக்கிலிருந்து கரு நீலமாய் ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. உடம்பு முழுவதும் வியர்வை. குப்புற வைத்திருந்தார்கள். ஆசன மேடுகளில் ஒன்று சிதைந்திருந்தது. அந்தப் பகுதிகள் ரணமாகியிருந்தன.

குரு கண்ணை மூடினான்.

— இவன்தானா? என்றார் இன்ஸ்பெக்டர்.

ஆமாம்! ஆமாம்! சீதாபதி உள்ளே போனார். சில கணங்களில் ஒரு அமானுஷ்ய சத்தம் ஹாலிலிருந்து குபீரென்று வெளியே பாய்ந்து காட்டுக்குள் எங்கோ போய் செருகிக் கொண்டது.

ஒரு மிருகம் சுத்தமாக வதை படும் சப்தம்!

என்ன பயங்கரமாக ஒலித்தது!

குலை நடுங்கியது.

பெரிய இறக்கைகளை விரித்து அந்த பங்களாவுக்குள்ளேயே அடித்துக் கொண் டிருப்பது போல அதன் பயங்கரம் அங்கேயே எதிரொலித்துக் கொண்டிருந்தது.

குருவுக்குக் குடல் உள்ளே போய்விட்டுத் திரும்பியது. கண்ணில் ஜலம் வந்துவிட்டது.

— இவன்தானு? என்றார் இன்ஸ்பெக்டர்.

— ஆமாம், ஸார்! அவனை என்ன பண்ணறுங்க?

— உண்மையைச் சொல்ல மாட்டேங்கறுன். சொல்ல வைக்கிறுங்க.

—எப்படி?

— இப்போ ஆசன வாயிலே வத்திக் கம்பை குத்தினுங்க பார்க்கலையா?

— பார்த்தேன். உடம்பு நடுங்கறதே, ஸார்!

செய்ததெல்லாம் பொடி வேலைகள் என்றும் இனிமேல்தான் பெரிய வேலைகள் நடக்கப் போகின்றன.

இன்டெர்வெல்லுக்குப் பிறகு புதுக் காட்சி துவங்கியது.

பாலுசாமியின் கைகளைப் பின்னல் கட்டி மேலேயிருந்து ஏரோப்ளேன் போல் தொங்க விட்டார்கள்.

— சொல்லுடா! சொல்லு! உன் கூட்டாளி யாரு? தொந்தி குலுங்க அதட்டினர் காக்கி அதிகாரி.

பாலுசாமி முனகினன். தெளிவில்லை. வாயிலிருந்து உமிழ்நீர் கம்பிகள் வழிந்தன. முகத்தில் வெளிச்சம் போய்விட்டது. இபக்கங்களை மறந்ததுபோல் தசைகளும் கண்களும் தொங்கின. பல்லைக் கடித்து—'அம்மா அம்மா' என்று சொல்லி உபாதைகளை உள்ளுக்குள்ளேயே நிரவிக் கொண்டிருந்தான்.

வத்தியால் குதிக்காலை அடித்தார்கள். மெழுகுவத்தியால் சன்னமான தோல்களைச் சுட்டார்கள்.

எல்லாவற்றுக்கும் — 'அம்மா அம்மா' என்று ஒரு முனுப்பு! பல்லைக் கடித்து இறுக்கு!

தவறிப் போய்க்கூட ஒரு வார்த்தை தெரிந்து விடாதபடி கட்டுப்படுத்தினன்.

வைராக்கியத்தின் முன் பலாத்காரம் திண்டாடியது.

உண்மையில் வதை செய்தவர்கள்தான் வதைபட்டார்கள்.

— சீதாபதி, என்றார் காக்கி அதிகாரி — இவன் வீட்டிலே யார் யார் இருக்காங்க?

— பெண்டாட்டி, பெண்ணு, இரண்டே பேர்.

— இழுத்துட்டு வரச் சொல்லு! இவனை ஒரு கை பார்க்கிறேன்.

வெறி வந்திருந்தது அவருக்கு.

கார் பறந்து போய் பறந்து வந்தது. ஹிஸ்டீரிகலாக அழுது கொண்டு இரண்டு பெண்கள் வந்து நின்றார்கள்.

மனைவிக்கு முப்பத்தைந்து இருக்கும். சுந்தரமாக இருந்தாள். புஷ்டியான தொடைகள்.

பெண்ணைப் பார்த்தால் அற்புதமாக இருந்தது. பதினைஞ்சு தாண்டும் குறுத்து. முகத்தில் பொடிசான பருக்கள். ஒரே ஓர் இடத்தில் அவள் பெட்டிக்கோட்டும் இடைச் சருமமும் வெளுப்பாகத் தெரிந்தது.

தாய்க்கும் பெண்ணுக்கும் உள்ளே ஹால் தெரியாதபடி நிறுத்தி, கர்ட்டனை இழுத்து விட்டிருந்தார்கள்.

— பாலுசாமி! உன் பெண்டாட்டி, பெண்ணுங்க வந்திருக்காங்க! சொல்விடறியா? அல்லது........

பல் இடுக்கியது.

அடுத்த நிகழ்ச்சி அவசரமாக நடந்தது.

தாயை அழைத்து ஒரு பணியன் அப்பால் கூட்டிப் போக, மற்றொரு பணியன் அந்தப் பதினைந்தின் அருகில் வந்து விருட்டென்று கையை வலது மார்பில் பாய்ச்சி...

— 'அம்மா அம்மா' என்று பிஞ்சு அலறல் இறக்கை அடித்துத் தத்தளிக்க,

சோளியின் கிழிசல் பணியனின் கையோடு வந்துவிட்டது.

பாலுசாமி திடுக்கிட்டான் — 'காந்தா' என்று கத்தினுன்.

— 'அப்பா' என்றுள் அவள்.

பாலுசாமியின் கண் உயிர்த்து சுற்றிப் பார்த்தது— 'அட, பாவிகளா' என்று சாபம் இட்டது.

அவன் உடம்பு நெளிந்தது.

— என்னை இறக்குங்குடா, பாவிங்களா! சொல்விடறேன் என்றான்.

இறக்கினார்கள். பெண்ணையும் அம்மாவையும் வண்டியில் கொண்டு போய் உட்கார வைத்தார்கள்.

பாலுசாமி மேஜையில் கிடந்தான். மூச்சு பெரிது பெரிதாய் வந்தது. வாயிலிருந்து ரத்தம் கசிந்தது— 'பாவிங்களா, பாவிங்களா' என்று முணு முணுத்தான்.

— சொல்லு சீக்கிரம்!

கூண்டு மிருகத்தின் பரிதாபக் கண்ணோடு பார்த்தான்.

— சொல்றேன்! சொல்றேன்.

பெருமூச்சுகளாக விட்டான். உடம்பு உலேந்து அங்கங்கே சிதறிப் போய்க் கிடந்தது.

—சொல்லு.... கூட்டாளி யாரு?

—அவன்தான். அவன்தான்! ..

(இழைத்தான்) லோகநாதன்......

— இன்னொருத்தன்?

இழைப்பு அடங்கவில்லை.

— பால......

பாதி வார்த்தையில் மூர்ச்சை ஆனான்!

கமலம் முத்து முத்தாக எழுதியிருந்தாள்.

உங்கள் ஜோலி முடிந்து விட்டதா? சித்தப்பா சந்தோஷமாக இருக்கிறார். ஆஸ்மா இப்போ வருவதில்லை. விஜயா நன்றாகப் படிக்கிறாள். பாட்டு கத்துக்கணும் என்கிறாள். காப்பிப் பொடி அலமாரியின் வலது பக்க அலுமினிய டின்னில் இருக்கிறது.......

சீக்கிரம் வந்துடுங்க! சீக்கிரம் வந்துடுங்க. இரட்டைக் கோடு போட்டு முடித்திருந்தாள்.

சீக்கிரம் போக வேண்டியதுதான்!

ஒரு விஷயத்திற்குக் காத்திருந்தான். மூன்று பேரில் ஒருத்தன் கிடைத்து விட்டான். அந்த லோகநாதனையும், பால....ஐயும் போலீஸ் வலை விரித்துத் தேடுகிறார்கள். (முழுப் பெயரையும் சொல்லிட்டு மூர்ச்சை போட்டிருக்கக் கூடாதா?)

இவர்கள் கிடைத்து விட்டால், பெரிய தொகை கிடைக்கும்! அவார்டுகூடக் கிடைக்கும்!

ஆனால் ஒரு வாரமாகி விட்டது. இரண்டு ஆட்களும் கிடைக்கவில்லை. தலைமறைவாகி விட்டார்கள். இங்கிருந்தான், அங்கிருந்தான் என்றார்கள். எங்கேயும் இல்லை.

ஓர் ஐம்பது சதவீதம் பயம் இருந்தது.

எல்லாக் கஷ்டத்திற்கும் இவன்தான் காரணம் என்று தெரிந்து இவர்கள் பழிவாங்க வந்தால்......

—எமர்ஜென்ஸி இருக்கு! என்று இன்ஸ்பெக்டரின் பொன்மொழிகள் "நானிருக்கப் பய'மேனாக இருந்தது.

வாசல் கதவு தடதடத்தது.

— யார்? என்றான்! இடுக்கில் பார்த்தான். படீர் என்று திறந்தான்.

பாலுசாமியின் சம்சாரம் வந்தாள். அழுது வெளுத்திருந்தாள். கண்கள் தொய்ந்திருந்தன. இளைத்திருந்தாள்.

இடுப்பைக் காட்டி மடிப்பை அவிழ்த்தாள். பிதுங்கும் தோலைப் பார்த்ததும் மனம் சில செகண்டுகள் கெட்டுப் போயிற்று.

— இதை வச்சுக்குங்க.

இருபது நூறு ரூபாய்த் தாள்கள்!

— என்னது இது!

— எப்படியாச்சும் அவருக்கு விடுதலை வாங்கிக் கொடுத்து விடுங்க! கோடிப் புண்ணியமுண்டு! அவர் இல்லாட்டி குடும்பம் பாழாப் போயிடும். ராமக்கா மாதிரி நா ஆயிடுவேன். கருணை வையுங்க! உங்க சகோதரின்னு நினையுங்க.

அவள் எண்ணப்படி அழகாக அழுதாள்.

— என்னலே என்ன செய்ய முடியும்மா? போலீஸ் கேசு! அவங்க நினைச்சாத்தான் ஏதேனும் செய்ய முடியும். எனக்கும் அவங்களுக்கும் எந்த சம்பந்தமும்..

— அப்படிச் சொல்லிடாதீங்க! போலீசிலே உங்களுக்கு செல்வாக்கு உண்டுன்னு எனக்குத் தெரியும்!

— யார் சொன்னங்க?

— எத்தின பேரு பணத்தையும், பொருளையும் இந்த வீட்டிலே கொண்டு கொடுத்திருக்காங்க? அவங்கள்லே ஒருத்தர் சொல்ல மாட்டாங்களா? எனக்காக இதைச் செய்திடுங்க! உங்களைத்தான் நம்பிக்கிட்டிருக்கேன்.

நின்றால் மறுத்து விடுவானே என்று பயந்து விடுவிடென்று போய்விட்டாள்.

பச்சை நோட்டு பால் மணம் மாறாமல் இப்போதுதான் பிறந்திருக்கிறது.

ஒரு லைசிக் விறு விறுப்பு அவனை இழுத்தது. நோட்டைப் பார்க்கும் கணத்தில் எவ்வளவு பெரிய துக்கமானாலும் மறந்து விடுகிறது. அதனுடன் அப்படி ஓர் அன்னியோன்னியம்!

நிலவறையில் கொண்டு வைத்தான்.

மீண்டும் அவள் பத்தாவது நாளில் வந்த போது ஏற்கெனவே பதில் யோசித்திருந்தான்.

— இன்னும் மூவாயிரம் வேணும். இன்ஸ்பெக்டர் அவங்க இவங்கன்னு கொடுக்கணுமே!

ஸ்தம்பித்து நின்றாள்.

—எங்கே போவேன், என்றாள்.

'அவன் எங்கேயோ அனாயாசமாகப் பார்த்திருந்தான்.

— அவ்வளவு பணத்துக்கு எங்கே போவேன்? என்றாள்.

ரொம்ப நாழிகை நின்றாள். பிறகு எதுவும் முடிவு செய்யாமல் போனாள்.

இந்தத் தடவைதான் அந்த ஆசை வந்தது. கமலம் ஊரில் இல்லாத நேரம். இத்தனை நாள் தொடர்ந்தாற்போல் உடலுக்கு அந்த சுகம் மறுக்கப்பட்டதில்லை. இப்போது இவளது உடம்பு வந்து உறுத்தியது. அந்தத் தொடைகளின் புஷ்டிகள் அவனைப் பைத்தியமாக்கின. சுந்தரமான உடம்பு! ஒரு முதிர்ச்சியான சுகத்தைத் தேடிக் கொள்ளலாம்.

அடுத்த முறை வந்தபோது அந்த பதில் காத்திருந்தது.

அதற்குத் தகுந்தாற்போல் அவளுக்கும் ஆயிரம் ரூபாய் குறைவாக இருந்தது. வீட்டில் எல்லாவற்றையும் விற்று விட்டேன் என்றாள்.

எதையும் அவன் பொருட்படுத்தவில்லை.

பணக் குறைவை நிறைவாக்க வழி இருக்கிறது என்று ஆரம்பித்து அந்த வழியையும் சொல்லியபோது....

தாய் முதல் வாரம்!

மகள் மறு வாரம்!

கதவு தட்டியது. திறந்தான். வழக்கம் இல்லாமல் காலையில் அவள் வந்திருந்தாள்.

அவள் கத்தியை உருவியிருந்தாள். சந்தேகமே இல்லை. அது கத்திதான்!

— ஏய் மோசக்காரா! இன்னிக்கு வந்துடுவாருன்னு ஒவ்வொரு வாரமும் ஏமாத்திக்கிட்டே வந்தே! பொருளெல்லாம் வித்து ஐயாயிரம் கொடுத்தேன்! என்னைக் கொடுத்தேன்! என் மகளைக் கொடுத்தேன். இன்னும் என்னடா கொடுக்க பாக்கி இருக்கு? என் புருஷன் எங்கேடா? என் புருஷன் எங்கே?

கேள்வியே கத்தி போல் வெட்டியது. நிஜக் கத்தி கையில் ஆடியது. இன்னும் இரண்டு செகண்டில் சாடிடுவாள்.

அவளைக் குறைத்து மதிப்புப் போட இஷ்டமில்லை. ஆத்திரத்தில் வந்ததால் ஆயிரம் பலம் இருக்கும். ஒன்று சாகடிப்பாள்! அல்லது சாவாள்!

—கொஞ்சம் நில்லு! நான் சொல்றதைக் கேளு. இரண்டு கையையும் நீட்டிக் கெஞ்சினான்.

— இன்ஸ்பெக்டர் செய்யறேன்னு தான் சொன்னாரு! இந்த வாரத்திலே முடிச்சடுவாரு! இதோ போறேன்! இதோ..

அவனுக்கு ஆச்சரியம். அவள் கண்களில் ரத்தம் ஊறியிருந்தன. நெற்றியில் ஓர் உக்கிரம்! குங்குமப் பொட்டினுலா தெரியவில்லை. பார்வையிலும் பேச்சிலும் பத்திரகாளித்தனம்.

அப்பாவியான ஒரு பெண்மணியிடம் இதை எதிர்பார்க்கவில்லை.

ஆத்திரம் என்று வந்தால் இப்படி ஆகி விடுவார்களோ?



அமெரிக்க ஜனாதிபதியின் உயரம் 5 அடி 9 அங்குலம். எடை—155 பவுண்ட். மார்பு அளவு 39 அங்குலம். அவருடைய இடுப்பு அளவு 33 அங்குலம். இவருக்குப் பிடித்தமான புத்தகம் டால்ஸ்டாயின் 'போரும் சமாதானமும்'.

—நியூஸ் வீக்லி

— போ! போ! வெறும்னே திரும்பின உயிரோட இருக்கமாட்டே!

வாயில் தீ வீசியது.

இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு ஓடினான்.

மூன்று வாரமாகப் போய்க் கொண்டிருக்கிறான். செய்யலாம் செய்யலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தார். நினைத்தால் முடியும்! கோர்ட்டா, கேஸா வழக்கா? எமர்ஜென்ஸி ஆயிற்றே! நல்லவனைத் திருடன்னு சொல்லி உள்ளே போடலாம். திருடனை நல்லவன்னு சொல்லி வெளியே அனுப்பலாம்! அப்படித்தான் யோசிக்கறாங்க!

— இன்ஸ்பெக்டர் இருக்கிறாரா?

உள்ளே வாளியை வைத்து ஒருவன் வெள்ளையடித்துக் கொண்டிருந்தான்.

— இன்ஸ்பெக்டர் ஐயாவா! மாத்திப்புட்டாங்க! வடக்கே போய்ட்டாங்க!

கேட்டதற்கு மேலே ஒரு முழம் சொன்னான்.

'பொட்'டென்று மனசில் ஓட்டை.

நிஜந்தானு!

சொல்லாமல் கொள்ளாமல் இன்ஸ்பெக்டர் போய்டுவாரா? லீவா?

ஊர்ச் செய்தி எதுவுமே தெரிவதில்லை.

திரும்பினான்.

வேறு யாரைத் தெரியும்? போலீசில்?

எவரையும் தெரியாது. ஒரு இன்ஃபார்மராகவே இருந்து விட்டான், சீதாபதிக்கு மட்டும் அந்தரங்க சுத்தமாக! போலீசில் இது போன்ற இன்ஃபார்மர்களைப் பற்றி ஒருத்தருக்கொருத்தர் பொதுவாகப் பேசிக் கொள்வதில்லை. அவரவர் தங்கள் தங்கள் மூலங்களை ரகசியமாக வைத்திருப்பார்கள். துப்புகளுக்குப் பணம் கொடுப்பதுகூட நேரடியாக இன்ஃபார்மர்களுக்குப் போகாது. அந்தந்த இன்ஸ்பெக்டர் மூலமாகத்தான் இன்ஃபார்மர்களுக்குப் போகும். ஒவ்வோர் அதிகாரியும் தங்களது வெற்றிக்காக இந்த ரகசிய உறவுகளை வைத்திருப்பார்கள். சிலர் இன்ஃபார்மர்களை மற்றவர்களுக்குக் காட்டவோ அறிமுகப்படுத்தவோ மாட்டார்கள்.

பொதுவான நிலவரத்தில் இருந்த இந்த விஷயங்களை குரு அறிந்திருந்தான்.

அதனால்தான் இப்போது கலவரப்பட்டான்.

இன்ஸ். சீதாபதியும் அவனும் ரகசியமாகவே பேசி வந்தார்கள். இரவில் தான் சந்திப்பான். அதுவும் அவர் வீட்டில்தான்! அவருடன் யாராவது பேசிக் கொண்டிருந்தால்கூட குரு தலை காட்ட மாட்டான். அப்படி ஓர் உடன்பாடு.

சந்திப்புகளை அந்தரங்கமாக வைத்துக் கொள்வதற்கு சீதாபதி இன்னொரு காரணமும் கூறுவார்.—போலீசிலே நல்லவங்களும் இருக்காங்க! கெட்டவங்களும் இருக்காங்க! நாளைக்கு உன்னைப் பற்றிய சமாசாரம்— நீ எனக்குத் துப்புக் கொடுக்கிறது. போறது வரதெல்லாம் கடத்தல் ஆசாமிகளுக்கே போயிடுத்துன்னு உன் உயிருக்கேல்ல ஆபத்து வரும்?

அவர் சொன்னது சரிதான்!

ஆனால் இப்போது அவசரத்துக்கு ஒரு காரியம் ஆக வேண்டி வந்த போது ஓர் ஆள் இல்லாமல்....

பெண்மணியின் கத்தி! ஆக்ரோஷமான கத்தி....

பிள்ளையார் கோவில் ஸ்டாப் அருகில் பஸ்ஸை நிறுத்தி வைத்திருக்க, ஒரு வேலையாள் கனமான லக்கேஜ்களை டாப்பில் போட்டுக் கொண்டிருந்தான்.

அந்த வேலையாளுக்கு உத்தரவு கொடுத்த வண்ணம் இருந்த அந்த ஆளைப் பார்த்தால்..

சரபோஜி மீசைக்காரர்!

காட்டு பங்களாவில் பார்த்தது.

— ஸார், என்னைத் தெரியறதா?

மீசைக்காரர் திரும்பிப் பார்த்து 'இவன் யார்?' என்று ஒற்றையா இரட்டையா போட்டுக் கொண்டிருந்தபோது,

—நான்தாங்க! அன்னிக்கு ஃபாரஸ்ட் பங்களாவுக்கு வந்தேனே; இன்ஸ்பெக்டர் சீதாபதியைத் தேடி!

— ஆமாமாம்! நினைவிருக்கு!

—இன்ஸ்பெக்டர் எங்கே போனாரு!

—அஸ்ஸாம் பார்டர் ஸ்பெஷல் போலீஸ் எஸ்டாபிளிஷ்மெண்ட்ல கொண்டு தள்ளிட்டான்.

— ஏன் ஸார்?

—அவரை மட்டுமில்லே! இந்த ஹோல் போலீஸ் டிவிஷனைத் தூக்கி வெளியிலே தள்ளிட்டாங்க. ஒரே லஞ்சப் புகார். பார்லிமெண்டிலே கேட்டுட்டாங்க! தூக்கு டான்னு ஒரே ராத்திரிலே எல்லாரையும் அப்பாலே போட்டுட்டான். ஜாயினிங் டைம் கூடக் கொடுக்கலே! யார் என்ன செய்ய முடியும்? எமர்ஜென்ஸி! பேப்பர் படிக்கிறதில்லையா?

— ஒரு அர்ஜெண்ட் விஷயம், ஸார்! காட்டு பங்களாவிலே ஒரு ஆசாமி ஆப்டிருந்தானே! இப்போ எங்கே இருக்கான்?

சரபோஜி சிரித்தார்.

— மேலே இருக்கார், என்று வானத்தைக் காட்டினார்.

குருவின் முதுகுத் தண்டுக்குள் ஒரு விரல் பாய்ந்தது. ஜில்லிட்டு விட்டது.

லக்கேஜ் எல்லாம் ஏறி உட்கார்ந்து கொள்ள, சரபோஜி துள்ளி ஏற. அந்த பஸ் அபரிமிதமான எக்ஸாஸ்டை விட்டுக் கொண்டு ஏதோ ஓர் ஆந்திரப் பிரதேச நகரத்தைப் பார்த்து ஓடியது.

பாலுசாமி இறந்து விட்டான். இல்லை, இறக்கடிக்கப்பட்டான். ஜனத்தொகையைக் குறைக்க போலீஸ் உபயம்!

பால..........

சொல்லிவிட்டுச் செத்துப் போயிருக்கக் கூடாதா?

அந்தப் பெண்ணின் கத்தி கண் முன்னால் விளையாடியது!

அதிர்ச்சிதான். இப்படிச் சாகடிப்பார்களா?

ஒரு வேளை மிசாவில் பிடிபட்டவர்கள் எல்லாரையும் இப்படித்தான்....

பேப்பர் படிக்கவில்லை. படிக்க வேண்டும்.

பங்க் கடையில் பேப்பர் வாங்கி வீட்டுக்கு வந்தான். பேப்பரைக் கை பிடிக்க மாட்டேன் என்கிறது. அந்தப் பெண்மணி கத்தியால் 'ஸூ' காட்டிக் கொண்டிருந்தாள். இவள் என்ன, ஒரு பொடி விஷயம்! ஆனாலும் தள்ள முடியாது. விரக்தியில் இருந்தாள், காசியை விட! என்ன வேண்டுமானாலும் செய்வாள்.

....ஓர் அஜாக்கிரதை வேளையில் அவள் 'படீர்' என்று குத்த, அவன் 'ஆ' வென்று அலற....

மனத்தைத் தேற்றிக் கொண்டு பேப்பரைத் தொடங்கினான்.

அவனுக்கு என்ன சுவாரஸ்யம் வரும்!

எல்லாம் நாட்டு முன்னேற்றங்களைப் பற்றியே பேச்சு! இருபதைப் பற்றி ஒருவர், அஞ்சைப் பற்றி ஒருவர்! எல்லாம் பீடு நடைச் செய்திகள்! எங்கும் சுபிட்சம்,அமைதி, ஆனந்தம்.

கடத்தல் தலைப்பு அவனை இழுத்தது. சம்பந்தமில்லாத மந்திரி பேசியிருந்தார். கிழக்குக் கடற்கரை நகரங்களில் பெரிய அளவு போலீஸ் சீரமைப்பு நடந்துவிட்டது. டாப் டு பாட்டம்! இனி ஒரு பிளேடுகூட இந்தியாவுக்குள் வராது. தொடர்ந்து கவர்ன்மெண்ட் ஊழியருக்கும் போலீசுக்கும் எச்சரிக்கை! ஒழுங்காக நடக்காவிட்டால்......

பேப்பரில் அதற்கு மேல் விருப்பம் இல்லை!

பகல் முழுவதும் தூங்கினான்.

சாயங்காலம் எழுந்த போது கத்திக்காரியின் ஞாபகம் வந்தது. இதென்ன சீ! அட்டை போல் ஒட்டிக் கொண்டிருக்கிறாளே! சங்கடத்தில் அனாவசியமாய் மாட்டிக் கொண்டோம்! பணத்தாசை இழுத்து விட்டது. இப்போது இந்த அவஸ்தையை யார் படுவார்கள்?

ரோட்டுப் பக்கம் ஒரு கெட்டியான உறுமல்! அதைத் தொடர்ந்து பல உறுமல்கள் கேட்டதும்,

மாடி முன் வராந்தாவுக்கு ஓடினான்.

வேவண்ட் உறுமல்களுடன் போலீஸ் லாரிகள் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு போயின.

டைமண்ட் வலைக்குள் நிறையத் தலைகள்.

எங்கேயோ வேட்டை நடந்திருக்க வேண்டும்!

இந்தப் பக்கத்திலிருந்து வருவதால் வேலங்காட்டுக்குள்ளேதான். இதுவரை இவ்வளவு லாரிகளை இப்படிச் சேர்ந்து பார்த்ததில்லை.

எல்லாம் இந்தத் திருட்டுக் கும்பல்களாகத்தான் இருக்கும். சாராயம் காய்ச்சுவானுங்க! சூதாடுவானுங்க! கடத்தல் பண்ணுவானுங்க! ஒழியட்டும் என்று ஒரு சராசரி பொதுஜனம் போல் சபித்தான்.

இன்னும் ஏதாவது தொடருமா என்று நினைத்த போது,

நாலு போலீசார் இரண்டு பேர்களை விலங்கு போட்டு நடத்திக் கொண்டிருந்தார்கள்.

விலங்குகளோடு பிணைந்த நீளச் சங்கிலியை அவர்கள் கைகளில் பிடித்திருந்தார்கள்.

அந்த இரண்டு கைதிகளைப் பார்த்ததும்....மனசைத் தாண்டிக் கொண்டு அவன் சந்தோஷக் குரல் வெளி வந்தது.

கைதியில் ஒருத்தன் காமாட்சிநாதன்! இன்னொருத்தன் பால......

பால....பால....பாலசந்துருடு.

நினைவின் எண்ணற்ற செல் அடுக்குகளிலிருந்து ஒரு புழுப்போல் அந்தப் பெயர் நெளிந்து வெளி வந்துவிட்டது.

இரண்டு பேரையும் கடத்தல் கோஷ்டியில் அவன் சேர்த்துப் பார்த்தது கிடையாது. இரண்டு பேரும் லாங் பஜாரில் வெவ்வேறு மூலைகளில் அப்பாவித்தனமான வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இரண்டு பேரையும் தொழிலில் நினைத்துப் பார்க்க மனம் எண்ணியதேயில்லை.

முன்னால் போலீசார் சங்கிலியோடு போய்க் கொண்டிருக்க, பின்னால் காமாட்சி மட்டும் அவனைத் திரும்பிப் பார்த்தான்.

இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் முறைத்தார்கள். காமாட்சிக்கு உள்ளே தழல் வெந்து கொண்டு மேலே வந்திருக்க வேண்டும்.

குருவைச் சீற்றத்துடன் பார்த்து—அட சீ! என்றான்.

அந்த 'சீ'யில் ஆயிரம் ஹார்ஸ் பவர் இருந்தது.

அதே நேரத்தில் முன்னால் போன காக்கிக்காரர்கள் திரும்ப, குரு பால்கனிக்குள் அமிழ்ந்து கொண்டான்.

இருதயம் தடம் மாறிப் பேசியது.

ஒரு நிமிடத்தை ஓட விட்டு மெள்ள நிமிர்ந்தான்.

அடுத்தாற்போல் ஒரே ஒரு நபரை இரண்டு போலீசார் சங்கிலி போட்டு நடத்திச் சென்று கொண்டிருந்தார்கள்.

அந்த நபரைப் பார்த்ததும் ஒரு விசித்திர அதிசயம் அவனைத் தாக்கியது.

அந்த நபர் அவனைப் போலவே இருந்தான். அதே கிராப்பு, கிருதா, முகம், கண்கள், நடை, அமைப்பு!

மை காட்! இப்படிக்கூட ஓர் அதிசயம் நடக்குமா? மனசு கைகொட்டி ஆச்சரியப்பட்டது.

அவனுக்கு டபுளாகப் போடலாம். சினிமாக்காரர்கள் இருந்தால் படம் பிடித்து விடுவார்கள். ஒருத்தன் நல்லவன்! ஒருத்தன் கெட்டவன்! ஒருத்தன் காட்டில் இருந்தான். ஒருத்தன் நாட்டில் இருந்தான். ஒருத்தன் களவாளி! ஒருத்தன் இன்ஸ்பெக்டர்! இன்ஸ்பெக்டரின் காதலியைக் களவாளி கடத்திக் கொண்டு போக, அவள் சோகமாக ஜானகியின் குரலில் பாட, கார் சேஸ், கப்பல் சேஸ், ஏரோப்ளேன் சேஸிற்குப் பிறகு, சொச்சத்திற்கு ஒரு டூயலையும் போட்டுவிட்டு இன்ஸ்பெக்டர் அவளை அடைகிறார்.

சொடுக்கு நேரத்தில் இவ்வளவும் வந்து போக, குரு அந்த நபரைப் புன்னகையோடு உற்றுப் பார்க்க அவனும் அதிசயத்தோடு இவனை ஒரு விசேஷப் பார்வை பார்த்தான்.

அப்போது—அண்ணே! அவனைப் பார்த்தியா! அவன்தான் துக்கிரி! அந்தப் படுபாவிப் பயலின் கதையை அப்புறம் சொல்லுதேன்.... என்று அரை நொடியே திரும்பிய காமாட்சி அந்த தனிக் கைதியிடம் சொல்ல,

அவன் பேச்சு முடிவதற்குள்ளாகவே, பால்கனியில் அமிழ்ந்து கொண்டான்.

ஐந்து நிமிடம் போகவிட்டு, எழுந்து உள்ளே வந்து, ஆனந்தமாகச் சோம்பல் கழற்றி,—இன்னியோட எல்லாக் கஷ்டமும் போச்சுடா! கதை சொல்லப் போறுனு மில்லே, கதை! ஆயுசுக்கும் கம்பி எண்ணலாம்! அங்கே குந்திக்கிட்டு கதை சொல் விட்டே இரு, என்று சபித்தான்.

இன்பமாக மிதப்பது போல் ஓர் உணர்ச்சி! அதைப் பகிர்ந்து கொள்ள—கமலம் இல்லாது போய்விட்டாள்.

இரவுக்குள் ஒரு யோசனைக்கு வந்தான், மறுநாள் காலையில் ஊருக்குப் புறப்பட வேண்டும்.

கத்திக்காரிதான் இந்தத் தீர்மானத்திற்குப் பெரிய காரணம்!

நிலவறையில் மேசை - நாற்காலி பாத்திரம் பண்டம் எல்லாம் போட்டு உக்கிராண அறை போல் காண்பித்து விட்டுப் புறப்பட்டான்.

காலை நெடுந்தூர விரைவு வண்டி 'டுர்ர்ர்ர்ர்ர்' என்று ஓட, ஊரைவிட்டு நாற்பது மைல் வேகத்தில் பிய்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு பஸ் களைப்பாறியது. காப்பியும், பேப்பரும் வாங்கினான்.

சீட்டில் உட்கார்ந்து, ஒரு அப்பாடா போட்டு, ஒரு சர்வ பத்திரமான நிலையை மனசில் அனுபவித்த பிறகு, பேப்பரை அதன் மெருகு குலைக்காமல் மெள்ள ஊதிப் பிரித்தான்.

'விர்ர்'ரென்று ஓர் ஏவுகணை பறந்தது.

அவனது போட்டோவையே முதல் பக்கத்தில் பிரசுரித்திருந்தார்கள்.

ஒரு செகண்டில் சீட்டைவிட்டுக் கழன்ற மாதிரியும் அடுத்த செகண்டில் சீட்டில் 'தொப்'பென்று விழுந்த மாதிரியும் உணர்ச்சி!

கண்களைக் 'கடகட'வென்று கொட்டிக் கொண்டு படித்தான்.

தலைப்பு: வேலங்காட்டில் வேட்டை.

வேலங்கரையை அடுத்த வேலங்காட்டில் நேற்று போலீசார் சோதனை நடத்தியதில் ஒரு பயங்கரவாதி பிடிபட்டார். அவர் பெயர் சூரியகுமார். அவரைப் போலீசார் ஒரு வருடமாகத் தேடி வருகிறார்கள். இவரைத் தவிர தலைமறைவாகி விட்ட காமாட்சிநாதன், பாலசந்துருடு என்ற இரண்டு கடத்தல் புள்ளிகளும், இருபது கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களும் பிடிபட்டார்கள்.





நான் 12 ஆண்டுகள் இந்திய சிறைச்சாலைகளில் கழித்தாலும் இந்தியாவை என் நாடாகப் போற்றுகிறேன்.

—ஷேக் அப்துல்லா

கடற்கரை ஓர நகரங்களின் போலீஸ் அமைப்பை முற்றிலும் மாற்றியதிலிருந்து, இத்தனை பேர் சேர்ந்து அகப்படுவது இதுதான் முதல் தடவை. புதுப் போலீசார் உடனே தீவிர நடவடிக்கைகள் எடுத்தது பற்றி மக்கள் பாராட்டுகிறார்கள்.

சென்ஸார் சுத்தமான செய்தியை வாசித்த பிறகு நிம்மதி! இந்த போட்டோவில் இருப்பது சூரியகுமாரா? ஏமாந்து விட்டேனே! அசப்பில் என்னைப் போல இருக்கிறானே. நல்லவேளை! என்னை இவன் என்று நினைத்து யாராவது பிடித்துப் போயிருந்தால்.. நாலு உதை உதைத்து ஜெயிலுக்குள் தள்ளி..

சிரிப்பு வந்தது. அதெல்லாம் சினிமாவில் நடக்கும். இதை வைத்துக் கதை திரித்துக் கொண்டே போவார்கள். நிஜ வாழ்க்கையில் நடக்குமா? சாட்சி, சந்தர்ப்பம் இல்லையா?

டேய், சூரியகுமார்! என்னைப்போலத் தாண்டா இருக்கே! வாடா ரெண்டு பேரும் சேர்ந்து சினிமாவிலே நடிக்கலாம். நிறையப் பணம் கிடைக்கும்டா!

கண்ணைச் சிமிட்டிக் கொண்டே போட்டோவைப் பார்த்துச் சொன்னான்.

பஸ்ஸில் யாராவது அந்தப் பத்திரிகை வாங்கி இருக்கிறார்களா—பார்த்தான்.

பின் பக்கத்துக் கடைசி வரிசையில் ஒருவர் வாங்கியிருந்தார். அவரைப் பார்த்தால் திடுக்கிடுவார்! சூரியகுமார் இதோ இருக்கிறான், டோய்!

பேப்பரைப் பத்திரமாக மடித்து வைத்தான். கமலத்திற்குக் காட்ட வேண்டும். — என் போட்டோ பத்திரிகையிலே வராதுன்னு சொன்னியே! இதோ பாரு!

ஒரு வேடிக்கையான உற்சாகம் அவனைப் பிய்த்துக் கொண்டு உதறியது.

ஒரு பெரிய ஆற்றுப் பாலத்தைக் கடந்து, விக்டரி ஆர்ச்சைத் தாண்டி, காந்தி பெயரோடு நிற்கும் ஒரு நோஞ்சல் சிலையைச் சுற்றி, வாழைப்பழத் தெருவின் குறுகலான பாதையில் நிறைய ஹாரனைச் செலவழித்து, 'ரே ரே ரே' என்று கத்தும் ஒரு கொத்துச் சிறுவர்கள் வால் பிடித்துக் கொண்டு வர பேருந்து நிலையத்தில் அந்த பஸ் பெரு மூச்சோடு நின்றது.

புழுதியும் மஞ்சள் வெய்யிலும் கலந்த மாலை நேரம்.

பட்டுக் கயிறு, கண்ணாடி வளையல் விற்பவர்களையெல்லாம் ஊடுருவிக் கொண்டு ஒதுங்கிப் போய், தொடைக்கு இடுக்கில் வந்திருந்த நமைச்சலைச் சிறிது சுவாரஸ்யமாகச் சொறிந்துவிட்டு அப்படி அந்த வேல்முருகன் டீ ஸ்டாலைப் பார்த்தால்,

மேலே பாய்லரில் ஆவி பறக்கக் கீழே போஸ்டரில் சூடு பறந்தது.

வேலங்கரையில் மூன்று பேர் கொலை—

பஸ் பிரயாணத்தில் இடைவெளி நேரத்தில் தன்னைத் துரத்திக் கொண்டு ஒரு நியூஸ் வந்திருக்கிறது. பரபரப்போடு பேப்பரை வாங்கினான்.

மீண்டும் அவன் போட்டோ பிரசுரமாகி யிருந்தது.

இதென்ன கூத்து?

வேலங்கரைக் காட்டில் பயங்கரவாதி சூரியகுமார் நேற்று பிடிபட்டது தெரிந்ததே! அவர் இன்று காலையில் லாக் - அப்பை உடைத்துக் காவலில் இருந்த ஒரு போலீஸ்காரரைக் குத்திக் கொலை செய்தார். அவரைப் பிடிக்க வந்த ரைட்டரையும், டிபுட்டி இன்ஸ்பெக்டரையும் கத்தியால் குத்திவிட்டு மாயமாய் மறைந்தார். ரைட்டரும் இன்ஸ்பெக்டரும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். வழியில் அவர்கள் பரிதாபமாகச் செத்தார்கள். சூரியகுமாரை போலீசார் வலை போட்டுத் தேடி வருகிறார்கள்.

ஐஸ் போன்ற குளிர் உடம்புக்குள் ஏணி வைத்து இறங்கியது. மூளையில் நிறைய வெல்டிங் பொறிகள் தெறித்தன. விர்ரென்று தலைக்குள் ஒரு குடை ராட்டினம் சுழன்றது.

ஒரு கணம் எதுவும் ஓடவில்லை.

ஏன் அந்தச் செய்தி அவனைத் தாக்கியது என்றும் தெரியவில்லை.

இவ்வளவுக்கும் அவனுக்கும் அந்தக் கொலைகளுக்கும் என்ன சம்பந்தம்? எதுவுமில்லை.

அவன் சோகப்பட நியாயமில்லை.

பேப்பரை விருசலாய் மடித்தான். டீ சாப்பிடும் எண்ணத்தைக் கைவிட்டான்.

திடீரென்று ஓர் அரிப்பில் சுற்றிவரப் பார்த்தான். அடுத்த இரண்டாவது டீ ஸ்டாலின் உட்புறத்து பெஞ்சில் ஓர் ஆள் அவனைக் குறித்துப் பார்ப்பது தெரிந்தது.

இதென்ன தலையெழுத்து என்று சொல்லி பேருந்து நிலையத்திலிருந்து சுவடு தெரியாமல் விரைந்தான்.

—என்னங்க, என்ன விஷயம்? ஊரிலே ஏதேன் விசேஷமா?

கமலம் கேட்டாள்!

அவன் பதில் பேசவில்லை. பரபரப்பாக இருந்தான்.

—வேறே வீடு பார்த்திட்டீங்களா?

அதற்கும் பதில் இல்லை. சுவரில் இருக்கும் முகம் பார்க்கும் கண்ணாடியை எடுத்து ரொம்ப நெருக்கமாகப் பார்த்தான். முகவாயைக் கையால் பிசைந்து அப்படி இப்படித் திருப்பிப் பார்த்தான். தலையை இடது பக்கமும், வலது பக்கமும் வழித்துப் போட்டுப் பார்த்தான்.

—அந்த மூனு பேர் ஆப்டுட்டாங்களா?

—உம்.

—வேறே விசேஷமில்லையே?

—இருக்கு, கமலம்.

—என்ன விஷயம்?

ஒரு நிமிடம் தயங்கிவிட்டு—ஒன்னுமில்லை, என்றான்.

கமலத்திற்கு எரிச்சல்!

பத்து நிமிடத்தில் விஜயா—அப்பா என்று சொல்லிக் கொண்டு வந்தாள்.

பெண்ணை ஒரு வருடத்திற்குப் பிறகு பார்க்கிறான். பதினைந்தில் இருப்பாள். அடையாளம் தெரியாமல் வளர ஆரம்பித்து விட்டாள். ப்ரா போட்டிருப்பதிலிருந்து உடம்பில் அக்கறை காட்டத் தொடங்கி விட்டாள்.

—சௌக்கியமா? என்று ஒரே ஒரு வார்த்தை கேட்டுவிட்டு, மீண்டும் பரபரக்க ஆரம்பித்தான்.

—என்னங்க இது? பேச மாட்டேங்கிறீங்களே! வீடு பார்த்துட்டீங்களா? நாளைக்கு ஊருக்குப் புறப்படலாமா, சொல்லுங்க!

நிமிர்ந்து பார்த்தான். — வேண்டாம் கமலம்! ஒரு சிக்கல் இருக்கு!

—எப்போத்தான் போறதாம்!

—நான் சொல்றேனே! கொஞ்சம் நிம்மதியா இருக்க விடு, கமலம்!

இரவில் தூக்கம் வரவில்லை.

அந்த சூரியகுமார் அவனைப் பார்த்த பார்வை அடிக்கடி வந்தது. அந்தக் காமாட்சிநாதன் 'சீ'ன்னு சொன்னது, சூரியகுமாரைப் பார்த்துப் பேசியது....

இதெல்லாம் ஏதாவது விபரீதத்தில் கொண்டு விடுமோ?

சீ, அதெல்லாம் நடக்காது! வீண் கலவரம்!

காலை புலபுலக்கும்போது புறப்பட்டான். பெரிய துண்டை எடுத்து தலைப்பாகை கட்டினான்.

—ஆமாம்! இறந்தவெளில குந்திரு வேலங்கரை ஜமீந்தார்னு கண்டுபிடிச்சுடு வாங்களாக்கும்? ஏன் அவ்ளோ வெட்கம்?

கமலம் எதையோ நினைத்துச் சொன்னாள்.

அந்த ஊரின் சின்ன பஜார் உசும்புவதற்கே நேரமாகும்.

ஒரே ஒரு டீக்கடை அந்த வேளையில் விழித்து பாத்திரங்களை ஓசைப்படுத்தியது.

சிங்கிள் டீ அடித்து, பேப்பர் பையன் வருவதற்காகக் காத்திருந்தான்.

பொறுமையைச் சோதித்து விட்டுத்தான் அவன் வந்தான். அதற்குள் சூரிய வெளிச்சம் பஜாரைச் சூடாக்கியது.

பரபரவென்று பார்த்தான்.

இரண்டாவது பக்கம் டபுள் காலத்தில் 'போலீஸ் கொலைக் கேஸ்' என்று புதிய தலைப்பு கொடுக்கப்பட்டிருந்தது.

போலீஸ் மரியாதையுடன் உடல்களின் அடக்கம் நடந்ததை வர்ணித்துவிட்டு, வலை வீச்சைப் பற்றி ஒரு காலம்!

வேலங்கரைப் புறநகர் பகுதியில் ஒரு ஒதுக்கமான வீட்டில் சூரியகுமார் வசித்து வந்தான் என்பது இப்போது தெரிய வந்திருக்கிறது. தன்னை யாரும் அடையாளம் கண்டு கொள்ளாமல் இருக்க யாருடனும் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ள மாட்டானும். அவன் இருக்கும் வீடே ஒரு பிசாசு வீடு போல் இருக்குமாம்.

நேற்று பத்திரிகையில் அவன் போட்டோ பிரசுரமாகி இருப்பதைப் பார்த்துப் பலபேர் போலீசுக்குத் துப்புக் கொடுக்க வந்தார்கள்.

சம்பவம் நடந்த அன்று காலையில் சூரியகுமார் பஸ் ஸ்டாப்பில் தென் பட்டதாக ஒருவர் கூறினார். விரைவு வண்டி ஒன்றில் ஏறிப் போனதைப் பார்த்ததாகவும் அவர் சொன்னார்.

போலீசார் மாநிலத்தில் உள்ள எல்லா போலீஸ் நிலையங்களுக்கும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

தற்போதுள்ள கொலைக் கேஸ் தவிர ஏற்கெனவே இரண்டு கொலை களுக்கும், மூன்று கொள்ளைகளுக்கும் சூரியகுமார் தேடப்பட்டு வருகிறான்.

இன்னும் கொஞ்சம் ஐஸ் உள்ளே இறங்கியது.

—அடப் பாவிகளா! என்னைத் தேடறீங்களே! இது நான் இல்லைப்பா! நான் இல்லை, குரு மனத்தில் ஒரு சின்ன குரு நின்று கொண்டு கை வீசிக் கத்தினான்.

அவனுக்குக் ஒரு கோபம்கூட வந்தது. நேராக வேலங்கரை போலீசைப் பார்த்து, எவனெவன் சொல்றதை யெல்லாம் நம்பறீங்களே! நான் மாணிக்கத்தின் மகன்! எனக்கும் அந்த பயங்கரவாதிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. இரண்டு பேருக்கும் உருவ ஒற்றுமை! இதைப் பார்த்து ஏமாந்துடாதீங்க! என்று சொல்ல வேண்டும்போல் இருந்தது.

சொன்னால் என்ன?

விஷயம் கையை விட்டும் முற்றிப் போவதற்கு முன் நடவடிக்கை எடுத்தால் நல்லது.

—கமலம்! மத்தியான இரண்டு மணி பஸ்ஸுக்கு வேலங்கரை போறேன்! ஒரு கூலிங் கிளாஸ் கிடைக்குமா?

கமலத்திற்கு அடியும் தெரியவில்லை, நுனியும் தெரியவில்லை. ஆனால் அவன் கணவன் சமயங்களில் அப்படி இருந்ததுண்டு.

—நீங்க சீக்கிரமா திரும்பிடணும் என்றாள் அவள்.

—ஓ! (ஆட்டும்)

—நாம்ப அந்த ஊரையே விட்டுடணும்.

—ஓ!

—நீங்க சம்பாதிச்சதெல்லாம் போதும்!

—ஓ!

அதற்கு மேல் 'ஓ'க்களை கேட்க விரும்பாமல் அவள் மௌனமானாள்.

அவன் புழக்கடை வழியாக பஸ் ஸ்டாண்டுக்குப் போனான். பஸ்ஸில் ஏறும்போது வெறுப்பு!

யாராவது இப்படி முக்காடு போட்டுக் கொண்டு பிரயாணம் செய்வார்களா? முக்காடு என்றால் முக்காடு அல்ல!

முகத்தில் ஒரு சீப் கூலிங் கண்ணுடி! வேண்டுமென்றே ஷேவ் பண்ணிக் கொள்ள வில்லை. தலையில் நேர்வகிடு எடுத்து மயிரை முன்னுல் தள்ளி நெற்றியை மறைத்திருந்தான்.

பக்கத்து சீட்காரர் தொந்தரவு பண்ணிக் கொண்டே வந்தார். அவன் முகத்தைத் திருப்பாமலே பதில் சொல்லிக் கொண்டு வந்தான்.

ஐந்து மணிக்கு பஸ் ஒரு சாவடி பக்கம் நின்றது. இரண்டு காக்கிச் சட்டைக்காரர்கள் உள்ளே ஏறினுர்கள். மனம் கஞ்சிரா அடித்தது.

முகத்தை நிமிர்த்தி காக்கிக்காரரை நேரே பார்த்தாலும் ஆபத்து; பார்க்காமல் மாமிலுலும் ஆபத்து.

—குரு! உன் நிலையைப் பார்த்தியாடா? அவன் தன் வசனம் பேசினுன்.

—நீ ஏன் பயப்பட வேண்டும்? நேராக உட்கார்! நேராகப் பார்! நேராகப் பேசு! என்று சின்ன குரு மனசில் ஆர்ப்பரித்தது.

காக்கிக்காரர் கண் மேலே இல்லை.

கீழேயே பார்த்துவிட்டு அவசரமாக இறங்கிப் போனுர்.

பஸ் ஏழரை மணிக்கு வேலங்கரையை அடைந்தது.

வேலங்கரை பஸ் நிலையத்தை விட்டு வெளி வருவதற்கே பிரம்மப் பிரயத்தனமாகிவிட்டது.

கடைசி ஆளாக இறங்கி, பஸ் பின்புற வழியாகச் சுற்றி, இரண்டு மூன்று காலி பஸ்களின் குறுக்குகளில் புகுந்து, யார் கண்ணிலும் படாமல் நிழல்களில் ஒதுங்கி வெளியே வருவதற்குள்..

பலவீனமான வெளிச்சத்தைத் தரும் விளக்குக் கம்பங்கள் அவன் கண்களுக்கு இப்போது எவ்வளவு பலமான வெளிச்சத்தைத் தந்தன!

பகல் போலக் காய்ந்தது. ஒதுங்குவதற்கு நிழல் இல்லை.

எனினும் இந்த ஜனநடமாட்ட இடங்களை விட்டுச் சீக்கிரம் போனுல்தான் நல்லது.

தேர்க்கால் தெருவுக்காகப் போய் இடது பக்கம் திரும்பி, பிறகு வலது பக்கம் நடந்து, பாண்டித் தெருவைப் பிடித்து...

பாண்டித் தெருவில் ஜனநடமாட்டம் இல்லை. பனிக்குப் பயந்தவன் போல் மேலே போர்த்திக் கொண்டு நடந்தான்.

அவனுக்கே ஏளனமாக இருந்தது.

கொஞ்ச நாளைக்கு முன் ராஜா போல் பவனி வந்த தெருவில் இப்போது முகம் காட்டாமல் போக வேண்டியிருக்கிறது.

அப்படி நினைக்கும்போது சிரிப்புக்கூட வந்தது. தனி வாழ்க்கையை அவன் பயங்கரமாகக் கற்பனை செய்து கொண்டாலும், இதெல்லாம் வெறும் தாற்காலிகம் என்ற பலமான நம்பிக்கை இருந்து கொண்டே இருந்தது.

பாண்டித் தெரு முனை வரை போன பிறகுதான் யோசிக்கவே மனம் ஓடியது.

எங்கே போகிறோம்?

என்ன செய்யப் போகிறோம்?

அவனுக்கு எதுவும் தெரியவில்லை. மனம் குழம்பியது.

அப்போதுதான் ஒன்று தோன்றியது. இந்த ஊரில் ஒரு நண்பன்கூட அவனுக்கு இல்லாதது எவ்வளவு பெரிய துரதிருஷ்டம்?

ஒருத்தரைக்கூட சிநேகம் பண்ணிக் கொள்ளவில்லை. ஒதுங்கியிருந்து விட்டோம்.

இப்போது சீதாபதி ஒருத்தர் இருந்தால் போதும்.

பிரச்னைகளை அழகாக முடித்து வைத்திருப்பார். கவலைகளுக்கு இடமே இருக்காது. இப்போகூட என்ன? நிலைமை அப்படியே மோசமானுல்கூட, அவருக்குத் தந்தி அடிக்கச் சொல்லிவிட்டால் போச்சு! முதலில் அவர் விலாசம் தெரியவேண்டும். வீட்டுக்குப் போக விரும்பினுன்.

எட்டு மணி ஆகிவிட்டது.

மெள்ள வீட்டுப் பக்கம் போய் விச்ராந்தியாய் உட்கார்ந்து எல்லா விஷயங்களையும் அசை போட்டு....

நிழல்களில் ஒதுங்கிப் போய் வீட்டை நெருங்க எட்டேமுக்கால் மணி ஆகியது.

அது நிசப்தமாக இருந்தது.

நிழலாக இருந்தது.

உள்ளே எவ்வளவு பணம் மாட்டிக் கொண்டிருக்கிறது!

இப்படி ஒரு நிலை வரும் என்று தெரிந்தால் அதையாவது எடுத்துப் போயிருக்கலாமே!

சுற்றி வர வெளிச்சம் கிடையாது. மேற்குப் பக்கத்திலிருந்து அதை நெருங்கினான்.

நெருங்க நெருங்க அதுவே அவனுக்கு அன்னியமாகத் தோன்றியது. இங்கே வராதே என்று சொல்வது போலிருந்தது. ஓர் இருபத்திநாலு மணி நேரத்தில் அது அவனை விட்டுப் போய்விட்டது போல் தோன்றியது.

நெருங்கி வந்தான்.

பத்தடிக்குள் வரும்போது எதிரே வீட்டருகில் நிழல்கள் தெரிந்தன. ஒரு டார்ச் அவன் மீது எரிந்தது.

—டேய் அவன்தாண்டா என்று குரல்! உடன்—விடாதே,பிடி என்ற சத்தங்கள்.

எங்கும் 'தடதட'வென்று ஓசைகள் எழுந்தன.

டார்ச்சின் வெளிச்சத் தண்டுகள் அவனைத் தொட முயன்றபோது அவன் தலைதெறிக்கப் பறந்து கொண்டிருந்தான்.

வாழ்க்கையின் முந்திய பகுதியில் அவன் உழைத்த உழைப்பு கை கொடுத்தது. காலின் திரட்சியான தசைகள், நீண்ட நாள் சேகரித்து வைத்திருந்த சக்தியை விடுதலை செய்ய, தள்ளிக் கொண்டு ஓடும் ஒரு பயங்கர யந்திரம் போல் காற்றுக்குள் பாய்ந்து கொண்டிருந்தான். அவனது புல்லட் ஓட்டத்தைப் பார்வைகூட பின்பற்ற முடியாது.

இருட்டும், அந்தப் பிரதேச அறிவும் அவனுக்கு நண்பர்களாக இருந்தன.

அரைக் கிலோ மீட்டருக்குள் அவன் ரஸ்தாவை விட்டு, ஒற்றைப் பாதையில் தாவி, அதையும் புறக்கணித்து, கொடிக்கால் தோட்டத்தில் குதித்து, பசுமை வளர்ப்புகளுக்கிடையே நெளிந்து ஓடிப் பொன்னடிக் கால்வாயைப் போய்த் தொட்டு நின்றான்.

அவனைத் துரத்தியவர்களின் வெளிச்சங்களும், விசில்களும், ஓட்டத் தடதடப்புகளும் எங்கேயோ பின்னால் குறைந்து கொசுவாகி மறைந்து விட்டன.

—எல்லாம் புது போலீஸ் ஆள்கள்! ஊரின் பிரதேச அமைப்பு தெரியாது. திண்டாடுவார்கள். இந்தக் கால்வாய்க்கு வந்தாலும் ஆழத்தைப் பார்த்து நின்று விடுவார்கள். பாலத்தைத் தேட வேண்டுமானால் ஒரு மைல் தெற்கே போக வேண்டும். நிச்சயம் பிடிக்க முடியாது

கால்வாயின் சில்லிட்ட தண்ணீரை மார்பு வரை நிர்வாணமாக்கிக் கொண்டு நடந்து கரை ஏறினான்.

சகதியைப் பரட்டி எடுத்துக் கால்களைச் சுத்தமாக்கி, தரிசையில் நிதானமாக நடந்தான். மூன்று நுணா மரங்கள் வளர்ந்திருந்த இடத்தில் முற்றுப்புள்ளி வைத்தான்.

இரைகிற சுவாசங்கள் ஆறுவதற்கு நாழிகை ஆகியது.

ஒன்று தெரிந்தது.

போலீசார் அவன்தான் சூரியகுமார் என்று நினைக்கிறார்கள். தேடுகிறார்கள்.

அனாவசியமான ஓர் அவஸ்தைக்கு ஆளாவது போல் தோன்றியது. தேவையில்லாதது.

இந்த நேரத்திலும் ஒரு வேடிக்கையை ரசிக்கும் ரசனைதான் அவன் மனத்தில் இருந்தது

யாரேனும் வந்து இவன் சூரியகுமார் இல்லை என்று சொன்னால் போதும். போலீசார் இட்டுக் கட்டியதெல்லாம் 'டபார்'என்று உடைந்து விடும். சிரிப்பாய்ச் சிரிக்கலாம்.

யாராவது சொல்ல வேண்டுமே!

சொல்வார்களா?

அந்த வார்த்தை அவன் மனத்தின் பல மூலைகளில் மோதி எதிரொலி செய்தது. சொல்வார்களா? சொல்......

கண்ணை இறுக்கி மூடி யோசிக்க, சொல்லமாட்டார்கள் என்ற நினைப்பு தான் மேலே வந்தது. சொல்லமாட்டார்கள். நிச்சயம் சொல்லமாட்டார்கள்.

ஊரே அவனை அறிந்திருந்தாலும், அவன் இன்னார் என்று சொல்லவே மாட்டார்கள்! அவ்வளவு தூரத்திற்கு அவன் அவர்களை நோக வைத்திருந்தான். நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, அந்த ஊரின் சமுதாயமே அவனால் தாக்கப்பட்டு கால் முடமாகியிருந்தது. அந்த சமுதாயம் இனி நிற்க முடியாது. கிழம் போல் படுத்து விட்டிருந்தது. இந்நிலையில் அதைத் தொட்டு உசுப்பி இவன் யார் என்று கேட்டால், இயல்பாக அதனிடம் சுரக்கக் கூடிய இரக்கத்தையும் கருணையையும்கூட மறைத்துக் கொண்டு, துள்ளியெழும் ஓர் ஆக்ரோஷத்தில் குளித்துக் கொண்டு,—இவனா? 'இவன் குரு இல்லை, சூரியகுமார்! சூரியகுமாரேதான்!' என்று வேண்டுமென்றே சொல்லி, நெஞ்சில் பெரிய தீயை அணைத்துக் கொண்டது போல் ஒரு குரூர நிம்மதியை அடையும். அவ்வளவு தூரத்திற்கு அவன் அந்த சமுதாயத்தைப் படுத்தியிருந்தான்.

> காதலன் கண்களுக்கு அம்மைத் தழும்பும் அதிருஷ்டக் குறிகளாகும்.
>
> —ஜப்பான்.
>
> தூக்கம் வந்துவிட்டால் தலையணை தேவையில்லை; காதல் வந்து விட்டால் அழகே தேவையில்லை.
>
> —ஆப்கானிஸ்தானம்.
>
> கெட்டிக்காரப் பெண், தான் காதலிப்பவனை விட்டு, தன்னைக் காதலிப்பவனை மணப்பாள்.
>
> —ஸ்வாவேகியா.
>
> காதலும் காப்பியும் சூடாக இருந்தால்தான் ருசிக்கும்.
>
> —ஜெர்மனி.
>
> —தொகுப்பு: கணியூர் பருக்

யாரையாவது விட்டு வைத்தாயாடா, குரு, விட்டு வைத்தாயா?

நினைக்க மனமே கசந்தது. ஒருத்தருமில்லை ஒருத்தருமில்லை... என்று முணுகும் போது அவர் நினைவுதான் திடீரென்று மனத்தில் பளிச்சிட்டது.

சீதாபதி! ஆமாம்! அந்த இன்ஸ்பெக்டர்தான் ஒரே துணை! ஒரே சாட்சி...

பொழுது விடிவதற்குள் அந்தத் தூங்குமூஞ்சி ஊரை அடைந்தான். நாகரிகம் ஆயிரம் வருஷங்களுக்கு நின்று போன ஊர்! கலப்பையும் தலைப்பாகையும் நிலைத்துப் போன சாஸ்வதங்களாக.....

அந்தக் காலை வேளையில் கோழியும் எழுந்திருந்தது. கோவிலும் எழுந்திருந்தது.

பூஜாரி வேப்பிலைக் கொத்துகளைத் தொங்கவிட்டு ஒரு வெள்ளிக்கிழமை வேண்டல்களுக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்.

ஏற்கெனவே இந்த ஊரைப்பற்றி அரசல்புரசலாகக் கேள்விப்பட்டிருக்கிறான். வெள்ளிக்கிழமை அம்மன் விசேஷம்!

விசேஷத்தைக் காரணமாக்கி, அன்னியன் என்பதைத் தாராளமாகக் காட்டிக் கொண்டு கிராமத்திற்குள் போகலாம்.

இரட்டைத் தெரு கிராமம். பணக்காரத் தெரு. ஏழைத் தெரு.

பணக்காரத் தெருவில் பழைய காரை வீடுகளில் சில காலத்தை ஓடவிடாமல் நிறுத்தி வைத்திருந்தன.

ஏழரை மணிக்கு மணி அடித்தபோது கோவிலுக்குள் போகும் முதல் பக்தனாக இருந்தான்.

தட்டில் போட்ட எட்டணா அந்தக் கோவிலுக்கு ரிக்கார்ட்! பூஜாரியின் கவனிப்பில் தெரிந்தது.

ஒரு கோவிலைப் பிரதட்சிணம் சுற்றுவது வெகு ஆண்டுகளுக்குப் பிறகு!

சிரத்தையோடு சுற்றினன். ஆனால் அதே நேரத்தில் அவன் செய்யும் செய்கையை அவனே பாதி நம்பாதது போல் அரை எக்களிப்பும் இருந்தது. கூட்டத்தின் ஆரம்பப் பிரார்த்தனையில் எல்லோருக்காகவும் எழுந்திருப்பது போல.

திருநீற்றை அள்ளிப் பூசி குங்குமத்தையும் பெரிதாக வைத்து, ஒரு பக்தி மேக் - அப்பில் முகத்தை மாற்றிக் கொண்டு தெருவில் எட்டரை மணிக்கு வந்த போது, தெரு அப்படியேதானிருந்தது. உசும்பவே இல்லை.

இங்கே எல்லாமே ஸ்லோ-மோஷன் படம்!

தெருவில் நடந்தான். பஞ்சாயத்து நடத்தும் அண்ணா படிப்பகம் ஒரு பழைய வீட்டின் திண்ணையில் ஏறியிருந்தது.

அண்ணாவுக்குக் கிராமத்து பெயிண்டர் இரண்டு சுழிகளைப் போட்டிருக்க—

அந்தத் திண்ணை மேல் இரண்டு நாளிதழ்களும், ஒரு வாராந்தர இதழும் யாராவது படிக்க வருவார்களா என்று காத்துக் கொண்டிருந்தன.

அசட்டுச் சிரிப்பைக் காட்டி அனுமதியைப் பெறுவதற்கு அக்கம்பக்கத்தில் யாரும் இல்லாததால், அவனே திண்ணையிலேறி பேப்பரைப் புரட்டினன்.

முதல் பக்கத்தில் இருபது திட்டங்கள் நாடு முழுதையும் சுபிட்சமாக்கிக் கொண்டிருக்க, உள்ளே இரண்டாவது பக்கத்தில் ஓர் அதிர்வெடி காத்திருந்தது.

அங்கே அவனது வீட்டைப் படம் பிடித்துப் போட்டிருந்தார்கள்.

இதுதான் சூரியகுமார் வீடு என்று அதன் கீழே எழுத்துக் கொட்டைகள்! (பாலபாடம் ஞாபகத்திற்கு வந்தது. அணில், ஆடு, இலை, ஈ..)

இந்த வீட்டைச் சுற்றிப் பாரா போட்டிருந்தது தெரிந்ததே என்று ஞாபகப் படுத்தி,

முந்திய நாள் இரவில் சூரியகுமார் அந்த வீட்டுள் நுழைய முயற்சித்ததையும்,

அப்போது போலீசார் அவனைப் பிடிக்க முனைந்ததையும்,

டிமிக்கி கொடுத்துவிட்டு அவன் மாயமாய் மறைந்து போனதையும்,

குட்டி வினைச்சொல் தலைப்புகள், ஆச்சரியக்குறிகளுக்கிடையே விவரமாக விரவி,

சூரியகுமாரைப் பற்றித் துப்பு கொடுக்கிறவர்களுக்கு வெகுமதி காத்திருக்கிறது என்று டி.ஐ.ஜி-யின் அறிக்கையையும் வெளியிட்டிருந்தது.

படிக்கும்போது ஒரு சுருக்கு இறுகுகிறது என்ற எண்ணம் வந்தது. வெளிச்சம் போட்டால் எல்லாம் 'டப்டப்' என்று அறுந்துவிடும் என்ற நம்பிக்கையும் ஓடியது. பாதி பயம், பாதி உவகை!

இருந்தாலும் சம்பவங்களின் தொடர்புகள் அவனை எங்கேயோ இழுத்துக் கொண்டு போவதாக நினைவு வர, மனம் கொஞ்சம் கலவரப்பட ஆரம்பித்தது.

பரபரப்போடு பேப்பரை மூடி, கீழே குதித்து எதிரே ஸ்லோ-மோஷனில் வந்த கிராமத்துக்காரரைப் பார்த்து ஒரு பேக்குப் புன்னகை புரிந்து, கோவிலுக்குப் பின்னால் சில்லறை தெய்வங்கள் சிதறிக் கிடக்கும் விஸ்தாரங்களில் போய் உட்கார்ந்து கொண்டான்.

வெய்யில் அவனை அப்பளம் சுட்டது. வெள்ளிக்கிழமை படையல்கள் வேகிக் கொண்டிருக்க, கோவிலைச் சுற்றி ஆட்கள் சிலும்பிக் கொண்டிருந்தார்கள்.

வெளிப் பிரதட்சிணம் செய்த ஓர் ஆசாமி அவனைச் சிறிது பார்த்துவிட்டு, இரண்டாவது சுற்றின்போது அவன் பக்கத்தில் வந்து சிநேகமாகப் புன்னகை செய்தான்.

—பூவலிங்கங்க! பாண்டித் தெருவிலே இருந்தேன்.

அவனது மானச உடல் இரண்டடி மேலே போய்க் கீழே விழுந்தது.

—அப்படியா? அப்படியா? யாருன்னு தெரியலியே! குரு குட்டையைக் குழப்பிச் சொன்னன். பூவலிங்கம் நம்பிக்கையில்லாப் புன்னகை புரிந்தான்.

—திண்ணீறு பூசியிருக்கேனே! அடையாளம் தெரியாது. நீங்ககூட மாறிட்டீங் களே! பக்திமான் ஆயிட்டீங்க! நானும் மாறிட்டேன்! அந்த விஸயத்திலே ஐயாவுக் குத்தான் புண்ணியம் உண்டு. ஐயா மட்டும் போலீசிலே காட்டிக் கொடுக்காட்டி,

நான் கடத்தல்லியே இருந்திருப்பேன். பணத்தைக் குடிலேயும், கூத்தியிலேயும் செலவழிச்சிருப்பேன். கடவுள்தான் ஐயா ரூவத்திலே வந்து காப்பாற்றினுருங்க! இப்போ கல்யாணம் கட்டி இந்த ஊர்க் கழனிலே வேலே பார்க்கிறேன். சம்சாரம் உண்டாயிருக்காங்க! ஊருக்குப் போயிருக்காங்க.

குரு குழம்பினுன். வேஷம் பலிக்கவில்லே. எவ்வளவு எளிதாகக் கண்டுபிடித்து விட்டான்.

—இப்போ ஞாபகம் வருதுங்க! ஏதோ நடந்திடுத்து. மறந்துடுங்க! போலீசிலே உங்களே விட்டிருக்க மாட்டாங்களே!

— மாட்டாங்கதான்! செலவழிச்சேன்! பத்து பச்சை நோட்டைத் திணிச்சப் புறந்தான் இன்ஸ்பெக்டர் — இந்த ஊர்லே தலே காட்டாதே போன்னு வெளீல துரத்திட்டாரு. கேஸ் இல்லாமப் போச்சு!

— இன்ஸ்பெக்டர்.... என்று சொல்லி குரு நிறுத்தினுன். அவனுக்குத் தெரியாமல் அவரும் பலவிதங்களில் சம்பாதித்திருப்பது ஒரு நியாயமில்லாத கோபத்தை உண்டு பண்ணியது.

— நல்லா சம்பாதிச்சாரு ஸார், அந்த இன்ஸ்பெக்டரு! ஆனு பத்தீங்களா? இவ்ளோ சம்பாரிச்சாரே, அனுபவிக்க முடிஞ்சுதா?

— என்னுச்சு? அதானே!

— தெரியாதுங்களா?

— அசாமுக்கு மாத்திட்டானுங்க!

— ஆமாங்க! மாத்தல் பண்ணினுங்க! அப்புறம் நடந்த விஸயம் தெரியாதா?

— என்னுச்சு?

— கல்கத்தாவிலே கார் விபத்துங்க! அவரும் சம்சாரமும் ஒரே நொடியிலே செத்துட்டாங்க.

குருவின் பார்வை உறைந்தது.

— நீ சொல்றது நிஜமா?

— ஆமாங்க! இரண்டு வாரத்துக்கு முன்னுடி பேப்பர்லே வந்துச்சாமே? எனக்கு ஒரு ஏட்டையா சொன்னுரு! ரிடேர் ஆயிட்டாரு! நம்ப பக்கத்து ஊருதான் எல்லாங்குப்பம்! இப்போ வெவசாயம் செய்யருரு.

— என்ன சொன்னுரு?

— இந்தாடா பூலிங்கம். சீத்தாப்பதி இவ்ளோ சம்பாரிச்சாரே, அவரு போனப் புறம் அனுபவிக்க குளந்தை இல்லேடா! அவரு சித்தப்பாரு மவன் ஐ. ஜி-க்கு மனு கொடுத்திருக்காரு! சீத்தாப்பதிக்குச் சேர வேண்டிய தொகையெல்லாம் என்னண்டை கொடுத்திருங்கோன்னு! மனுசன் ஆடினுண்டா ஆட்டம்! கடைசீல கடவுள் ஒரு வாரிசு கூடக் கொடுக்காமல் போய்ட்டாருடான்னுரு! அவரு சொல்லித்தான் எனக்கு விஸயம் தெரியும், போங்களேன்!

இன்னெரு படி குருவை யாரோ கீழே இறக்கினுர்கள்.

அவனது சாட்சிகள் அழிந்து கொண்டிருந்தார்கள்.

இந்தச் சாட்சி எவ்வளவு பெரிய சாட்சி! எவ்வளவு முக்கியமானது! இந்தச் சாட்சி ஒரு வார்த்தை சொன்னுல் போதும், எடுத்த கேஸ் தவிடு பொடியாகிவிடும்!

மார்பு அடைத்தது. கண்ணே மூடி உள்ளே ஆழத்தில் வேதனேயை அனுபவித்தான்.

— சாமி கும்பிட வந்தீங்களா?

— ஆமாம்பா!

— இன்னிக்கு என் தம்பி சம்சாரம் பொங்கல் வக்குதுங்க! பிரசாதம் வாங்கிக் கிட்டுப் போங்க.

— சரி.

பொங்கலேச் சாப்பிட்டதில் சிநேகிதம் வலுத்தது. வீட்டுக்கு அழைத்துப் போனுன். குருவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு பாமரத்தனம் உள்ளவனு அப்போது கள்ளத்தனத்தில் ஈடுபட்டிருந்தான்?

தொடர்ச்சி 121-ம் பக்கம்....

....40-ம் பக்கத் தொடர்ச்சி

வீட்டில் எங்கேயோ சரக்கு வைத்திருப்பான். வாசனை வீசியது. போட்டோவில் பெண்டாட்டி ராக்குடி ஜடவில்லை தரித்துக் கொண்டு மூஞ்சியை ஒரே உக்கிரமாக வைத்துக் கொண்டிருந்தாள்.

போட்டோவைத் தொட்டாலே சீறி விழுவாள். பூவலிங்கம் சமாளித்திருக்கிறான். பிரசவத்துக்கும் அனுப்பிவிட்டான்.

ஓலைக் கூரைக்குக் கீழே பச்சை மண் தரையில் இருந்து கொண்டு ஒரு பாமர உபசரிப்பில் ஆழ்ந்ததில் எல்லாம் குளு குளுப்பாக இருந்தது.

மத்தியான ஒரு மணிக்குள் அவர்கள் சிநேகத்திற்கு இரண்டு வேர் தோன்றி மேலே இரண்டு இலை முளைத்து விட்டது.

மணி மூன்று வரை இவனை நம்பலாமா, கூடாதா என்று மனம் அலுத்துக் கொண்டிருந்தது.

பிறகு வாழ்க்கையில் யாரையாவது நம்பத்தான் வேண்டும் என்ற ஒரு சித்தாந்தம் அவனை ஆட்கொள்ள,

— பூவலிங்கம்! உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும், என்று தயங்கியவாறு ஆரம்பித்தான்.

— சொல்லுங்க! என்று குழையாகக் குழைந்து உட்கார்ந்தான் பூவலிங்கம்.

யோசனையோடேயே குரு ஆரம்பித்தான். மெள்ளச் சுருக்கமாகத் தனக்கு நேர்ந்துள்ள விசித்திரக் கஷ்டத்தைக் கூற,

பூவலிங்கம் ஆன்னு கேட்டுக் கொண்டிருக்க,

— நீங்கதான் உதவி செய்யணும், பூவலிங்கம்! போலீஸ்லே போயி நான் சூரியகுமார் இல்லே. அவன் இன்னொருத்தன். ரெண்டு பேருக்கும் உருவம் ஒத்துமையாயிருக்கு! அதை வச்சு எனக்குத் தொந்தரவு கொடுக்கிறாங்கன்னு சொன்னாப் போதும்.

— அவ்ளதானே! என்று வேகத்தோடு எழுந்தான் பூவலிங்கம். பட்டை போட்டது போல் ஓர் அசட்டுத்தனமான வீரம் எகிறி வந்தது.

— நீங்க சூரியகுமார் இல்லே! அதைத்தானே சொல்லணும்? சொல்லி நிருபிச்சு ஏ, பொட்டப் பசங்களான்னு சொல்லிட்டு வரேன். (மூன்றெழுத்து) எவன்டாவன் கேஸ் புடிக்கிறான் (மூன்றெழுத்து) மண்டேலே மசாலா இருக்காடா? (அதே ரீதியில் கீழ்ப் பகுதிக்கு ஒரு வாக்கியத்தைக் கூறினான்).

சுவர்க் காலண்டரிலிருந்த வள்ளுவருக்கு உயிர் இருந்தால் அவன் தமிழ்களைக் கேட்டு லெமூரியாவுக்கு ஓடியிருப்பார்.

விளாசித் தள்ளினான்.

— நீங்க இங்கேயே குந்திக்கிட்டிருங்க! நா வேலங்கரைக்குப் போய் அவங்க கண்ணிலே விரலை ஆட்டிட்டு வர்றேன். நாளைக்கு இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி., ஐ. ஜி. எல்லாம் ஒங்கிட்டே வந்து மன்னிப்புக் கேட்பான், பாரு! முன் கதவை ரெண்டையும் சாத்திட்டுப் போறேன். யாரேனும் பார்த்துடப் போறானுங்க.

என்று சொல்லி, கதவு இரண்டையும் சாத்திக் கொண்டு, வாசலிலெல்லாம் திட்டிக் கொண்டே வேலங்கரைக்குப் புறப்பட்டுப் போனான். பத்து மைல் தூரந்தான்! சாயங்காலத்திற்குள் திரும்ப வேண்டும்.

அவன் சொன்னதென்னவோ குருவுக்குத் தைரியமாக இருந்தது. அந்தப் புளிக்கும் வார்த்தைகளை மைனஸ் பண்ணினால் இன்னும் தைரியம் கூடியிருக்கும்! ஆனால் அவற்றை அவனது பாமரத்தனத்திற்கு லைசென்ஸாக வைத்துக் கொண்டான்.

இருட்டும்போது குருவின் தலைக்குள் ஒரு சிவப்பு விளக்கு எரிந்தது.

காரணமில்லாமல் ஒரு பரபரப்பு.

எங்கேயோ அகப்பட்டது போல் ஒரு நினைப்பு!

யாரையோ நம்பினேமோ என்று பிரமிப்பு!

மண் வீட்டுக்குள் ஒரு மணி முன்னதாக இருட்டு வந்தது.

எலிகள் பந்தயம் போட்டுக் கொண்டு கண்ணாமூச்சி ஆடின.

பூவலிங்கம் போன சூட்டோடு திரும்பி இருந்தால், இதற்குள் மாமாங்கம் ஆகியிருக்கும்.

அவன் வராதது கவலைப்படுத்தியது.

முதல் கதவைத் திறந்து வாசல் கதவுக்கு வந்தான்.

கதவை இழுத்தபோது வெளியில் பூட்டியிருந்தது!

சுள்ளென்று ஓர் அசாத்திய வெம்மை கால் நுனியிலிருந்து தலைவரை பாய்ந்து அங்கே ஒரு ஸ்டவ்வைப் பற்ற வைத்தது.

பூட்டியது, பாமரத்தனமா, படுகாலித்தனமா?

'சுறுசுறு' என்று யோசித்தான்.

பூவலிங்கம் முன் அவனே பாமரனாகி விட்டது தெரிந்தது.

பூவலிங்கம் பாஷையிலே அதே இன்டொனேஷனுடன் அந்த மூன்றெழுத்தைச் சொல்லித் திட்டினான்.

அகப்பட்ட எலிபோல் அங்குமிங்கும் ஒரு விடுதலை வழியைத் தேடினான்.

கூரைகள் உயரமாக இருந்தன. வாசலும் புழக்கடையும் ஒரே கதவு வழிதான். ஒன் - வே வீடு.

பூவலிங்கத்தின் சம்சாரம் முறைத்துக் கொண்டிருக்க, கல்யாணப் பானைகளையும், உலைப் பானைகளையும் அவள் முன்பாக ஒவ்வொன்றாக எடுத்து வந்து அடுக்கி வைத்தான்.

பானை உடையாமலிருந்தால் ஏறலாம்.

முறைகெட்டு ஏறியதால் ஒரு பானை உடைந்தது. பிறகு, 'புத்தி புத்தி' என்று சொல்லி ஜாக்கிரதையாக ஏறினான். கூரை கையில் அகப்பட்டது.

பனை ஓலையைக் கேவலமாக நினைக்கப் போய் அவை ஒற்றுமையுடன் யானை பலம் காட்டிக் கொண்டிருந்தன.

பூவலிங்கம் சம்சாரத்திடம் — ஸாரி, என்று சொல்லிவிட்டு அவளுடைய அரிவாள்மனையை எடுத்து வந்தான்.

கூரையின் நார்களை அறுத்து, ஓலைகளை நகர்த்தி, அ. மனையைக் கடாசி, வீட்டுக்கு ஓங்கி ஒரு 'டா டா' சொல்லி, கூரை ஓட்டை வழியாக வெளியே குதித்தான்.

லேட்டாக எழுந்த கிராமம், சீக்கிரமாகவும் உறங்கத் தொடங்கியது.

அந்தக் கிராம வீடு ஒவ்வொன்றுக்கும் ஐம்பது பல்புகள் போட்டாலே பாதிக் கோவணம் கட்டிய மாதிரி.

இரண்டு பதினைந்து வாட்டுகள் என்ன செய்யும்? உழவு மாடுகளைப் போல் நோஞ்சானாக வேலை செய்து, உள்ளே இருப்பவர்களை நடமாடும் பிசாசுகளாகப் பாதி இருட்டடித்துக் காண்பித்தது.

வீடுகள் இப்படி இருக்கும்போது, தெருக்களோ? பஞ்சாயத்து வாழ்க! கம்பங்கள் எரியவில்லை!

அக்கறையாக நடந்து, இருட்டுக் கத்தரிப்புகளாகத் தோன்றும் நாய்களைப் புறக்கணித்து, ஊரைக் கடந்ததும் நடையைக் கூட்டி, கழனி வெளிகளில் குறுக்கே பாய்ந்து, சாலைக்குப் பக்கமாக, ஆனால் அதைப் பார்க்கும்படி வாகாகப் பதுக்கலில் அமர்ந்து கொண்டான்.

நினைத்தது வீணாகவில்லை.

அந்தப் பிரதேசத்தில் பால் போல் ஒளியைப் பீச்சிக் கொண்டு போலீஸ் ஜீப் வேகமாக வந்தது.

ராத்திரிப் பூச்சிகள் அதை நோக்கிப் படுவேகமாக முட்டிக் கொண்டன.

கழனிக்குள்ளே நீளும் ரஸ்தா ஆதலால் ஆயிரம் திருப்பங்களைத் திருப்பிக் கொண்டு, சில சமயம் வந்த வழிக்கே திரும்புகிற பாவனையை ஏற்படுத்திக் கொண்டு,

ஜீப் அவன் முன்னால் இருக்கும் சதுப்பு நிலத்திற்கு வர,

பின் பக்க டயர் இரண்டும் ஸ்வைன்ன் என்று விஷ்ணுச் சக்கரம் சுற்றத் தொடங்கின.

சதுப்பு நிலத்துண்டுகள் மாணவாரியாக இரைத்துக் கொண்டு ஓடின.

துத்தேறி என்று டிரைவர் இறங்கினர்.

ஏழெட்டு போலீஸ் நிழல்கள் துப்பாக்கி நிழல்களுடன் இறங்கின.

— ஏம்பா! இந்நேரம் வரை அவன் இருக்கப் போறுனு? வீட்டைப் பூட்டி வச்சிருக்கேன்னியே பூட்டி! என்றது ஒரு நிழல்.

— நீங்க ஜீப் கிடைக்கிற வரைக்கும் வரமாட்டேன்னீங்க! ஒரு டாக்ஸியைப் புடிச்சி முன்னுலேயே வந்திருக்கலாமில்லே! இம். இம். நாலு பேர் என்னேடு ஜல்தியா வாங்க. ஊர் இதா இந்தாத்தான்!

இது பாமரனின் குரல்!

எல்லோருமே இறங்கிப் போக, அந்த டிரைவர், வண்டியைக் கிளப்பும் வசங்களைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருந்தார்.

ஆற்றுப் படுகை முழுதும் வெள்ளி மணல்! மருந்துக்குத் தண்ணீர் கிடையாது.

அதன் கரையில் ஏகாந்தமாக இருந்த சின்னக் காரைக் கட்டடத்துள் அவன் அடுத்த பகற்பொழுதைக் கழித்தான்.

கட்டடம் ஓர் ஐம்பது வருடத்திய சமாதி. ஆறடிக்கு ஏழாக அறை போல் தோற்றம். அதன் நடுவில் இருந்த லிங்கம் எடுபட்டு, அந்த இடம் புண்ணுக இருக்க, அதைச் சுற்றிவர ஆட்டாம் புழுக்கைகள் சிதறிக் கிடந்தன. லிங்கம் அயல்நாடு போயிருக்கலாம்.

மூன்று நாளைய தனிப்பு அவனைப் பாதித்திருந்தது. அன்றைக்குக் காலையி லிருந்து சாப்பாடும் இல்லே. மனித வாசமும் இல்லே. ஆதி மனிதனுக இருந்தான்.

புழுக்கைகளோடு சேர்ந்து ஓரமாய்ப் படுத்திருக்க, பகல் பொழுது போகவே மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தது. படுகையில் மேய்ந்து கொண்டிருந்த ஆடுகள் அடிக்கடி வந்து எட்டிப் பார்த்து அவனைத் திடுக்கிட வைத்துக் கொண் டிருந்தன. அவற்றின் உரிமைகளுக்கு அவன் ஓர் ஆக்கிரமிப்பு!!

பொழுது சாய்ந்து இருள் நன்ருகக் கறுக்கியதும், எழுந்து வேட்டியால் இராமலிங்கர் வேஷம் போட்டுக் கொண்டு கால் போனபடி நடந்து போனுன்.

வெகு சீக்கிரத்தில் பொட்டு வெளிச்சங்களுடன் ஒரு விஸ்தாரமான ஊர் அவனை வரவேற்றுக் கொண்டிருந்தது.

முதல் காரியமாக பேப்பர் படிக்க வேண்டும். அவன் கதையின் தொடர்ச்சி யைப் பார்க்க வேண்டும்.

கிராம அந்தஸ்தை விட்டு, சிறு நகர அந்தஸ்தை ஏற்க முயன்று கொண்டிருந்த ஊர்! அரிக்கேன் விளக்கும், எலெக்ட்ரிக் விளக்கும் போட்டி போட, சுற்று வட்டார கிராமங்கள் அங்கே வந்து கூடி, விற்று, வாங்கி, கலர் குடித்து, டெண்ட் சினிமா பார்த்துத் தங்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.

பஜார்கள் குறுகலாய்க் கசகசத்துக் கொண்டிருந்தன. பாரவண்டிகள் உழுது தரையைப் புழுதியாக்கி யிருக்க, ஜனங்கள் வேண்டாத கூச்சல் போட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

எட்டு மணிக்குமேல் சத்தங்கள் மெலிந்து போய் இங்கும் அங்குமாய் உயிர் விட்டுக் கொண்டிருந்தன.

மெதுவாக நிழல்களில் தேங்கி வந்து, சண்முகாத்தா சாப்பாட்டுக் கடையில் புகுந்து இரண்டு பிளேட் எக்ஸ்ட்ராவோடு ஒரு சாப்பாடு சாப்பிட்டான் போதாது. சண்முகாத்தா முழிக்குப் பயந்து எழுந்து விட்டான். கடைசி விருந்தாளி! மிச்சம் சொச்சம் வழித்தது அவ்வளவுதான்!

வெளியே சோடாக் கடையில் நல்ல வேளையாக ஒரு அறியாப் பொண் இருந்தாள். அப்பாரு ஒன்னுக்கிருக்கப் போயிருப்பார்.

பிளவுஸின் மிருதுவான மேடுகளைப் பார்த்து அரை செகண்ட் இன்பம் கண்டு விட்டு, அன்றைய மாலைப் பத்திரிகையை அவசரமாக வாங்கிக் கொண்டு அதைவிட அவசரமாக நிழலுக்குப் போனுன்.

ஊரின் கடைசி எல்லேயில் ஒரு விளக்குக் கம்பம் நின்று கொண்டிருந்தது. அதன் எட்டத்தில் நின்று கொண்டு, பேப்பரைத் திறந்தான்.

இரண்டாவது பக்கத்தில் அவன் கதை தொடர்ந்திருந்தது

முந்திய இரவில் அவன் அம்மன் கோவில் கிராமத்தில் அகப்பட்டுக் கொண்டதும், போலீஸ் வருமுன் கூரையைப் பிய்த்துக் கொண்டு தப்பி விட்டதும் விவரிக்கப்பட்டு இருந்தது.

அடுத்த செய்திதான் அவனை உலுக்கி விட்டது.

மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவு வாங்கி, ஊரில் அவன் குடியிருந்த வீட்டைத் திறந்திருந்தார்கள்.

உள்ளே, ஒரு லட்ச ரூபாய் (அட, பாவிகளா! மீதி ஐம்பதை அரசாங்கத்திற்குத் தெரியாதபடி சுருட்டிக் கொண்டீர்களா?), அயல் நாட்டு வாட்ச்சுகள், பிளேடுகள், டேப் ரிக்கார்டர்கள், போட்டோ ஆல்பங்கள் (எண்ணிக்கை இல்லை. பாதியைக் கணக்கில் கொண்டு வராமல் இவர்களே சுருட்டி இருப்பார்கள்) இவையெல்லாம் கைப்பற்றப்பட்டிருந்தன.

ரத்தக்கறை படிந்த இரண்டு கோணிகளும் கைப்பற்றப்பட்டன. கூடத்துச் சுவரில் ரத்தப் பொட்டுக்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டன. சமீபத்தில் சூரியகுமார் யாரையாவது கொலை செய்து, உடலை அப்புறப்படுத்தி யிருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. போலீசார் தீவிரமாகப் புலன் விசாரித்து வருகிறார்கள். சுமார் மூன்று வாரங்களுக்கு முன் சூரியகுமார் ஒரு கட்டைத்தொட்டியிலிருந்து ஒரு கைவண்டியை இரவில் வாடகைக்கு எடுத்துப் போனார் என்று தெரிகிறது. கட்டைத்தொட்டிக்காரரை போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

டி. ஐ. ஜி. தம் விசேஷ பேட்டியில் சூரியகுமார் பல பெயர்களில் பல இடங்களில் வீடு எடுத்துத் தங்கி இருந்தான் என்று தெரிகிறது. அங்கங்கே அவனுக்கு ஒரு மனைவியும் உண்டு என்று தெரிகிறது. எல்லாவற்றையும் விசாரித்து வருகிறோம் என்று கூறினார்.

கோணிகளை எரிக்காமல் விட்டது எவ்வளவு தப்பிதம்?

பேப்பரைக் கிழித்துப் போட்டான். இருட்டுக்குள் நுழைந்து ஒரு திறந்த வெளியில் உட்கார்ந்தான்.

கடைசிச் சுருக்கு விழுந்திருந்தது.

அவனது நம்பிக்கையின் கடைசி பலத்திலும் ஓர் ஓட்டை!

நினைவுகளைச் சீர்செய்ய முடியாமல் அழுதான்.

பதினைந்துவயதுக்குள் தான் இதுபோல் அடங்க முடியாமல் விக்கி விக்கி அழுதிருக்கிறான். யாரும் அவனைச் சமாதானப்படுத்த முடியாது.

பணம் போய்விட்டது.

கொலைக் குற்றமும் வந்துவிட்டது.

யாரும் அவனுக்குச் சாட்சி சொல்ல மாட்டார்கள்.

அடையாளம் சொல்லவும் மாட்டார்கள்.

ஓர் இருட்டு அறைக்குள் போய் எல்லாக் கதவுகளையும் தானே மூடிக் கொண்டது போலிருந்தது. வெளியார் திறந்தால்தான் உண்டு.

உதவி கிடைக்காத ஓர் அறையில் மாட்டிக் கொண்டு, அதன் நினைவோடு அணு அணுவாகச் சாவதைவிடக் கொடியது என்ன இருக்கிறது?

கேஸ் அவன் மீது என்ன அழகாக ஜோடித்துக் கொண்டு வருகிறது?

தானாகக்கிளர்த்துவரும் புரைபோல்...

• ஒருவன் கட்டிலில் புரண்டு கொண்டிருக்கும் நேரமே வெளியே சென்று கொண்டிருக்க வேண்டிய நேரம்.

—வெல்லிங்டன்.

• அன்பு என்ற மொழியை ஊமையர் பேச முடியும். செவிடர் கேட்டுப் புரிந்து கொள்ள முடியும். —போவீ.

• நாம் வாளி வாளியாகப் பிறருக்கு ஆலோசனை சொல்லுவோம். ஆனால் பிறருடைய ஆலோசனையில் நாம் குன்றுமணிதான் எடுத்துக் கொள்வோம்.

—ஆய்ஜெர்.

—தொகுப்பு: இரா. மோகன்

அவனது வாழ்க்கை முறைகளும், சமீபத்திய சம்பவங்களும், இந்தக் கேஸில் எவ்வளவு அழகாக, ஜாடிக்கு மூடி போல் பொருந்திக் கொள்கின்றன.

ஒருவர் வேண்டுமென்று நினைத்து ஜோடித்தால்கூட, இவ்வளவு சரியாக அளவாக, 'க்ளக்' என்று சத்தம் ஏற்படும்படி ஜோடித்திருக்க முடியாது.

இப்படி நன்கு பொருந்துகிறதனுல்தானே இரண்டு வெவ்வேறு ஆசாமிகளின் வெவ்வேறு கதைகளை ஒட்டுச்செடியில் பிணைப்பது போல் சேர்த்து, இரு ஆசாமிகளுக்கும் பொருந்தும்படியாய் ஓர் ஒருமைக் கதையை இந்தப் போலீசார் உண்டு பண்ணப் பார்க்கிருர்கள்.

அவன் அகப்பட்டால் போதும் போல இருக்கிறதே! அவனுக்கு அனுசரணையாக ருசுக்கள், சாட்சிகள் எல்லாம் சேர்ந்து, வழக்குத் தொடர்ந்து குற்றங்களை நிருபித்துத் தூக்குமேடைக்கு அனுப்பி விடுவார்கள் போல இருக்கிறதே!

அல்லது இல்லாத உண்மைகளையும், ரகசியங்களையும் சொல்லச் சொல்லி வற்புறுத்தி, பாலுசாமியைப் போல் சித்திரவதை செய்து சாகடித்தாலும் அடித்து விடுவார்களே!

நடப்பது எமர்ஜென்ஸி. பத்திரிகையில் செய்தி வருவதற்குக்கூட வகையில்லை.

அல்லது நாய் வேட்டையாடுவது போல் அவனை வேட்டையாடிச் சுட்டுக் கொன்றுவிட்டு, இருதரப்பாருக்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையில் அவர் கொல்லப்பட்டார் என்று பொய்ச் செய்தியை வெளியிட்டாலும் இடுவார்கள்.

எது எப்படியாயினும் அவனுகப் போலீசில் சரணடைந்து நான் அவனல்ல, வேறு ஆள் என்று சொல்லித் தப்பிப்பது முடியாத காரியம். அதைச் செய்யவும் கூடாது.

அப்படி ஒருவேளை அவர்களுக்கு அவன் வேறு ஆசாமி என்று சந்தேகமறத் தெரிந்தால்கூட, ஒரு பரபரப்பான கேஸை சீக்கிரம் முடிவு செய்வதற்காக அவனையே நிஜ ஆசாமி என்று சொன்னுலும் சொல்லி விடுவார்கள். ஒரு கடற்கரை நகரத்தின் பலவீனமான இன்ஃபார்மரின் வாழ்க்கை எப்படிப் போனுல் அவர்களுக்கு என்ன கவலை!

எமர்ஜென்ஸியில் போலீசாரும் நிர்ப்பந்தங்களுக்கு ஆளாகிருர்கள். பிரபல குற்றங்கள் புரிந்தவர்களை அவர்கள் சீக்கிரம் கண்டுபிடிக்காவிட்டால் அவர்கள் மீதே ப்ளாக் — மார்க்குகள் விழுந்து விடும்.

நல்லவேளை, ஓர் அப்பாவி போல் இல்லாமல், சீதாபதியின் துணையில் போலீசைப் பற்றிய எவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்திருந்தான் அவன்!

இவை தெரிந்திராவிட்டால் உண்மை ஜெயிக்கும் என்று, தத்துவத்தில் நம்பிக்கை வைத்து போலீசாரிடம் போய்க் குதித்திருப்பான். நிச்சயம் உண்மை ஜெயித்திருக்கும் — அவன் தூக்குமேடையில் அகப்பட்டு இறந்த பிறகு.

நான் வாழ்வேன் என்று நினைத்தான் அவன். என்ன காரணம் கொண்டும் நான் வாழ்வேன்!

கமலத்தைச் சீக்கிரம் பார்க்க வேண்டும்.

பின்புறத்தில் லாரிகள் எழுப்பும் 'கிச்'சென்ற சப்தம் அங்கே ஒரு ஹைவே இருப்பதைக் காட்டிக் கொடுத்தது.

எழுந்து போகும்போது தூறல் கொட்ட ஆரம்பித்தது. ஹைவேயைக் கண்டு பிடிக்கும்போது மழை.

மரத்தடியில் ஒதுங்க, அது ஐந்து நிமிடம் பேசாமல் இருந்துவிட்டுப் பிறகு அவனை அபிஷேகம் செய்ய ஆரம்பித்தது.

நனைந்தான்.

எட்டத்தில் ஒரு டைவர்ஷன்! வாகனங்கள் சாவதானமாகக் கீழே இறங்கி, பிறகு சாவதானமாக மேலே ஏறின.

யுக்தி தட்டி எழுந்திருக்க, டைவர்ஷன் பள்ளத்தில் ஒதுக்கலாக நின்றுன்.

லாரிகள் ஊஞ்சலாக ஆடி பள்ளத்தில் ஊர்ந்து போயின.

பதினைந்து நிமிடத்தில் ஒரு விரைவு வண்டி! கண்ணுடிகளை மூடிக் கொண்டு, ...பாவினை இழுத்துப் போர்த்திக் கொண்டு ஆசாரமாக வந்தது.

பள்ளத்தில் வந்ததும் ஸ்பிரிங் போல் எகிறி ஏணியைப் பிடித்து மேலேறினன். மழை பொத்துக் கொண்டு அடிக்க, டார்பாலினின் மேடு பள்ளங்களில் கங்கைகளும் யமுனைகளும் ஓடிக் கொண்டிருந்தன.

கீழே படிந்து, டார்பாலினில் இடைவெளி உண்டாக்கி இக்ளூவுக்குள் நுழைவது போல் உள்ளே போய் தடதடக்கும் சாமான்களோடு சேர்ந்து கொண்டான்.

முதுகடியில் குளிரான தண்ணீர் எவ்விதமோ ஓடிக் கொண்டிருக்க, தூக்கமுமில்லாமல், விழிப்புமில்லாமல் இடையில் பிணுத்திக் கொண்டிருந்தான்.

எல்லா ஓசைகளும் திடீரென்று நின்றதால் எழுந்த நிசப்தம் அவனைத் தட்டி எழுப்பியது. பஸ் நின்று கொண்டிருந்தது. மழை அரும்புத் தூறலாய் ஓசை இல்லாமல் உதிர்ந்து கொண்டிருந்தது.

— மேலே கூடை இருக்கப்பா!

— அது வேறேயா? பேஜாரு....

மேலே ஒரு யாரோ ஏறினன். டார்பாலினை அவன் அவிழ்க்க, குரு குறுகிப் போய் காலையும் கையையும் ரெஸ்ட் எடுக்கும் தவளை போல் உடம்புக்குள் இழுத்தான். மார்பு படபடத்தது.

— அட, அத ஏண்டா அவுக்கிறே? இம்மாத்தூண்டு கூடைடா! ஓரமாருக்கு! வலிடா!

வலித்தான். டார்பாலின் துவாரத்தில் நுழைந்து, கூடை வெளியே போயிற்று.

சில சில்லறைச் சத்தங்களுக்குப் பிறகு வண்டி புறப்பட்டது.

தப்பித்தோம். நினைப்பாக இருக்க விரும்பினன். கையில் ஸீகோ 3-30-ல் மின்னியது. அடுத்த ஸ்டாப்பில் இறங்கிவிட வேண்டும். போது விடிந்தால் ஆபத்து.

அரை மணியில் பஸ் மெதுவாக, பரபரப்போடு அவன் வெளியே வந்தான். ஏணி வழுக்கியது. கவனமாக இறங்கி கடைசிப் படியில் நின்று, பஸ் இன்னும் மெதுவானதும், கீழே குதித்து, உருளாமல் சமாளித்தான்.

கும்மிருள்!

பஸ் இன்னும் சிறிது போய், கீழே ஓர் ஆளை இறக்கிவிட்டு, குஷாலாகப் போக ஆரம்பித்தது.

இறங்கின ஆளும் ஏதோ ஒரு திசையில் தாராளமாக நடந்து போனன்.

இருட்டைப் புரிந்து கொண்ட பிறகு, அது அந்த வட்டாரத்தை அவனுக்குப் புரிய வைத்தது.

முக்கூட்டுச் சந்திப்பு அது! நடுமேடையில் திசைகாட்டி! வலதுபுறம் மூன்று மைல் போனல் கமலம் இருக்கும் ஊர்.

தொடரும் துரதிருஷ்டத்தில் ஒரு சின்ன அதிர்ஷ்டம்.

கடுகி நடந்து நாலரை சுமாருக்குக் கதவைத் தட்டினன். கமலம் திறந்து அதிசயத்தோடு மாடிக்கு அழைத்துப் போனள். வெளிச்சத்தில் ஈரமாயும் அலங்கோலமாயும் இருந்தான். துடைத்துவிட்டு, டிரஸ் போட்டுச் சுத்தமாக்கி அவனைக் கட்டிலில் உட்கார்த்தியதும்,

கண்ணீர் பீச்சிக் கொண்டு அவன் அந்த மெத்தையில் அங்குமிங்கும் பைத்தியம் போல் புரண்டான்.

— என்னங்க? என்றுள்.

குதிரை புரள்வது போல் உடம்பைப் புரட்டி, ஆயாசத்தைப் போக்கியதும் அவளைப் பார்த்தான்.

— கமலம்! இந்த மெத்தையில் இப்போது புரள்வது கடைசி தடவை! இனி என்னுல் புரள முடியுமோ, முடியாதோ?

— என்ன விஷயம்?

—நான் ஒரு இக்கட்டிலே மாட்டியிருக்கேன்.

— என்ன இக்கட்டு?

— சொல்றேன். உனக்கு சித்தப்பா ஏதாவது பேப்பர் படிச்சுச் சொன்னுரா?

— அவருக்குக் கண் பத்தாதே! பேப்பர் வருத்தறதில்லே.

—கமலம்! என்னிடம் எதுவும் கேட்காதே! என் மனசு சரியில்லே. சந்தர்ப்பம் வந்தபோது சொல்றேன். நான் ஒரு பெரிய ஆபத்திலே இருக்கேன்னு மட்டும் தெரிஞ்சுக்கோ, போதும்... போலீஸ் என்னைத் துரத்திக்கிட்டு வராங்க! இவ்வளவுக்கும் நான் ஒரு குற்றமும் செய்யலே....

கமலம் கையைப் பிசைந்தாள். பேசத் தெரியவில்லை.

— இப்போ நான் உடனே போயிடணும். நீயும் விடிஞ்சதும் புறப்பட்டுடணும்!

— எங்கே?

— உன் சிநேகிதி சமந்தகாமினி எங்கே இருக்கா சொன்னே?

பட்டியில் முடியும் பெயரைச் சொன்னாள்.

— அங்கே போயிடு! விஜயாவையும் கூட்டிக்க! இங்கே யிருந்தால் போலீஸ் உங்களை விடாது. வேலங்கரைக்குப் போறதாக சித்தப்பாகிட்டே சொல்லு! நேரே பஸ் பிடிச்சு பட்டிக்குப் போயிடு! அங்கே பட்டிவீரன் கோவில் இருக்கே. ஒவ்வொரு புதன் ராவுலேயும் வா! நான் முடிஞ்சா சந்திக்கிறேன். கலக்கபபடாதே! எல்லாம் நல்லபடியா முடியும்!

## மௌன விழா

பங்களூரில் வயலின் வித்வான் சௌடய்யா தினம் கொண்டாடப்பட்டது. லால்குடி ஜெயராமன் வயலின் வாசித்தார். பேசியவர்களில் யாரும் சௌடய்யாவைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

– டெக்கான் ஹெரால்ட்

அவள் அழுதாள்!

அவன் அவளிடமிருந்து, இரண்டு செட் உடைகளையும் (போன ட்ரிப்பில் கொண்டு வந்தது) அவள் வைத்திருந்த எண்பது ரூபாயில் பாதியையும் வாங்கிக் கொண்டான்.

அவளது நகைகளை ஒரு விநாடி பார்த்தபோது, அது அவளது அவசரங்களுக்கு இருக்கட்டும் என்று தோன்றியது.

இருளில் கருமை அழியுமுன் கலங்கிய கண்களுடன் வெளியேறினான்.

மாட்டுத் தாவணியும், முத்தாலம்மன் விழாவும் வருஷந்தோறும் குலாவிக் கொண்டு வரும்.

விழா கோவிலிலே! கோவிலை அடுத்த பொட்டலிலே தாவணி.

அம்பத்தாறு ஊரிலேருந்து மாடுகள் வரும். பொட்டல் வெய்யிலில் தரகர்களும் வியாபாரிகளும் நிற்பார்கள்.

—தம்பி, மாட்டைப் பிடிச்சுக்கோ, இதோ வர்றேன் என்று சொல்லிவிட்டுக் கிழவர் போனார்.

குரு மயிலைகளைப் பிடித்துக் கொண்டான். சின்ன வயசுகள்! கொம்பு சீவியிருந்தன. சும்மா நிற்காமல் '8' போட்டுக் கொண்டே வளைய வந்தன.

திரும்பி வந்த கிழவர் — தம்பி, உன்னைப் பார்த்த மாதிரி இருக்கே, என்று சொல்லி, - உன் படத்தைப் பேப்பர்லே போட்டிருந்தாங்களோ, என்று கேட்டார்.

திடுக்கிட்டான். —இருக்காதே என்று முழுங்கினான்.

— எனக்குப் பேப்பர் படிக்க வராது. பொம்மை பார்ப்பேன் என்றார்.

அவனுக்கு வியர்த்தது.

— பறிகொடுத்த மாதிரி இருக்கியே! குடும்பத்திலே கஸ்டமா? அம்மனுக்குத் தலையைக் குடு, சரியாப் போயிடும் என்றார்.

கோவில் பக்கத்தில் ஏராளமான புது மொட்டைகளைப் பார்த்தபோது தலையைக் குடுப்பதன் அர்த்தம் விளங்கியது.

தலை இருந்தால் அடையாளம் தெரிகிறது. அதை எடுத்து மீசை வைத்தால்...

மொட்டை போட்டான். மீசை வைத்தான்.

அம்மா, தாயே! என்னைக் காப்பா....

கிழவர் திரும்பச் சந்தித்தார். மொட்டையைப் பார்த்ததும் ஆச்சரியம்! ஒரு பேச்சுக்குக் கொடுத்த மதிப்பு அவரை அக்கறையாக்கியது. நம்ப வீட்டுக்குச் சாயங்காலம் போறேம். நீயும் வரே! என்றார்.

மயிலைக் காளை பூட்டிய வண்டியில் போனார்கள். கிராமம் ரொம்ப பழசு.

வீட்டில் கிழவர், கிழவி, நாற்பதுகளில் இரண்டு சோம்பேறிப் பிள்ளைகள், அவர்களுடைய சீக்கிரம் கிழமான மனைவிகள்! ஒரே ஒரு சிறுசு! 10+2+2.

மாடு, தொழுவம், வண்டி, இவற்றைச் சுற்றி அவனுக்கு வேலை.

அன்று ராத்திரி வாசலில் வைக்கோல் மெத்தையில் படுத்து அசை போட்டான். ஒரு வாரம் ஓடிப் போய்விட்டது. தினமும் பேப்பர் அவனைத் திடுக்கிட வைத்துக் கொண்டே இருந்தது. அம்மன் கோவில் பாமரனை ஏமாற்றித் தப்பிய திலிருந்து ஒவ்வொரு செய்தியாக....

அவன் மனைவி தங்கியிருந்த ஊரில் போய் போலீஸ் விசாரித்ததையும், அவள் இல்லாததையும் விவரமாக வெளியிட்டிருந்தார்கள்.

சண்முகாத்தாகூட, — போர்த்திக்கிட்டே ஒருத்தன் சாப்பிட்டான். திருட்டுமுழி இருந்தது. அவனாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லியிருந்தாள்.

அறியாப் பொண்ணு வேறு அவன் அந்த ராத்திரி அகாலத்தில் பேப்பர் வாங்கி பரபரப்பாக ஓடிவிட்டதைக் கூறியிருந்தாள்.

விசாரணை போகிற போக்கைப் பார்த்தால் இங்கே அவன் முதுகடியிலேயே போலீசார் வந்து நின்று விடுவார்கள் என்று தோன்றியது.

போகும் வழியெல்லாம் தடயங்களாக அவன் விட்டுப் போவது ஆச்சரியமாக இருந்தது.

கடைசியில் இரண்டு நாட்களாக போலீஸ் விளம்பரமும் ஒன்று வந்து கொண்டிருந்தது.

அவனைப் பிடித்துக் கொடுத்தால் ஐயாயிரம் ரூபாய்!

—நமக்கு எந்த ஊரு?

தலையாரி முதலியார் கேட்டார்.

— மதுரைங்க!

—பேசறதிலே மதுரை இல்லியே!

—அதுவா? இந்தப் பக்கம் ரொம்ப நாளா இருந்துட்டேன் அதான்!

— மொட்டை எப்போ போட்டீங்க?

— திருவினாவிலே.

'ழ' வை உச்சரிக்காமல் வேண்டுமென்று பட்டிக்காட்டுத்தனத்தைக் காண்பித்தான்.

— இதுக்கு முன்னால் என்ன வேலை பார்த்திங்க!

— தண்ணீ இழுத்துக்கிட்டிருந்தேங்க, ஒரு பெரிய மனுஷன் வீட்டிலே.

தலையாரி பேச்சிலே சூவன்னு தானு தெரிந்தது. ஓசை போடாமல் பொடி வைக்கிறார். ஐயாயிரம் இழுக்கிறதோ!

மறுநாள் மாலையில் வயக்காட்டில் நாலைந்து நபர்கள் கண்ணில் விழுந்தார்கள்.

பரபரத்து தூரத்தில் பார்த்தான்.

கிராமத்து ரோடு பிடிக்காமல் தூரத்தில் ஜீப் சமர்த்தாக நின்று கொண்டிருந்தது.



இந்திய அரசு, உலக கோப்பை ஹாக்கி பந்தயத்தில் இந்தியா வென்றபோது ஒரு நாள் விடுமுறை அளித்தது. ஆனால் 1971-ல் பங்களாதேஷ் போரில் வென்றபோது விடுமுறை அளிக்கவில்லை.

—ஜெனரல் மானெக்ஷா

அப்படியே தென்னந்தோப்பில் நண்டு போல் ஸைட் நடை போட்டான். தென்னை மரங்கள் சாமர்த்தியமாக அவனை மறைத்தன. அடுத்தது வாய்க்கால்! வாய்ப்பாக கோரம்புல்லை நீட்டி வைத்திருந்தது.

பள்ளத்தில் இறங்கி,வெகு தூரம் மேற்கே போய், வாழைத் தோட்டங்களை ஊடுருவி, அடுத்த ஒற்றையடிப் பாதையில் ஏற அவன் அங்கு வருவதற்காக காத்திருந்தது போல் இருட்டு அவனை மூடிக் கொண்டது.

ஒரு தூக்க நேரத்து பஸ்!

அந்த இரவு நேரத்தில் பஸ்ஸும் தூங்கியது. பேச்சு மூச்சு இல்லை.

யாரும் கவனிக்கவில்லை. பத்திரமாகத் தூங்கலாம்! மஃப்டி போலீஸ்காரர்கள் ஏமாந்ததைத் திரும்பத் திரும்ப நினைத்துச் சிரித்து, சிறிது உல்லாசமாகத் தூங்கினான்.

ரொம்ப நேரத்துக்குப் பின் கண் விழித்தது. பஸ் எங்கேயோ ஓர் ஊருக்குள் போய் பஸ் ஸ்டாண்டைத் தேடிக் கொண்டிருந்தது.

பெரிய டவுனில் இறங்குவதை விட இந்த ஊரில் இறங்குவது மேல்! மணியும் நாலரை!

ஸ்டாண்டில் இறங்கியதும் இரண்டு தூக்கக் கலக்கச் சிறுவர்களும் ஒரு நாயும் ஓடி வந்தார்கள். அவனது வெறும் கையைப் பார்த்ததும் திரும்பி அவசரமாகப் படுக்கப் போனார்கள்.

குருவுக்குத் தூக்கம் மிச்சம் இருந்தது. ஸ்டாண்டின் கூரை போட்ட வெறுமை காலை இழுக்க போய்ப் படுத்துக் கொண்டான்.

காலை கலகலத்ததும் உதறியடித்து எழுந்தான்.

மீசையைத் தொட்டுப் பார்த்தான்.

நேற்றைக்கு விட வளர்ந்திருந்தது. வரவர நல்லா கொழுத்து விட்டது. அப்படியே கன்னத்தை மறைத்து விட்டால் அதன் சப்பை தெரியாது. தோற்றம் மாறிவிடும்.

இப்படி ஊர் ஊராகப் போனால்கூட போலீஸை எத்தி வாழலாம். ஆனால் சாப்பிட வேண்டும், படுக்க வேண்டும்..... அவைதானே கஷ்டம்.

ஸ்டாண்ட் பக்கத்தில் பஜார் தெற்கு வடக்கில் திருகிக் கொண்டு போனது.

வசந்த விலாஸ் காபி கிளப் கமகமத்தது.

சாப்பிட்டுவிட்டுக் கருராக வெளியேறினான்.

பத்து மணிக்கு அந்த பஜாரில் ஓர் ஊர்வலம் வந்தது. ஐயப்பசாமியோ, சுப்பிரமணிய சாமியோ! அழகாக எல்லோரும் நெற்றிக்கிட்டிருந்தார்கள். சிலர் அழகாகத் தாடி வளர்த்திருந்தார்கள். சிலர் மார்பைத் திறந்து போட்டுக் கொண்டு..

கடைசியில் ஒட்டாமல் ஒருவன் போனான். குருவின் பார்வை அவன் மேல் விழுந்தது.

நடையை எங்கேயோ பார்த்தது. குட்டையான கையையும்தான். முகத்தில் தாடி என்று சொல்ல முடியாத வளர்த்தி. முகத்தைப் பார்த்தால், அட, என்னைப் போல இருக்கிறானே!

சுருக்கென்று மூளையில் ஒரு திரி பற்றியது. அந்த வேகம் எப்படி வந்தது என்று தெரியவில்லை. பாய்ந்தான் — டேய், நீயாடா?

அந்த வளர்த்தி திடுக்கிட்டான். பாய்பவனைச் சந்தேகத்தோடு பார்த்தான். பிறகு திடீரென்று அடுத்த தெருவுக்குள் பாய்ந்தான்.

குரு அவன் பின்னால் பாய்ந்தான். காலும் கையும் பரபரத்தது.

— டேய்! என்று இரைந்து கொண்டு ஓட்டமாய் ஓடினான்.

தெரு நிர்மலமாய் இருந்தது. கிழவி கீரை விற்றுக் கொண்டிருந்தாள். இரண்டு பாலகர்கள் 'இஸ்கூல்' போய்க் கொண்டிருந்தார்கள். அவன் ஓட இவன் ஓட....

தெரு பின்னே பார்த்து ஓடியது. முருங்கை மரங்கள் விருட்டென்று பின்னால் பாய்ந்தன. ஒரு டஸ்ட் - பின் 'உப்' என்று பின்னால் ஓடியது. அந்தத் தெருவின் தரை கன்வேயர் பெல்ட் போல் 'கிச்' சென்று பின்னால் பறந்தது.

—டேய், சூரிய குமார்! ஓடறுன், ஓடறுன் பிடி, பிடி.

தெருப் பிரயாணிகள் நூதனமாகத் திரும்பிப் பார்த்தார்கள். இரண்டு நாய்கள் 'லொள் லொள்' என்று இரைந்தன. ஒரு குப்பை வண்டி பாதி திரும்பிநின்றது.

—டேய், சூரிய குமார்! ஓடறுன் ஓடறுன் பிடி, பிடி!

இதே தொடர் காட்சிகள் இன்னும் இரண்டு தெருக்களில் தொடர, கடைசியில் சூரியகுமார் சரக்கென்று ஒரு சந்தில் நுழைந்தான்.



வெறுமைச் சந்து! இரண்டு தெருக்களில் புழைக்கடை.

குருவின் எல்லா அவயவங்களும் ஃபுல் ஸ்பீட்! மூர்க்கத்தனமான வேகத்தில் பாய்ந்தான். சூரிய குமாரின் கையைப் பிடித்துவிட்டான்.

—பாபி! என் வாழ்க்கையை சூனியம் ஆக்கினியே! உன்னே விடுவேனு! எல்லோரும் வாங்கோ! வாங்கோ! சூரியகுமார் அகப்பட்டுக்கிட்டான்.

தொண்டை கிழியக் கத்தி, குமாரைத் தனது கைகளுள் இடுக்கப் பார்க்க, அவன் விருட்டென்று ஒரு கத்தியை உறுவினன்.

சரமாரியாக அவன் குத்த, குரு எல்லாவற்றையும் கைகளில் ஏற்றுக் கொண்டான்.

உடலில் தீ பாய குமார் ரப்பர் தாவலில் சந்தைக் கடந்து மறைந்து விட்டான்.

கையில் ரத்தம். உடம்பில் சோர்வு! மனசில் சூன்யம். அவன் தேகத்திலிருந்து பலம் கீழே வழிந்து ஓடியது.

ஒரு வேகம்! போலீசில் உடனே தெரிவித்தால் என்ன?

பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டு நடந்தான்.

சந்து முனை வந்ததும் ஒரு யோசனை. போலீசில் சொல்லி.... அவன் கிடைக்கவில்லையென்றால்.... நம்மையே பிடித்துக் கொண்டால்.... நாம் ஒரு நாடகமாடுகிறோம் என்று குற்றம் சாட்டினால்....

ஒரு கணத்தில் சுறு சுறுப்பெல்லாம் வடிந்தது. பெரிய தப்பிதம் செய்ய இருந்தோம் என்று நினைத்தான்.

இது நேரம் வரை கைகளைப் பார்க்கவில்லை. இப்போது பார்த்தால் ரத்தம் அபிஷேகமாகிக் கள்ளிச்சொட்டுக்களாக விழுந்து கொண்டிருந்தது.

ஒவ்வொரு கைக்கும் மும்மூன்று காயங்கள்! பள்ளமானவை! ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுருதியில் எரிந்தன.

ஓடிய ஓட்டத்தில் துணிப் பையை விட்டுவிட்டான். கையில் துணி இல்லை. கர்ச்சீப் மட்டும் இருந்தது. துடைத்தான். பிழிந்தான். துடைத்தான்.

இப்போது இன்னொரு திடீர் நினைவு.

சூரியகுமார் தந்திரக்காரன்! போலீசுடன் போன் மூலமாகத் தொடர்பு கொண்டு—நீங்கள் தேடுகிற சூரியகுமார் இதே ஊரில் கையில் வெட்டுக்காயங்களுடன் இருக்கிறான். பிடியுங்கள், என்று சொல்லிவிட்டால்....



அல்லது அவனே திரும்பி வந்து பலவீன நிலையில் என்னைக் கொன்று விட்டால்..

அல்லது மற்ற ஆட்களை ஏவி என்னைப் பிடித்து போலீசில் கொடுக்க வந்தால்...

ஆபத்து எந்த வழியிலும் வாயைத் திறந்து காத்துக் கொண்டிருந்தது.

சீக்கிரம் ஊரைக் காலி செய்ய வேண்டும். எழுந்தான்.

ஓர் இரவு நேர பாசஞ்சர் வண்டியின் சௌக்கியம் எங்கே வரும்?

ஒரு ஸ்டேஷனில் குரு ஏறி உட்கார்ந்தவன் தான்!

காலையிலிருந்து சாப்பிடவில்லை. யாராவது கவனித்து விடுவார்கள் என்று பயம்.

இப்போதும் உபாதைதான்! படுத்து முனகினால் சுகமாக இருக்கும். முடியாது.

வண்டி எங்கேயோ இருட்டைத் துருவிக் கொண்டிருந்தது.

பசி வயிற்றைக் கிள்ளியது. ரத்த ஒழுகலால் உடம்பு க்ஷீணித்து விட்டது. கண் திறந்திருக்கும் போதே பிரமை வருகிறது.

ஒரு மாதிரி தூக்கத்தில் மேலாக மிதந்த பிறகு, திடுக்கிட்டது போல் கண் விழித்தான்.

வண்டி எங்கேயோ போய்க் கொண்டிருந்தது.

நேரம் காலை ஜாமமாக இருக்க வேண்டும்.

ஓர் அவுட்டரில் நின்றபோது இறங்கினான். வண்டி போனதும் மழை பிடித்துக் கொண்டது.

ஒரு கணம் கடவுள் மேலேயே கோபம்! ஒருத்தனுக்குக் கஷ்டம் வந்தால் மேலும் மேலும் வளர்த்துக் கொண்டே போவதா?

வாழ வைப்பதற்கு ஒரு நம்பிக்கை கொடுக்க வேண்டாமா?

அவன் நொந்து கொண்டதைக் கடவுள் அறிந்து கொண்டாரோ தெரியாது. பலத்த மழையை அனுப்பி வைத்தார்.

வானும் பூமியும் ஒன்ருக இணைந்தன. கால் மணியில் வெள்ளக் காடுகளாக நீர் ஓடிற்று. தெப்பலாக நனைந்து கொண்டு ஊர்ந்து போனுன்.

முதல் நாள் சாப்பிடாத பசி! காயங்களில் ஓயாத எரிச்சல்! போதாததற்கு மழை!

நடந்தான்.

ஒரு பர்லாங்கில் ரயில் நிலையத்தை அடுத்து பல கட்டடங்கள் இருந்தன. அவற்றை அணுகுவதற்குத் தகுதி இல்லாதவன் போல் தூரத்திலிருந்து ஏக்கமாகப் பார்த்தான். மனித சஞ்சாரமுள்ள இடங்களும், மனித வாசஸ்தலங்களும் அவனுக்கு வேப்பங்காய்களாகக் கசந்தன.

மனித நாகரிகமே அவனுக்குப் பெரிய விரோதி போல் தோன்றியது.

அவன் வேட்டையாடப்பட்டவன் என்று மனித வாழ்க்கைக்கு அப்பால் ஒரு மிருக வாழ்க்கையை வாழ்வதற்குத்தான் அவன் தகுதி உள்ளவன் என்று நினைத்தான்.

அவன் மனத்திலேயே அவன் மனித தரத்திலிருந்து கீழே இறங்கிவிட்டது தெரிந்தது.

கட்டடங்கள் நெருக்கியிருந்த அந்த ரயில் வட்டாரத்தை விடுத்துக் கொட்டும் மழையில் ஒரு விரக்தியோடு நடந்து போனுன்.

போது விடிந்தது. மழை நிற்கவில்லை. வாங்கிக் கொண்டிருந்தது.

மரத்தடியில் அந்தக் குடிசைப் பக்கம் போனபோது தேகம் வெட வெடத்துக் கொண்டிருந்தது.

பற்கள் கிடுக்கிக் கொண்டிருந்தன. கண்கள் குளிரில் விறைத்தன. வாய் அவனை அறியாமல்—அம்மா, என்று தீனமாய் அழைத்தது. அம்மா!

குடிசை வாசலில் நின்முன். உடல், உள்ளம், உயிர் மூன்றுமே அடைக்கலத்தைக் கேட்டன. அம்மா!

அந்த நேரத்தில் அந்தக் குடிசை வாசல்கூட ஓர் ஆதரவின் வரவேற்பு போல் காட்சி கொடுத்தது.

பாதி நினைவுடன் உள்ளே போனுன். மண் தரையில் நீராகக் கொட்டினுன். பிறகு தள்ளாமை அவன் நினைவையும் அழித்து, கண்களையும் மறைக்கத் தடால் என்று கீழே விழுந்தான்.

கண் விழித்த போது கணப்பு இருந்தது. ஆடை இல்லை

உள்ளே இருட்டாக இருந்தது.

ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தாள். முகமும் உடம்பும் சூம்பி யிருந்தன. யல் எடுப்பாக இருந்தது. முப்பத்தைந்து இருக்கும். கண்ணை மூடியே இருந்தாள். ஏழ்மை அவளது வயசான துணியிலும், மார்பின் வெறுமையிலும் தெரிந்தது. குருடோ?

— அம்மா என்ருன் தீனமாக.

—முழிச்சுட்டீங்களா?

— ரொம்ப நாழி மயங்கி இருந்தேனு?

— காலையிலே வந்துட்டீங்க! இப்போ பொளுது சாயப் போவுது!

ஆச்சரியமாக இருந்தது.

வெளியே தூறல் சத்தம் இன்னும் கேட்டது. மனசு அங்கு வந்த நிலையையும் அங்கு இருக்கும் நிலையையும் கணக்கெடுத்தது. அவனது மத்திய தர வாழ்க்கைக்கு இப்போது அவன் எருக் கிடங்கில் இருப்பது போன்ற உணர்வு. இதை நிராகரிக்க மனத்திற்கு வலு இல்லை. ஒரு பெரிய சக்தி அவனை வதைப்பது போலவும், அவன் அதை ஏற்றுக் கொள்வது போலவும் எண்ணினுன்.

— எப்படி சூடு வருது? மருண்டவாறு கேட்டான்.

— உங்க பக்கத்திலே தீச்சட்டி வச்சிருக்கேன். விரைச்சுப் போய்ட்டீங்களே.

எண்ணெய் விளக்கில் அவன் ஆடைகள் மூங்கில் கொம்பிலும், அவளது சீலை அவன் மேலும் தெரிந்தது.

சோகை பிடித்து நெடியோடு கிடந்த சீலே. அருவருப்பாக இருந்தது. ஆனல் நிராகரிக்க விருப்பமில்லே. வருவதை ஏற்றுக் கொள்ளத்தான்....

எழுந்திருக்க முயன்முன். கையில் தேள் கொட்டியது. அந்த உபாதை 'ஓ' வென்று ஓலமிட்டது. மறைந்ததை ஞாபகப்படுத்துவது போல் காந்தல் பற்றிக் கொண்டது.

ஜுரமும் காய்ந்தது. வாய் கசந்து வழிந்தது. பசி ஒரு கூண்டு மிருகம் போல் உடலில் உலாவியது.

— ஏதாவது சாப்பிடக் கிடைக்குமாம்மா?

— டீ வாங்கியாரச் சொல்லட்டுமா?

— என்கிட்டே காசு கிடையாது.

— அதனுலே என்னங்க! விஜயா, துட்டெ எடுத்துக்கிட்டு ஒரு டீ சூடா வாங்கியா!

பெண்ணின் பெயர் அவனேத் திடுக்கிட வைத்தது.

— டீ வேண்டாம், பால்!

— சரி, பால் வாங்கியாடீ!

ஒரு எட்டு வயதுப் பெண்ணுக்குப் பல் வரிசை மட்டும் வெள்ளேயாகத் தெரிந்தது. மீதி இருட்டோடு சேர்ந்திருந்தது.

அலுமினிய டம்ளரோடு வெளியில் போனுள்.

— கண் தெரியாதா?

— தெரியாது.

— பிறவியிலேந்தா?

— இல்லேங்க! நடுலேந்துதான்.

— புருஷன்?

— அதைக் கேக்காதீங்க!

— இந்தப் பொண்ணு?

— எம்பொண்ணு!

— சாப்பாடு?

— பொண்ணே ஒரு வீட்டிலே வேலேக்கு வச்சிருக்கேன். நானும் சம்பாரிப்பேன்.

— எப்படி?

— பிச்சைன்னு போய்க் கேட்க மாட்டேன். ஏனத்தை எடுத்துக்கிட்டுப் போய் நிப்பேன். என்னேப் பார்த்தாச்சுன்னு அவங்களே கொண்டாந்து போடுவாங்க! சீலே கொடுப்பாங்க! காசு போடுவாங்க! நல்ல நடத்தைக்காரின்னு எல்லாருக்கும் தெரியும்.

அதில் பெருமை தொனித்தது.

—ஓ!

— ஆமாங்க! இல்லாட்டி இந்தச் சோறு கிடைக்காது.

ராத்திரி பினுத்தினுன். கையில் வலி தீ போல் எரிந்தது. ஜுரமும் ஏறியிருந்தது.

காலேயில் எட்டு மணிக்கு மேல்தான் கண்ணே விழித்தான். அவள் பால் தயாராக வைத்திருந்தாள்.

மழை சுருட்டிக் கொண்டு எங்கேயோ ஓடிவிட்டது. புதுசான காலே வெளிச்சம் படியில் உட்கார்ந்து புன்னகை செய்தது.

பால் மகா மட்டம்! கண்ணே மூடிக் குடித்தான். குடிசையின் நெடி மழைக்குப் பிறகு அதிகமாகத் தெரிந்தது. அவள், அவளது ஆடை, அவளது புழக்கம் மூன்றும் சேர்ந்து அந்த நெடியை அங்கே நிரந்தரமாக பெயிண்ட் பண்ணியிருந்தன.

சாதாரண நாட்களில் இருக்க முடியாது. வாழ்க்கையில் நலிந்த பிறகு எதற்கும் கவலே இல்லே. அக்கறையும் இல்லே.

நெடியுடன் மூக்கு சமாதானமாகி விட்டது.

காலேயிலிருந்து ஓர் ஆசை! அவன் கதை எந்த இடத்தில் தொடரும் போடப் பட்டிருப்பதைப் பார்க்க வேண்டும்.

பேப்பர் வேண்டும் என்று கேட்டான். விஜயா போய் வாங்கி வந்தது. கையால் ஏந்த முடியவில்லே. கீழே விரித்துப் பார்த்தான்.

மீண்டும் மனம் கலங்கியது.

சூரியகுமார் ஓர் ஊர்வலத்தில் தென்பட்டது, சிலர் அவனேத் துரத்திக் கொண்டு ஓடியது, துவந்த யுத்தம் நடந்தது, கடைசியில் இரண்டு கையிலும் கத்திக் காயத்துடன் ஓடி விட்டது எல்லாம் பிரசுரமாகியிருந்தன.

நாடெங்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் டாக்டர்களுக்கும் எச்சரிக்கை போயிருக்கிறது என்று செய்தி கூறியது. யாராவது கையில் காயத்துடன் வந்தால், தகவல் கொடுக்க வேண்டும்.

எதுவும் ஓடவில்லே.

ஒரிஜினல் சூரியகுமார் படா வேலேக்காரனுக இருந்தான். தனக்கு நடப்பதையெல்லாம் இன்னொருத்தர் மீது அவக்காகத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தான்.

மனத்தை வேதனே அரித்தது. நேற்று காலே வரை செய்தி அவனேத் தொடர்ந்து வந்துவிட்டது. இனி பாக்கி இந்தக் குடிசைக்கு வர வேண்டியதுதான்!

காலேயில்தான் அவளுக்குத் தெரியும், அவன் கைகள் ரணமாயிருந்தன என்று. விஜயா சொல்லியிருந்தது.

கைகளே அவள் தொட்டுப் பார்த்தாள். ரணங்களின் வாய்கள் பெரிதாக இருந்தன. பொறுக்குகள் பாறையாகத் தெரிந்தன — நம்ம அம்மாக்கண்ணு வைத்தியரிட்டே போலாம் என்ருள்.

— எங்கே இருக்கார்?

— ஊருக்குள்ளே!

— படிச்சவரா?

— இது கிராமாந்தரம்! அனுபோவம்தான். ராசிக்காரரு. ஏழை பாழைன்னு இரக்கம் உண்டு. போலாமா?

— நான் வரத்துக்கில்லே.

— ஏனும்?

— எனக்கு விரோதிங்க இருக்காங்க!

— இந்த ஊர்லியா?

— எங்கே இருக்காகன்னு சொல்ல முடியாது. தொடர்ந்துகிட்டே வராங்க.

— அப்படி நீங்க என்ன செஞ்சிய!

— நான் செய்யலே. என் பணம்.... நிறுத்திஞன்.

— பங்காளிங்களா?

— அப்படித்தான்! ஆனுல் பங்கை மட்டும் வாங்கிக்கிறதா இல்லே! சொத்தைக் கேக்கிருங்க! என் சுகத்தையும் கேக்கிருங்க.

— அக்குறும்பா இருக்கே?

— அக்குறும்புதான்! சுகத்தைக் கொடுத்தாச்சு! கஷ்டத்தை ஏத்தாச்சு! இப்போ உயிரையே கேக்கிருங்க!

— காலம் கெட்டுப் போச்சு.

இரண்டு பேரும் நிசப்தமானுர்கள்.

— வைத்தியரை இங்கே கூட்டியாரேன்.

— வருவாரா?

— வருவாரு! ரொம்ப நல்ல மாதிரி.

அம்மாக்கண்ணு வைத்தியருக்கு மானரிஸங்கள் அதிகம். கையைப் பிடித்துப் பார்ப்பதைக்கூட மதச் சடங்காக வைத்திருந்தார். அறுபத்தைந்தில் பார்வை கொஞ்சம் அவுட்.

அவனது கைகள் பொத பொதத்திருந்தன. நெடி வீசியது. தோல்கள் சாம்பி யிருந்தன.

— சீ வச்சிருக்கு!

— அம்மாடி! அவள் அங்கலாய்த்தாள்.

— கை கண்டபடியா கொத்தியிருக்கே! பாத்தி கொத்தற மாதிரி.

— பங்காளிங்க அவரெ நொக்கிட்டாங்க!

— போலீசிலே சொல்றதானே!

திரும்ப வந்து கட்டுப் போட்டார். ஒரு ரூபாய் வாங்கினுர்.

ராத்திரி ஒரேயடியாய்க் குத்தியது. 'அம்மா அம்மா' என்று புரண்டான்.

அவள் ஆதரவாகப் பிடித்துக் கொண்டாள். மேல் புஜத்தை நீவினுள். குச்சி விரலானுலும் பெண்மை இருந்தது. கையைத் தொட்ட ஸ்பர்சம் உள்ளே வெம்மை யைப் போய்த் தொட்டது.

ஒரு வாரம் அவஸ்தை! காரசாரமாய் அமிலத்தை ஊற்றியது போல் காந்தல். ரணங்கள் தீப்பற்றி எரிந்தன. கையை வெட்டித் தூரப் போட்டு விடலாம். சீழ் வடிவ தால் நெடி! அவனது ஒற்றை ஆடை, அவளது சீலே, கந்தல் துணி எல்லாவற்றிலும் அந்தச் சீழ்! குடிசையின் நெடியைவிட அவன் உண்டாக்கும் நெடி அதிகமாக இருந்தது. அந்த நெடிக்கு மூக்குச் சிணுங்கினேமே, இந்த நெடிக்கு!

அவன் எதையெல்லாம் கண்டு அருவருப்பு அடைந்தானே, அந்த அருவருப்பு களை அவனே ஏற்படுத்திக் கொண்டிருந்தான்.

வைத்தியர் தினம் கட்டுப் போட வந்தார். குடிசைக்காரி அவரது கூலிக்கு கடன் சொல்லி வைத்தாள்.

பத்து தினங்களுக்குப் பிறகு சீழின் உக்கிரம் குறைந்தது. தோல்களுக்குப் புதுத் தெம்பு வந்து ரணத்தை மூட ஆரம்பித்தன.

அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

குடிசைக்குள் வாழ்க்கை நடத்த முடிகிறது. காரணம், அவள் மனம் விசாலமாக இருக்கிறது.

அன்று இரவு அவள் அவன் புஜங்களை நீவிவிட வந்தபோது, 'படக்'கென்று அவளை அணைத்தான். அவளது கடினமில்லா மார்புகள் அவனது மார்புகளில் சரிந்தது. அந்தப் பழம் புடவைக்குள் அவளது உடல் கெட்டியாகவும் சூடு தரக்கூடிய தாகவும் இருந்தது.

அவளது பதில் உணர்வை எதிர்பார்த்தான்.

பதிலே இல்லே.

எதிர்ப்பும் இல்லே.

மௌனத்தின் மூலம் அவள் அவனைவிட உயர்ந்தவளாக இருந்தாள்.

அவளுக்குப் பிடித்தம் இல்லாததை அவன் செய்துவிட்டது போலவும், அவன் விரும்புவதால் அதை சகித்துக் கொள்வது போலவும் தோன்றியது.

தயக்கம் வந்தது.

—இப்படியே உன்னே அனுபவிச்சுட்டேன்னு என்ன பண்ணுவே?

—எதுவும் பண்ண மாட்டேன். ஆண்டவன் பார்த்துப்பாரே!

—என்ன?

—ஆமாம்! ஒருத்தன் பெண்டாட்டி குட்டிகளை ஒருத்தன் கெடுத்தா அவன் பெண்டாட்டி குட்டிகளை இன்னொருத்தன் கெடுத்துடுவான்.

—என்னது?

—ஆமாங்க! ஒருத்தருக்கு நாம்ப செய்யறதைக் கடவுள் நமக்கு நடக்கும்படி பண்ணிருவாருங்க! நல்லதுன்னுலும் சரி, கெட்டதுன்னுலும் சரி!

பொட்டுகளில் போய் அந்த வார்த்தைகள் வெடித்தன. அவளால் அப்படிப் பேச முடியுமா என்பது ஆச்சரியமாக இருந்தது. தெய்வத்தை அவள் சேர்த்துச் சொன்னுலும், இயற்கையின் நியதியைச் சொல்வது போல் விஞ்ஞானமும் அவனுக்குப் பட்டது.

அவளை விடுதலை செய்தான். அதே கணம் எங்கேயோ அவனது கமலமும், விஜயாவும் யாரிடமிருந்தோ விடுதலை பெறுவதாக நினைத்தான்.

அவள் சொன்ன நியதிகளை அவனும் அறிந்தவன்தான்! ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில், அவன் இருக்கும் சூழ்நிலையில் அந்த நியதி 'அறம் செய விரும்பு', 'ஆறுவது சினம்' என்று ஆயிரம் கிளிப்பிள்ளை உபதேசங்களோடு ஒன்றாகி வெறும் வார்த்தைக் கோவையாக இராமல், அர்த்தமாக, ஒரு கனமான உணர்வாக, அவனுள் இறங்குவதை உணர்ந்தான்.

—பெண்டாட்டியை நினைச்சுட்டீங்களா?

அந்த வார்த்தை மேலும் குத்தியது.

—ஆமாம், என்றான் குற்ற உணர்வுடன்.

—நீங்க ஆம்பிளைங்க! நா அபலை! நீங்க என்னைக் கெடுக்க வந்தா, எங்கிட்ட பலமா இருக்கு? வார்த்தைதானே இருக்கு!

வெறும் தகர விளக்கு எரியும் அந்தக் குடிசையில் பிரகாசமான மெர்க்குரி விளக்கு எரிவது போல் இருந்தது. அது குடிசைக்குள் துளிக்கூட நிழல், இருட்டு, ஒதுக்கல், பதுக்கல் எதையும் விடாமல் எல்லாவற்றையும் வெள்ளை அடித்துக் காட்டியது.

அவளது அதிர்ச்சிகள் அவனை உட்கார வைத்தன. ஆழ்ந்து நிதானத்துடன் அவளைப் பார்த்தான்.—ரொம்பத் தெரிஞ்சுக்கிட்டவளா இருக்கே!

—அய்யோ! நா படிச்சதில்லீங்க! எல்லாம் அனுபோவந்தான். வாழ்க்கையிலே ஆடிப்பாடி ஓஞ்சு வந்துட்டேன். அநேகம் பேருக்கு இதுக்குள்ளாறயே புத்தி வந்துடும். சிலவங்களுக்குக் கடேசி வரை வராம இருக்கும். அவ்ளதான்! இன்னிக்கு இருக்கப் போறோம்! நாளைக்குச் சாகப் போறோம். அதுக்கிடையிலே வாழணுங்க! சந்தோஸமா வாழணுங்க! ஒருத்தர் மட்டுமில்லே, எல்லோரும் சந்தோஸமா வாழணுங்க!

வெளியே வந்து உட்கார்ந்தான். சிறிது நேரம் அவள் மூச்சு அவள் தொண்டையைக் 'கொர்ர் கொர்ர்' என்று அறுக்கும் சப்தம் கேட்டது. நல்ல ஆத்மாக்களுக்குச் சீக்கிரம் தூக்கம் வரும்.

நல்லது செய்தால் நல்லது. கெட்டது செய்தால் கெட்டது. இப்போது கெட்டதே வந்து கொண்டிருந்தால் அன்று அவன் கெட்டதே செய்து கொண்டிருந்தான். இது தத்துவம். விஞ்ஞானமும் அப்படியே!

நெஞ்சில் ராமக்கா வந்தாள். பாலுசாமி வந்தான். காசி வந்தான். பூவலிங்கம் வந்தான். பாண்டித் தெருவே வந்தது.

வாழ்க்கையில் அவர்கள் சுகங்கள் எல்லாம் அழிந்திருக்கிறது. அவனுல் முழுதும் இல்லாவிட்டாலும் முக்காலும் அவன்தான். பாண்டித் தெரு கைம்பெண் ஆகிவிட்டது. நகரத்தின் வாழ்க்கையே பாதகமாகி விட்டது.

இப்படிச் செய்ததெல்லாம் சரியா? ஒரு தேசிய நோக்கு கொண்டு பார்த்தால் சரிதான். அவன் அதற்காகச் செய்யவில்லை. வாழ்பவர்களை அடித்து, தேசியத்தையும் ஏமாற்றித் தன் சொத்துக்கள் வளர்வதையே குறியாக வைத்துவிட்டான்.

ராமக்காவின் அழுகை, பாலுசாமியின் பார்வை, அவன் மனைவியின் கெஞ்சல்கள், காசியின் சாபம் எல்லாம் ஸ்லைடுகள் போல் வந்து போயின.

இவற்றின் பிரதிகூலங்கள்தான் இப்படி அவன் வாழ்க்கையைப் பறிக்கத் துரத்திக் கொண்டே வருகிறதோ?

வைத்தியர் அந்த சாயங்காலத்தில் வந்தது ஆச்சரியம். அவரிடம் வைத்தியம் நின்று ஒரு வாரம் ஆகிவிட்டது.

—அம்மா பார்வதி!

குடிசைக்காரி வெளியிலிருந்தாள்.

—வாங்க, வைத்தியரே!

— ஒரு விஷயம் சொல்லணும். — நம்ம பையன் டவுன்லேர்ந்து காலம்பற வந்தான்.

—நல்லாருக்கணுங்க!

—சும்மா பேசிக்கிட்டிருந்தோம். பச்சில வச்சு வெட்டுக்காயத்தைக் குணமாக்கிட்டேன்னு சொன்னேன். மேலே விசாரிச்சான். நம்ப அசலூர்க்காரர் கையிலே ரெண்டிலும் பங்காளிங்க குத்திப் போட்ட சமாசாரத்தைச்சொன்னேன் நாயினுன்னுன்! என்னன்னேன்! அவன் பலே பயங்கரவாதி! போலீஸ் அவனைத் தேடுது! ஆளைப் பிடிச்சுக் குடுத்தா ஐயாயிரம்! கொலை பண்ணிட்டு ஓடியாந்துருக்கான்னுன். நமக்கெதுக்குடா வம்புன்னேன். அவன் கேக்காம போலீசைக் கூட்டியாற டவுனுக்குப் போயிருக்கான். நமக்கு எதுக்கு பாபம்! அசலூர்க்காரர் வந்தா உடனே ஓடிப் போயிடச் சொல்லு! நா வரேன்.

உள்ளே வந்தாள்.

நிதானமாக நின்றாள்.

—கேட்டீங்களா?

—கேட்டேன்.

என்ன சொல்றீங்க என்பதைப் போல் முகத்தைத் திருப்பினாள்.

—அவர் சொல்ற ஆள் நானில்லே! ஆனால் நான்தான்னு என்னைத் தேடறாங்க!



நன்றியில்லாத மனிதனை விட மோசமான எதையும் உலகம் இதுவரை தயாரிக்க வில்லை.

—சிங் சென

—உம்!

—ஆனா.. நான் இன்னொரு விதத்திலே வினை விதைச்சவன்.

—உம்!

—பார்வதி! என்னை வச்சு சோறு போட்டதுக்கு, உதவி பண்ணினதுக்கு எல்லாத்துக்கும் நன்றி. நான் வரேன்!

அவள் பேசாமலிருந்தாள்.

அவன் கையைப் பிடித்தான்.

—என்னைத் தப்பிதமா நினைக்காதே! நான் அவங்க சொல்ற மாதிரி கொடியவன் இல்லே.. உன் நடத்தை சாட்சியா சொல்றேன். நான் சொல்றது சத்தியம். என்னை மோசமாக நினைக்காதே!

நிமிர்ந்தாள்.—நினைக்க மாட்டேங்க!

—என்னை நம்பறியா?

—நம்பறேன்! உங்க குரல்லே விரிசல் இல்லே!

கையைப் பிடித்துக் கண்ணில் ஒத்திக் கொண்டான்—பின்னாலே நல்லபடியா வாழ்ந்தா உன்னைச் சந்திக்கிறேம்மா.

—இருங்க.

முந்தானையிலிருந்து ஒரு ரூபாயை எடுத்துக் கொடுத்தாள். வச்சுக்குங்க!

கண்ணீரோடு வெளியேறினான்.

முனிசிபல் நகரத்தின் ஜன நெரிசல்கள்! ஓரத்தில் அவன் நின்று கொண்டான். வாகனங்கள் ஒன்றையொன்று துரத்தின. ஜனங்கள் தலை தெறிக்க ஓடினார்கள். மேலே ஒரு நியான் விளம்பரம் ஒவ்வோர் அஞ்சு செகண்டுக்கும் அணைந்தது. ஓர் ஒட்டையான காம்பவுண்டுச் சுவரில் நாடு சுபிட்சத்தை நோக்கிப் பீடு நடை போட்டுக் கொண்டிருந்தது.

அவன் ரொம்ப ரகசியமாக அச்சிட்ட தாள்களைக்கொடுத்துக்கொண்டிருந்தான். அதில் ஜனநாயகம் வெல்க, புரட்சி ஓங்குக.சர்வாதிகார ஆட்சி ஒழிக என்று மேலே தடிமனு எழுதியிருக்க,

கீழே பல வட இந்திய நகரங்களில் எத்தனை பேர் சத்தியாக்கிரகம் செய்து கைதானார்கள்.

என்னென்ன ஊர்களில் என்னென்ன அக்கிரமங்கள் நடந்தன என்பதை யெல்லாம் குறிக்கப்பட்டிருந்தது.

ஒரு தினசரி பேப்பர் மாதிரி.

சிலர் அந்தத் தாள்களை எதிர்பார்த்தே வாங்கிக் கொண்டு போனார்கள். அவனை நன்றியோடும், பெருமிதத்தோடும் பார்த்தார்கள்.

போலீஸ் யாராவது வந்தால், தூரத்திலிருந்து அந்த யுவன் சிக்னல் கொடுத்தான். குருவும் விநியோகத்தை நிறுத்திக் கொண்டான்.

அன்று விநியோகம் முடிந்த பிறகு, ஒரு காப்பிக்காக கியோஸ்க் அருகில் போனார்கள்.

—ஸார், எனக்கு ஒரு பிரச்னை என்றான் குரு.

—சொல்லுங்க!

குரு தயங்கினான்.

யுவன் உடனே,—எதை வேண்டுமானாலும் சொல்லப்பா! நான் ரகசியக்காரன் என்றான்.

—என்னை ஒரு கொலைக் கேஸ்லே சம்பந்தப்படுத்தறாங்க. வேணும்னு போலீஸ் இதைச் செய்யறாங்க. உண்மைக் குற்றவாளி தப்பிச்சிக்கிட்டுப் போயிட்டான். என்னை அவங்க துன்புறுத்தாம இருக்க வழி ஏதாவது இருக்கா?

யுவன் சிரித்தான்.

—அதுக்குத்தானே போராடறோம். சர்வாதிகாரம் இருக்கக் கூடாது. இருந்தா போலீஸ் மட்டுமில்லே எல்லா அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சர்வாதிகாரிகளா மாறிடுவாங்க! ஜனங்க அவதிப்படுவாங்க! தனி மனிதர் சுதந்திரம் வேணும்கிறதுக்காகத்தான் இந்த ரகசிய நடவடிக்கை நடத்தறோம். உன் பிரச்னையும் இதிலே அடங்கியிருக்கு, என்று சொல்லி காப்பியை ஒரு மடக்கில் குடித்தான்.

பிறகு நாக்கால் உதட்டைச் சுற்றிக் கொண்டு,—உனக்கு ஏதாவது உதவி வேணுமின்னு அமர்நாத் இருக்காரு அட்வகேட், நான் அனுப்பிச்சேன்னு சொல்லு.

இந்த நகருக்கு வரும்போது அவன் பெரிதும் சலித்திருந்தான். வாழ்க்கை அனுவசியமாய் அவனிடமிருந்து வழுவிவிட்டதை நினைத்தான். அது பெரிய துக்கம்! அதனால் நலிந்து, மெலிந்து, நடைப்பிணம் ஆகிவிட்டான். வாழ வேணும் என்று குடிசைக்காரி சொன்னது நினைவுக்கு வந்தது. வாழ எங்கே வழி இருக்கிறது?

முனிசிபல் நகரில் வந்த மூன்றும் நாள் அந்த யுவனுடன் பழக்கம்.

—நண்பா! எனக்கு உதவி செய்வாயா என்று தூய தமிழில் பேசினான். துண்டுப் பிரசுரங்களை அங்கங்கே போய் வெவ்வேறு நபர்களிடம் கட்டுக்கட்டாகக் கொடுக்க வேண்டும். மக்களிடை விநியோகிக்கவும் வேண்டும். தினமும் நாலு ரூபாய் கொடுத்தார்கள். தினசரி எப்படியோ ஓட்ட முடிகிறது. எல்லோரும் சந்தோசமா வாழணுங்க!

அட்வகேட் அமர்நாத் முதல் மாடியில் இருந்தார்.

ஐம்பதானவர். 'திக்' கண்ணாடி போட்டிருந்தார். வேட்டி கட்டியிருந்தார்.

அறையில் பழைய தேசியமும் கத்தத் தியாகமும் மணந்து கொண்டிருந்தன.

ஒரு நூல் சிட்டம் கழுத்தில் தொங்க காந்திஜி உட்கார்ந்திருந்தார். நேதாஜி மிலிடரி உடையில் எங்கேயோ பார்த்து ஸல்யூட் பண்ணிக் கொண்டிருந்தார்.

பருமனான லா புத்தகங்கள் நாலு திசைகளிலும் சுவர் வைத்திருந்தன.

நான் என்ன செய்ய முடியும்? கையை விரித்தார். தேசத்தையே கேட்டார் போல் இருந்தது.

தொடங்கினார்:

—உன் கேஸ் கேட்டா பரிதாபமா இருக்கு! பழி ஓரிடம், பாவம் ஓரிடம்! அந்த பயங்கரவாதியைப் பிடிக்கத் துப்பில்லே. உன்னை விரட்டுகிறார்கள். நீ நியாயத்துக்குப் போராடணும்னு பார்க்கிறே! போலீசுக்கு விஷயத்தைப் புரிய வைக்கணும்னு

பார்க்கிறே! அரெஸ்ட் ஆனு பெய்ல்ல வரணும்னு பார்க்கிறே! பாடுபட்டாவது நிரபராதின்னு நிரூபிக்கப் பார்க்கிறே!

—இதெல்லாம் நடக்கும்! எப்போ நடக்கும்! நாட்டிலே அரசியல் அமைப்பு பாதிக்கப்படாம இருந்து, கோர்ட் சீர்ட்டுலே ஒழுங்கா நடந்து, அவங்கவங்க மனசைத் திறந்து தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம்னு உரிமை இருந்த காலத்திலே நடக்கும். எல்லாம் பறிபோச்சு! தனி மனிதன் சுதந்திரம் போச்சு. அரசியல் அமைப்பிலே ஷரத்து 14, 21, 22-ஐயெல்லாம் தூக்கிட்டாங்க! அரெஸ்ட் பண்ணினு கேட்க நாதி கிடையாது. உள்ளே தள்ளினு தட்டிப் பேச ஆளும் கிடையாது, பத்திரிகையும் கிடையாது. நாடே போச்சு போ!

அவனுக்குக் குழப்பமாக இருந்தது. அவர் சொல்வதெல்லாம் புரியுமா தெரியவில்லை. அவன் பிரச்னை ஒன்றே ஒன்றுதான்! போலீஸ் அவனைத் துரத்தி வருவது தப்பு! குற்றம் செய்தவன் அவன் அல்ல! அவர்கள் அவனைத் தொடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வழி இருக்கிறதா?

—உன் கேஸ் முதல்லே மிசாவிலே போயிடும். உள்ளே கொண்டு தள்ளிடுவான். நீ சொல்றதை அப்படியே நம்பிடுவாங்கன்னு நிச்சயமா சொல்ல முடியாது. ஒருவேளை தகுந்த ருசுவோடு நீ உன்னைக் குற்றவாளியில்லைன்னு நிரூபிக்க முடியல்லேன்னு வச்சுக்கோ! உன் கதி என்ன? சாதாரண காலமா இருந்தா என்னை மாதிரி வக்கீல் வாதாடி கேஸை உடைச்சுப் போட்டுடலாம். இப்போ அது நடக்காதுங்கறேன். உன்னை ஆயுசுவரை ஜெயில்லே போட்டாலும் கேள்வி கேட்பான் கிடையாது. அங்கேயே கொன்னு போட்டாலும் கேள்வி கேட்பவன் கிடையாது. இன்ஃபாக்ட், சிறைச்சாலைகள்லே என்னென்னவோ நடக்குதுன்னு கேள்விப் படறேன். ஆட்களின் அட்ரஸ்களே தெரியறதில்லை.

அப்போதும் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் சொல்லும் அரசியல், சட்ட நுணுக்கங்கள் அவனுக்குத் தெரியாது. ஒன்று மட்டும் தெரிந்தது. அரசியலில் எமர்ஜென்ஸி மூலம் நடந்த மாறுதல்கள் அவனைப் போன்ற சாதாரண மனிதர்களின் சுதந்திரத்தைப் பாதித்து விட்டது, சட்ட உரிமைகளைப் பாதித்து விட்டது.

இப்போதுதான் ஏன் பலர் பல இடங்களில் அரசாங்கத்துக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகிறார்கள் என்று தெரிந்தது.

விநியோகம் முடிந்து திரும்பும் இரவு!

வழியில் போலீசுக்காக ஒரு சந்துக்குள் திடீரென்று திரும்பினான். நடமாட்டமான சந்து இரண்டு பஜார்களுக்குமிடையே குறுக்கு வழி.

அணைந்திருந்த விளக்குக் கம்பம் சௌகரியமாக இருந்தது.

அக்கம்பக்கத்தை ஓரக்கண்ணால் பார்த்து நிற்கும்போது,

யாரோ அவன் மீது கை வைத்தார்கள்.

முற்றிலும் புதுசானவன். 'டீ'க்காக உடை பண்ணி 'டீ'க்காக இருந்தான். லாண்டிரியிலிருந்து ட்ரை வாஷில் வந்தது போலிருந்தான்.

ஒருவேளை பாண்டித் தெரு பிராண்டோ! அவர்கள்தான் இப்படி டீக்காக....

—நேரா என்னோட வந்துடு. விவகாரம் வச்சுக்காதே!

—யார் நீ?

—தெரியவேணும்.

—எங்கே வரணும்?

பின்னோட வா! அங்கே இங்கே போகப் பார்த்தியானா கூச்சல் போடுவேன்.

விஷயம் தெரிந்தவன் போலிருந்தது. எவ்வளவு விஷயம் தெரியும்? எவ்வளவு தூரத்திற்குத் தெரியும்?

தப்ப வழியில்லை.

சந்தில் ஒரு வீடு! ஐந்தாறு பெயர்ப் பலகைகள். அறைகள் பலவும் பூட்டப் பட்டுக் கிடக்க, மனிதர் இல்லாமல் வீடே ஒழிந்து கிடந்தது.

குறுகலான நடைக்குள் நடந்து, ஒரு கதவுமுன் பஸ்ஸரை அழுத்தி, தவம் இருந்து, அது திறந்ததும், அவனைப் பார்த்து,

—மன்னிக்கணும் ஸார்! கொடூரமா இருந்துட்டோம். நான் வரேன் என்று சொல்லி,

அவனை உள்ளே அழுத்தி, வெளியிலிருந்து கதவை அடைத்துக் கொண்டான்.

உள்ளே அறையின் வெளிச்சத்தில் ஒரு பெண்மணி அவனைப் பார்த்தவாறு நின்ருள்.

முப்பதிருக்கும். உயரமாக இருந்தாள். ரொம்ப சிவப்பாக இருந்தாள். உயரத்திறல் ஸாரி கொசுவங்கள் ஒரு செக்ஸைக் காட்டின. கழுத்தில் மெல்லிசான சங்கிலி போட்டு அழகா யிருந்தாள்.

பார்வையில் சோகம் இருந்தது. ஆவல் இருந்தது. கோபம் இருந்தது.

—இப்படித்தான் செய்வீர்களா, என்ருள்.

அவன் பேசவில்லே.

— வாருங்கள் என்ருள்.

பிரமிப்புடன் நடந்து போஞன்.

அடுத்த அறை! சுத்தமாக இருந்தது. சோபா இருந்தது.

—ஏன் நிற்கிறீர்கள்? உட்காரக் கூடவா உரிமை இல்லே என்ருள்.

உட்கார்ந்தான்.

அவள் எதிரே உட்கார்ந்தாள். அவனைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தாள்.

அழுகை 'குபுக்'கென வந்தது.

—என் வாழ்க்கையைக்கெடுத்துவிட்டீர்கள்!





நீங்கள் இப்படி இருப்பீர்கள் என்று நினைக்கவே இல்லை! உங்களால் நான் எவ்வளவு துக்கத்தை அனுபவித்து விட்டேன். தினம் தினம் அழுது செத்து விட்டேன். இப்படி என்னைச் சீரழிய விடுவதைவிட, நீங்களாகவே கொன்றிருக்கலாம்.

திடுக்கிட்டான் அவன்.

இவள் யார்? எங்கேயாவது சந்தித்திருக்கிறோமா? பாண்டித் தெருவிலிருந்த ஒருத்தியாக இருப்பாளா? இப்படி ஒருத்தரையும் நினைவில்லையே!

அவள் அழுகையை நிறுத்தவில்லை. உடம்பை மடித்து இரண்டாக்கி முகத்தைத் தொடையில் வைத்து விம்மிக் கொண்டிருந்தாள்.

அவன் திகைப்புடன் பொறுமையாக இருந்தான்.

அவள் தானாகவே நிமிர்ந்தாள்.

—நீங்கள் ஒரு கல்நெஞ்சக்காரர்! இல்லாவிட்டால் இப்போதுகூட சும்மா இருப்பீர்களா?

'ஓ'வென்று அழுதாள்.

—அம்மா என்றான் அவன்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

—நீங்கள் என்னை யாரோ என்று நினைத்திருக்கிறீர்கள்! நான் தப்பிதமாக இங்கே வந்து விட்டேன்.

அவள் ஆக்ரோஷத்துடன் எழுந்தாள்.

—அது வேறு பொய்யா சொல்கிறீர்கள்? கொஞ்சமாவது ஈவு இரக்கம் இருக்கிறதா? ஒரு பெண் என்று பச்சாதாபம் இருக்கிறதா? பிடிக்கவில்லையானால் சொல்லுங்கள்! என்னை இங்கேயே கொன்று விடுங்கள். உங்கள் அரசியல் தத்துவப் பிரகாரம் அது ஒரு பாதகம்கூட இல்லை.

'டப்'பென்று வெளிச்சம் அவன் தலைக்குள் எரிந்தது. அது உண்மையாக இருக்குமா? இது சூரியகுமார் வீடா? இது அவனது மனைவியா?

—நீங்கள்.. என்று சொல்லி வாயெடுத்தான்.

—என்னை ஏமாற்ற வேண்டாம். இரண்டு வருஷம் பார்க்கவில்லை என்றால் மறந்து விடுவேனா! இந்தத் தாடியும் மீசையும் உங்களை மற்றவர்களிடமிருந்து மறைக்கலாம். என்னிடமிருந்து மறைக்க முடியாது. போதும், போதும்! ஒரு அரசியல்வாதியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு நான் படுகிற கஷ்டம் இந்த ஈரேழு ஜன்மத்துக்கும் காணும்.

மீண்டும் அழுதாள்.

அவன் புரிந்து கொண்டான்.

—அம்மா! நீங்கள் எதிர்பார்ப்பது நான் இல்லை. நான்....

—போதும் என்று சீறினாள் அவள்.—உங்கள் தில்லுமுல்லுகளை நிறுத்திக் கொள்ளுங்கள்! எனக்கு இருக்கும் ஆத்திரத்தில் நானே உங்களை போலீசில் பிடித்துக் கொடுப்பேன். இப்படியெல்லாம் பொறுப்பில்லாமல் பேசாதீர்கள்! தேசத்தையும் கவனிக்க வேண்டும். அதே போல் குடும்பத்தையும் கவனிக்க வேண்டும். அப்படிச் செய்ய இஷ்டமில்லை என்றால் ஏன் திருமணம் செய்து கொண்டீர்கள்?

அவள் தொடர்ந்து கொண்டே போனாள். அவனைப் பேசுவதற்கே இடம் விடவில்லை. அவனை வேறு ஆள் என்று நினைக்க அவள் இஷ்டப்படவே இல்லை. அலைமேல் அலையாக அவள் உணர்ச்சிகள் போவதைப் பார்த்தால் வேறு என்ன சொன்னாலும் நம்ப மாட்டாள் போல் இருந்தது. இரண்டு வருடங்கள் தனிமையில் வாழ்ந்து ஒரு மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தாள். அவள் அவனை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்வது அவளுக்குள் இருக்கும் ஏதோ பலவீனம், அல்லது மனநோய்!

அவன் மௌனியானான்.

ரொம்ப நாழிகை திட்டிக் கொண்டே இருந்தாள்.

பிறகு அவளே மெள்ள மெள்ளத் தணிந்து வந்தாள்.

சாப்பிட அழைத்தாள்.

அவன் சாப்பிடப் போனபோது அந்த அறையில் திடீர் என்று போட்டோவைப் பார்த்தான்.

அதில் அவனும் அவளும் ஒட்டாக இருந்தார்கள். ஒரு கணம் திடுக்கிட்ட அவன் யோசித்து, தானே தன் நினைவைத் திருத்திக் கொண்டான்.

போட்டோவில் இருந்தது சூரியகுமாரும் அவளும்!

போட்டோவுக்கு மாலை போட்டிருந்தாள்.

நன்ருகச் சாப்பிட முடிந்தது. சாப்பிடாமல் உடம்பைக் கெடுத்துக் கொண் டிருப்பதைப்பற்றி ஒரு லெக்சர் அங்கே அடித்தாள்.

அப்பா, போதும்! சூரியகுமார் அவனை விட்டு ஓடியது சரிதான்!

சாப்பாட்டிற்குப் பிறகு மேலே அழைத்துப் போனுள். கதவைத் திறந்ததும் அங்கே ஓர் அதிசயம்!

கட்டில் ரெடியா யிருந்தது. வாசனைப் புகை மெல்லிசாய் வீசியது. தட்டில் பழங்களும் பாலும் ஸ்டில் லைஃப் ஓவியம் போலிருந்தன.

இழுத்து உட்கார்த்தினுள்.

அவன் தடுப்பதற்குள் முகத்தை இழுத்து உதட்டில் இங்கிலீஷ் படம் போல் ரொம்ப நாழிகை சரசமாடினுள்.

அவள் கண்கள் நனைந்து வழிந்தன.

ஆனந்தத்தால் அழுகை.

அவனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. இரவுப் படுக்கையை எதிர்பார்க்க வில்லை. தயக்கத்தோடு நிராகரிக்கப் பார்த்தான். அவள் விடவில்லை.

இருவரும் படுத்தார்கள். விளக்கு அணைந்தது. அன்புடன் அவள் கட்டிக் கொண்டாள். மிருதுவான பாரங்கள் அவன் மார்பில் சுவர்க்கங்களை உண்டு பண்ணின. ஒரு கணம் மெய்ம்மறந்தான்.

மனசின் அடியிலிருந்து ஒரு வஞ்சம் ஜனித்து வந்தது. சூரியகுமார் செய்த துரோகத்திற்கு இவளைச் சூறையாடினுல் என்ன?

வெம்மை அவனை அலைத்தது.

ஒரு கணத்தில் தீண்டியிருப்பான்.

குடிசைக்காரியின் குரல் கேட்டது — ஒருத்தன் பெண்டாட்டி குட்டிகளை ஒருத்தன் கெடுத்தா, அவன் பெண்டாட்டி குட்டிகளை இன்னெருத்தன் கெடுத்து விடுவான்.

எதனுலோ தெரியாது. அந்தக் குடிசைக்காரியின் வார்த்தை சுட்டுக் கொண்டு மனசில் வந்தது.

நிதானங்களுக்கு வந்து சேர்ந்தான்.

கட்டிலில் அவள் பொறுமையிழந்து அவன் உடம்பில் துவைந்து கொண்டிருந்தாள்.

கடைசி ஆனந்தங்களைப் பெற மல்லாடினுள்.

—எனக்கு உடம்பு சரியில்லை, என்ருன் அவன்.

அவள் நம்பவில்லை.

—நான் தூங்க வேண்டும். என்னை விடு.

கேள்விக்குறி போல் உடம்பை ஒருக்கனித்தான்.

தாபத்துடன் அவள் அவன் கைகளைத் தன் கழுத்தோடு சேர்த்து இணைத்துக் கொண்டு கண்களை மூடினுள்.

காலையில் அவள் காப்பி கொண்டு வந்தபோது அவனது தோள்பட்டையைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

—எங்கே மச்சம்?

பரபரப்போடு இடது கணுக்காலையும் பார்த்தாள். அங்கேயும் அடையாளத் தைக் காணவில்லை.

அவநம்பிக்கையோடு அவனை விறைத்தாள். அவன் மெதுவாக எழுந்தான்.

—நான் இல்லை என்று முழுங்கினுன்.

எடுத்த காப்பி டம்ளரைக் கீழே அப்படியே வைத்தான்.

பின்னுல் இருமுறை திரும்பிப் பார்த்துக் கொண்டு வெளியே போனுன்.

அவள் ஸ்தம்பித்து நின்று கொண்டே இருந்தாள்.

வெளியில் தெரு ஓரத்தில் இரு மரங்களும் வரிசையாய் நிற்கும் போலீஸ் காரர்களையும் பார்த்துத் திகைத்தான்.

வீட்டின் முகப்பிலே நின்றான்.

ஐந்து நிமிடம் ஓடியது. பத்து நிமிடம் ஓடியது. மனம் நெரித்தது.

அங்கே நிற்பதால் யாராவது வந்து அவனை—சூரியகுமார் என்று அழைத்து விடுவார்களோ?

அல்லது சூரியகுமாரே நேரில் வந்து அவனைப் பிடித்து ஏதாவது செய்து விட்டால்....

நிற்கவும் முடியாது. வெளியில் போகவும் முடியாது.

நின்றது வேறு விதத்தில் ஆபத்தாகியது.

அவன் பார்வை திரும்பி வீட்டின் நீள நடையில் சென்றபோது,

நேற்று பார்த்த 'டீக்' ஆசாமி சுருக்காகவே வந்து கொண்டிருந்தான்.

அவன்தான் லட்சியம் என்று அவன் முகத்தில் தெரிந்தது.

அதே செகண்டில் வாசலில் வாழ்க கோஷங்கள்! எட்டிப் பார்த்தான். ஓர் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. ஓகோ! இதற்காகத்தான் சிவப்புக் குல்லாய்களா?

இறங்கினான். விடுவிடென்று ஒரு கர்மசிரத்தையைக் காண்பித்துக் கொண்டு கூட்டத்தில் போய்ச் சேர்ந்தான்.

கொடிகளும் பானர்களும் கூட்டத்தை நெருக்கிக் காட்டின. அட்டைகளில் நாட்டை வளமாக்கும் மந்திரங்களை ஒட்டி இருந்தார்கள். ஒரு திறந்தவெளி ஜீப்பில் மத்திய மந்திரி காதிலிருந்து காதுவரை புன்னகை பூத்துக் கொண்டு அடிக்கடி கருடாழ்வார் ஸ்டைலில் கைகளைக் கூப்பிக் கொண்டு பவனி வந்தார்.

போலீசார் ஏராளமாய்க் கூட்டத்தை நிறைத்தார்கள்.

மூச்சைப் பிடித்துக் கொண்டு, சந்தேகத்தை எழுப்பவிடாமல் 20 அம்சத் தொண்டனாகக் காண்பித்துக் கொண்டு கூட்டத்தில் கலவை ஆனான்.

ரொம்ப நேரம் இதில் தங்க முடியாது. அந்த ஆசாமி வந்து விடுவான். என்ன செய்யலாம்?

ஒரு பலவீனக்காரனிடமிருந்து கொடியை வாங்கி 'வாழ்க'வை ரோஷமாகக் கத்தினான்.

மூலை திரும்பும்போது ஒரு சிவப்புக்காரனின் பார்வை அவன் மீது விழுந்தது.

தயங்கியது அவன் தப்பு!

—ஏய், சூரியகுமார்! என்று அவன் கத்த இவன் கொடியைக் கீழே போட்டு விட்டுக் குறுக்கே பாய்ந்து விருட்டென்று ஓடினான்.

எதிர் பிளாட்பாரத்தில் அட்வகேட் அமர்நாத் கறுப்புக் கொடிகளுடன் நின்று அதிகார வர்க்கத்தைக் கூச்சலால் ஒழித்துக் கொண்டிருந்தார்.

அந்தக் கூச்சலை உடைத்துக் கொண்டு நுழைந்து, அமர்நாத்திடம் பரபரப்பாக—என்னைத் துரத்துகிறார்கள் என்றான்.

அவர் அந்த யுவனிடம் கண்ணைக் காட்ட,

யுவன் ஒரு நொடியில் எல்லா விவரங்களையும் உறிஞ்சிக் கொண்டு,

தனியாக அம்போ என்று நின்று கொண்டிருந்த சைக்கிளைக் காண்பித்தான்.

உடன் துள்ளிக் குதித்து, சைக்கிளைக் காற்றாய்க் கரைத்தான்.

பின்னால் ஓடி வந்த போலீஸ், பிகில் ஊதி ஆர்ப்பாட்டக்காரர்களின் மனிதச் சுவரைக் கடக்கப் பிரயாசைப்பட்டு, பல பேச்சுத் துடிப்புக்களுக்குப் பிறகு கடந்து பார்க்க,

குரு தூரத்தில் புள்ளியாகி இருந்தான்.

போலீஸ்காரர் பிகில் அடித்து தம் சகோதரர்களையும், ஒரு வண்டியையும் வரவழைக்கப் பிரயத்தனங்கள் செய்ய ஆரம்பித்தார்.

குரு நகரத்தின் விளிம்பை அடைந்து, சைக்கிளைப் புதருக்குப் பின்னால் கடாசி, இளைத்துக் கொண்டே ஓட ஆரம்பித்தான்.

தன்னைப் பின்தொடர போலீசும், அவர்களது தற்கால விஞ்ஞான சாதனங்களும் விரைவாக வேலை செய்து கொண்டிருக்கும் என்று நினைத்ததும்,

மெயின் சாலையை விட்டு, கிளையில் புகுந்து, ஓட்டமும் நடையுமாய் குடிபடை ஊர்களைக் கடந்து எங்கும் நில்லாமல் சென்று கொண்டிருந்தான்.

அவனோடுகூட அவன் நினைவும் விரைவாக ஓடி வந்தது.

வாழ்க்கையில் ஓய்வே கிடையாதா? துன்பங்கள் தொடர் சங்கிலிகளாக வந்து கொண்டு இருக்கின்றனவே! எங்கேயாவது ஒரு கண்ணியை அறுத்து விடலாம் என்றால் முடியவில்லையே! வெட்டி விட்டால்கூடப் புதுக் கண்ணிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றனவே!

தடயங்களை விட்டுப் போக இஷ்டமில்லை. அதனால் டீக்குக்கூட எங்கும் நிற்க வில்லை. இன்று முழுதும் இதே கதியில் ஓட வேண்டியதுதான். இவ்வளவு தூரம் தான் போயிருப்பான் என்ற அவர்களது கணிப்பை உடைத்துவிட வேண்டும்.

ஓர் இடத்தில் ரயில் மேட்டைக் கண்டவுடன் குஷி! சொஸ்தமாக தனியே நடக்கலாம், ஓடலாம்! ஒருத்தர் தனிமைக்காகவே ஏற்பட்ட ராஜபாட்டை!

லைனைப் பிடித்தான். வேகம் சிறிது மட்டுப்பட்டு நடக்கும்போது, கண்ணில் நீர் தளும்பியது.

இதுபோல் வேட்டையாடப்படும் நாய் வாழ்க்கை எத்தனை நாளைக்கு?

மனம் வெந்து போய் அதே கேள்வியைக் கேட்டுக்கொண்டே இருந்தது.

லைனில் வெகு தூரம் நடந்தபின் பழக்கப்பட்ட கட்டடங்கள் கண்ணில் பட,

அந்தக் குடிசைக்காரி வாழும் இடம் இங்கேதான் இருக்கிறது என்பதை உணர்ந்தான்.

மத்தியான வெய்யில்! களைத்து வியர்வையாகக் கொட்டிக் கொண்டு, மூச்சுவிட முடியாமல் மார்பைப் பிடித்துக் கொண்டு, குடிசைக்குள் நுழைந்தான்.

—பார்வதி.

புன்னகையோடு திரும்பினாள்.

—ரொம்பக் களைச்சிருக்கேன். துரத்தறாங்க! சோறு இருக்கா?

—இதோ ஆக்கிடறேன்.

—இல்லே. பழஞ்சோறு போறும். ஆக்கிற வரை பொறுக்க முடியாது.

உலைமுடியைக் கொண்டு முன்னால் வைத்தாள். கறுப்புப் பானைக்குள் கை விட்டாள். அந்த இருட்டில் சோறு 'வெள்ளை வெளேர்' என்று பூப்போல் தெரிந்தது. பழைய சோறு!

அவன் கண்கள் பளபளத்தன. நாக்கு சப்புக் கொட்டியது.

உலைமுடியில் சோற்றைக் குவித்தாள்.—ஊர்கா வேணும்? ஏ விஜயா! விஜயாப் பொண்ணு!

விஜயா தறிகெட்டு ஓடி வந்தாள்.

—அம்மா, அம்மா! வைத்தியர் ஐயா மவன் இல்லே! அவர் வந்திட்டிருக்காரு!

அவன் கையை உதறினான். எழுந்தான். —பார்வதி நான் வர்றேன்.

அவள் ஸ்தம்பித்து நிற்க, குடிசையை விட்டு வெளியே பாய்ந்தான்.

—அதோ, அதோ, குரல்கள்.

வைத்தியர் மவன் இரண்டு ஆட்களோடு தென்பட்டான்.

குருவின் மூளையில் தீப்பற்றியது. ஒரே தாவலில் மறு திசையில் குதித்தான். கல்லிலும் மண்ணிலும் விழுந்தடித்து ஓர் அசுரன் போல் ஓடத் தொடங்கினான்.

காதுகளில் காற்று 'உய்' என்று வழிந்தது. வாயை 'ஆ' என்று திறந்து காற்றை வேகமாக இழுத்து விட்டான்.

கால் யாருடைய கால்களைப் போலவோ தனியாகவே இயங்கின.

மாறி மாறி அவை மண்ணில் படுவதைக் கண்ணால்கூடப் பார்க்க முடியவில்லை. அவ்வளவு துரிதம். இன்ஜின் பிஸ்டன் தண்டுகளைப் போல் ஒரே இயக்கங்கள்தான்!

மரமும் மண்ணும் பின்னே விரைந்து ஓடின. கற்களும் புதர்களும் விருட்டென்று அவன் முன்னால் ஓடிவந்து பின்னால் ஓடின.

ஓடினான். உலகம் அவன் பின்னால் முடிந்து கொண்டு வருவது போல் ஒரு பாதுகாப்பைத் தேடி அவசரமாக ஓடினான்.

அவர்களுக்கும் அவனுக்கும் இடைவெளி கூடியது. கூடிக் கொண்டே போயிற்று. பிறகு அவர்கள் இக்குணிகள் ஆகிக் கொண்டிருந்தார்கள். மேலே வானத்தின் அடியில் மண் ஒட்டும் இடத்தில் அவர்கள் வெறும் புள்ளிகளாகி கடைசியில் மறைந்த பிறகு, அவன் இன்னும் ஓடிக் கொண்டிருந்தான்.

சிறிதுகூட சந்தர்ப்பத்திற்கு இடம் கொடுக்க விரும்பவில்லை. ஒரு நெருக்கடி நிலையைக் காட்டியதால் தேகம் இப்படித் தன்னை மறந்து ஓடுகிறது. அதைத் தளர்த்த அவன் விரும்பவில்லை.

மாலையில் வேண்டுமென்றே திசையைத் திருப்பி ஒரு மணி நேரம் பிரயாணித்த பின்,

கடைசியில் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க,

நரம்புகள் 'விண் விண்' என்று வீணை வாசிக்க,

தலையில் பெரிய சூடு ஒன்று பூதாகாரமாய் இறங்க,

ஒரு தோப்புக்கு அருகில் இற்றுப் போய் விழுந்தான் அவன்!

பிறகு அங்கேயே ஒரு மணி நேரம் கிடந்து ஆறினான்.

மாலை 'புவபுவ'வென செந்தூரம் கொட்டி, மேற்கே இறங்கிக் கொண்டிருந்தது.

சிறியதாய் ஓர் இருட்டு கிழக்கே யிருந்து அக்டோபஸ் போல் கிளைகளை நீட்டி வந்து கொண்டிருந்தது.

வேண்டாம்! வேண்டாம்! ஜன்மத்துக்கும் இது வேண்டாம் என்று நினைத்தான்.

போதும்! இப்படி விரட்டப்பட்டு அணு அணுவாய்ச் சாவதை விட,

கண்ணீர் கண்களை மறைத்தது.

மனித உடம்புதானே! சதையும், எலும்பும்தானே! எத்தனை நாள் தாங்கும்?

அவன் அதுவரை சேர்த்து வைத்திருந்த நம்பிக்கைகள் எல்லாம், மெள்ள வழிந்து கிளைக் கால்களாகித் தரையில் ஓடிக் கொண்டிருந்தன.

எங்கே போக? இனி எங்கே போக? எங்கேயும் நிம்மதி இல்லை. ஓய்வில்லை! யாராவது கண்டுபிடிக்கிறார்கள்! யாராவது விரட்டுகிறார்கள்! நாய் படாதபாடு படுகிறோம். எங்கே போக?

கண்ணீர் தளும்பி வந்தது!

ஒரே ஒரு இடம், கமலம்! ஆமாம்! அவள் அணைப்பில் சுருண்டு, கண்ணீரைச் சிந்தினால் மனம் சிறிதளவாவது நிம்மதி ஆகும். அவள் இருக்கும் இடம் ஒன்றுதான் அடைக்கலமாகத் தோன்றியது. நேராக அங்கே போய்விட வேண்டியதுதான்! ஆமாம்! கமலம்.... கமலம்....!

இரவு ஏழு மணிக்கு ஒரு ஊர், கடைகளும் மனிதர்களுமாய்த் தென்பட்டன.

வெறும் பன்னும் டீயும் சாப்பிட்டான். நிறையச் சாப்பிட வேண்டும். பஸ் ஏறப் பணம் இருக்காது.

பஸ் ஏறி பட்டி என்ற அந்த ஊரை அடைந்தபோது காலை ஒன்பது மணி!

சமந்தகாமினி—மனைவியின் சிநேகிதி—அவள் வீட்டிற்கு ஒரே ஒரு முறை போயிருக்கிறான்!

இப்போது நேரே அங்கே போனான்.

இந்தச் சூழ்ச்சியைப் புறக்கணிக்கவே இத்தனை நாளும் போனதில்லை.

ஊரில் பெரிய மைதானத்தின் அருகில் வீடு இருந்தது.

சூரியன் ஓங்கி வீச, வியர்வையோடும், சோர்வோடும் அந்த வீட்டு வாசல் முன்னால் நின்றான்.

தட்டினான்.

திறந்தாள்.

பாதியாகி இருந்தாள். நகைகளைக் காணவில்லை.

சந்தோஷமே இல்லை! அன்னியனைப் பார்ப்பது போல் பார்த்தாள்.

உள்ளே போனான்.

—யாருமில்லையா?

—புருஷனும் மனைவியும் சேலம் போய்ட்டாங்க. சமந்தகாமினியைக் குறித்துத் தான் அவள் பேசினாள்.

—அப்போ நீதானு (இங்கே இருப்பது?)

—ஆமா.

—ஏன் கமலம்! கஷ்டப்பட்டு நாயா அலேஞ்சு வந்திருக்கேன். சரியாப் பேசக் கூடாதா?

—ஏன் பேசணும்?

எரிந்தாள். கோபம் அலே வீசியது.

எதிர்பார்க்கவில்லே. செவிட்டில் அடித்தது போல இருந்தது.

—ஏன் கமலம்! உனக்கு என்னுச்சு?

—என்ன ஆகணும்? நீங்க ஒரு புருஷனு? ஒரு பொண்ணுக்கு அப்பனு?

திடீரென்று அழுதாள். கண்ணீரும் சளியுமாகத் தேம்பினுள்.

—கமலம்!

மெதுவாகப் போனுன். அவள் தோளேப் பற்றினுன்.

—என்னேத் தொடாதீங்க! அவள் எரிந்து விழுந்தாள்—உங்களுக்கு உரிமை கிடையாது. அதிகாரம் கிடையாது.

—என்ன கமலம் இது? என்ன நேர்ந்தது? நான் என்ன செய்துட்டேன்?

—என்ன செய்யணும்? என்ன பாக்கியிருக்கு? குடிச்சுட்டு வந்தா வரம்பு கிடையாதா? இப்படியா?..

—நான் குடிச்சிட்டு வரலே, கமலம்.

—இன்னிக்குச் சரியாகத்தான் வந்திருப்பீங்க! அன்னிக்கு என்ன செஞ்சீங்க? நினேவிலயா இருந்தீங்க? மாடு மாதிரி வந்து விழுந்தீங்க! என்மேலே விழுந்தா தப்பில்லே. நான் பொண்டாட்டி. அந்தப் பச்சைப் பிள்ளே மேலே விழுவீங்களா? நீங்க ஒரு அப்பனு? பெத்த பெண்ணுக்கும், கொண்ட பெண்டாட்டிக்கும் வித்தியாசம் தெரியாதா?

கண்களேக் கொட்டினுன். பிரமித்துப் பார்த்தான். மூளேயில் எதுவோ வேலே செய்தது.

—என்னவாம்! புரியும்படியா சொல்லு! எனக்குச் சத்தியமா நீ சொல்றது எதுவும் தெரியலே..

—எப்படித் தெரியும்! நீங்கதான் குடியிலே இருந்தீங்களே!

—குடிலயா! கமலம்! ஆண்டவன் சாச்சியா சொல்றேன். நான் குடிச்சதே இல்லே! யார் வந்தாங்க? என்ன நடந்திச்சு?

—நீங்கதான் வந்தீங்க! ஊரு உலகத்தை மறந்து வந்தீங்க! அதுகூடப் பரவா யில்லே. மானம் மரியாதையையே மறந்து வந்தீங்க! நான் உங்க பெண்டாட்டி!

என்னே நீங்க பெண்டாண்டதைக்கூடத் தப்பிதமாச் சொல்லலே! உங்க பொண்ணு..நீங்க பெத்த பொண்ணு! அழுதழுது கெஞ்சினேனே! கேட்டீங்களா? ஒரு வார்த்தை பேசினீங்களா? தூ! நீங்க மனித ஜென்மமா?

அழுது கீழே சரிந்தாள்.

உடைந்தது போல் நின்முன். ஏதோ உதிர்த்து, பல்லேக் கடித்தான். டேய்! சூரியகுமார்! உன் வேலேயாடா இது? உருவம் ஒண்ணு யிருக்கிறோம்னு இப்படி கீழ்த்தரமா நடந்துகிட்டயா? வஞ்சகா!

அவளேப் போய் எடுத்தான். அவள் அவனே விலக்கினுள்.

—கமலம்! நீ சொல்றது நானில்லே!

—நீங்க சொல்றதைக் கேட்க மாட்டேன். போங்க வெளியே.

—என்ன சொல்றே?

—போங்க வெளியே! எனக்கு இப்படிப்பட்ட புருசன் வேண்டாம்.

—கம்லம்! அது நானில்லே. என்னேப்போல் ஒருத்தன் இருக்கான். கிராதகன். அவனுலேதான் என் வாழ்க்கை யெல்லாம்..

—ஏன் இப்படி இட்டுக்கட்டறீங்க! நீங்க வரவர கெட்டுப் போயாச்சு! குட்டிச்சுவராயிட்டீங்க. உங்களோடு வாழ்ந்ததெல்லாம் போதும். போங்க, வெளியே போங்க!

—கமலம்!

——போங்க! நிச்சயமா போங்க!

கூடத்துக்குள் ஒரு சன்னல் லேசாகத் திறந்தது. உள்ளே ஒரு நிழல்.

அவன் திரும்பினான். —விஜயா!

சன்னல் பக்கம் போனான். கதவைத் தள்ளினான்.

—விஜயா!

—பாபி! பாபி! பாபி!

விஜயா இரைந்தாள். கட்டிலில் கிடந்தாள். நீ அப்பா இல்லே போ, போ!

விறிட்டு அழுதாள். அவனைப் பார்க்க விரும்பாமல் முகத்தை மூடினாள். 'ஓ' வென்று கீறிக் கொண்டு அழுதாள். பெரிய கேவல்களுடன் குலுங்கிக் குலுங்கி அழுதது அவன் நெஞ்சைத் தொட்டது.

கமலம் ஓடி வந்தாள்.

சன்னலைச் சாத்தினாள்.

—உங்களை நான் கேட்டுக்கிறேன். முதல்லே போங்க வெளியே!

—கமலம், அவன் இரைந்தான்.

—என்ன என்று சொல்லி ஓர் எக்காளத்துடன் அவள் திரும்பினாள்—என்ன மிரட்டுறீங்க? மிரண்டுடுவேன்னு பார்க்கறீங்களா? நீங்க என்ன சொன்னாலும் நான் நம்பமாட்டேன்! போங்க, வெளியே போயிடுங்க!

போங்க! போங்க! போங்க!

அவனை அந்த வார்த்தைகள் பிங்பாங் பந்து போல் அங்கும் இங்கும் அடித்து விளையாடியது.

அந்த வார்த்தை ஒரு கொடுக்காக மாறி அவனைப் பல இடங்களில் கொட்டியது.

இரு பெண்களின் அழுகைகளும் அங்கே நாராசத்தையே உண்டு பண்ணி யிருந்தன.

அவன் மனம் சுருண்டது! எங்கேயோ அவனது சுயமதிப்பில் ஒரு கீறல் விழுந்து விட்டது. பதில் கோபமும், ஆத்திரமும் அவனுக்குப் பொங்கி வந்தன. அதோடு ஒரு விரக்தி அவனிடம் சிறுகச் சிறுக வளர்ந்தது, இப்போது பெரிதாகி உள்ளம் முழுதையும் வியாபித்து நின்றது.

— இனி என்ன இருக்கிறது வாழ்வில்!

கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

எல்லா விஷயத்திலும் வஞ்சிக்கப்பட்டு விட்டான். உலகமே அவனுக்கு அன்னியமாகத் தோன்றியது. அவனது கடைசி நம்பிக்கைகள் எல்லாம் சிதறிக் கீழே விழுந்தோடி விட்டன.

விரக்தி ஒரு தீர்மானத்தை ஏற்படுத்தியது. இனி வாழ முயற்சித்துப் பயன் என்ன? நேராகப் போய் சரண் அடைவதுதான் வழி! போலீஸ் என்ன வேண்டு மானாலும் அவனைச் செய்து கொள்ளட்டும்!

மனத்தில் அப்படி வைராக்யம்! விரக்தி!

கதவைத் திறந்தான்.

வெளியே வந்தான்.

கண்ணில் வந்த நீரைத் துடைத்தான். பல்லைக் கடித்ததும் அந்த விரக்தி வெறி ஆர்ப்பரித்து வந்தது.

மைதானத்தில் இறங்கினான். 'தட தட'வென்று அதன் குறுக்கே நடையிட்டு போலீஸ் நிலையத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

பத்து மணி வெயில் 'சுள்'ளென்றது.

அழுகை மீறியே வந்தது.

ஒரு மைதானம் போயிருப்பான்.

'தட தட'வென்று காலோசை!

— டேய் என்று குரல்.

நின்றான்.

யாரோ அவனை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.
யார் அது?
தலை தெறிக்க வந்தான்.
வரவர உருவம் துல்யமாகிக் கொண்டிருந்தது.
யார் இது? சூர்யகுமாரா!
சிரித்துக் கொண்டே வந்தான். சினிமாச் சிரிப்பு! செயற்கைச் சிரிப்பு!
ஒரே ஒரு கணம் மிரண்டான்.
— ஓடாதே!
அவன் இரைந்தான்.
அவன் உத்தரவுக்காக நிற்கவில்லை. இஷ்டப்பட்டே நின்றான்.

அருகில் வந்தான். இருபதடி தள்ளி நின்றான். பைக்குள் கையை விட்டான். கைத் துப்பாக்கியை வெளியே எடுத்தான்.

அவன் பயப்படவில்லை.

— சுடு! சுடுடா! நானே வெறுத்தாச்சு! சுடு! நான் சாகத் தயார்.

'அந்த குரு' துப்பாக்கியை குரு மீது குறி வைத்தான். அதன் டிரிகரைப் பிடித்துக் கொண்டு பார்வையை அழுத்தமாகக் காட்டினான்.

— சுடு! சுடு! — நான் சாகத் தயார்!
குரு கத்தினான்.
— சுடுடா! சுடு!
வெறி வந்தது போல் இரைந்தான்.
— சுடு!
அந்தப் பிரதேசம் எதிரொலித்தது.
— சு. . . . . . . . . . டு. . . . . . . . . . . . . .
தொண்டை கிழியக் கத்தினான்.
என்ன? சூரியகுமார் கண்கள் ஏன் மாறுகின்றன?
அவன் கண்கள் இப்படி மாறக்கூடியவையா?
ஏன் அவை பேதலிக்கின்றன?
— குரு!
அவன் குரலா இது? அந்தக் கரகரப்பு இல்லையே!
— நான் உன்னைச் சுடப் போறது இல்லே!
குரு திடுக்கிட்டான்.
துப்பாக்கியைக் கீழே இறக்கினான்.

— நான் உனக்குத் துன்பம் நிறையக் கொடுத்துட்டேன். உன் வாழ்க்கையைப் பாழடிச்சுட்டேன்! உன் குடும்பத்தையே சின்னாபின்னமாக்கிட்டேன்.

அவன் கண்களைக் கண்டு குரு பிரமித்தான்.

— குரு! வாழ்க்கையிலே கொடூரமா வாழ்ந்துட்டேன். கொடூரத்தாலே உலகத்தை மாத்தலாம்னுகூட நினைச்சேன்! பாதகமான பல காரியம் பண்ணினேன். கத்தியும் கம்பையும் வச்சு அட்டகாசம் செய்தேன். ஆனா.... உலகம் ஒரு துளிக் கூட மாறல்லே! இம்மி! அணு! அணுவிலும் அணு. அந்த அளவுகூட மாறல்லே! நான் செஞ்சதெல்லாம் வீண்! நான் நம்பினது மட்டும் நடக்கணும்னு உலகத்தில் எல்லாரையும் அழிச்சுட்டுப் புதுசா நம்பிக்கையோடு ஒரு பாலகனை வளர்க்கணும். அவனும் பின்னாலே நாம்ப நினைச்சபடி இருக்கப் போறானா, தெரியாது. அது அவன் மனசைப் பொறுத்தது.

—உலக எண்ணங்கள் மாறணும்னா, உலக மனசுதான் மாறணும்! இந்த மாற்றம் திடீர்னு நேர்ந்துடாது! சத்தியமா சொல்றேன். படிப்படியா, தானா அது இஷ்டம் போலத்தான் மாறி வருது. பலாத்காரமா ஏதாவது செஞ்சா மாறுகிறதும் இல்லே! மாறினது நிற்கிறதும் இல்லே!

—இப்படி நான் நினைச்சது சரியோ, தப்போ! என் மனசிலே இப்படித் தோணிப் போச்சு! அவ்வளவுதான்!

இதனாலே நான் மாறிட்டேன்! செஞ்சதெல்லாம் தப்பு மட்டுமில்லே. வீண்! அநாகரிகம்!

—இனிமேல் நான் செஞ்சதைப் போய் அழிக்க முடியுமா? குடும்பங்களின் கண்ணீரைப் போய் நிறுத்த முடியுமா?

—நல்லவேளை! நீ பூரணமாக அழியறதுக்கு முன்னாலே உன்னைப் பார்த்துட்டேன்! உன்னண்டே மன்னிப்புக் கேட்க இங்கேயே அடிக்கடி உலாவி வரேன்!

எல்லாத்தையும்விட உன் விஷயத்திலே எனக்கு மாறுதல் ஏற்பட்டதுக்குக் காரணம், நீ என் வீட்டுக்குப் போயிருக்கே, என் மனைவியைப் பார்த்திருக்கே! அவகூடப் படுத்திருக்கே! அந்த இடத்திலே நீ எனக்கு வஞ்சனை பண்ணினாலும் பண்ணியிருக்கலாம். உன்னாலே முடியும்! அதை நீ செய்யலே! அதிலேயே உனக்கு சுத்தமான புத்தியும் இருக்குன்னு புரிஞ்சுக்கிட்டேன். உண்மையிலே இப்போ ஓடி வந்த உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேனே! அதுக்குக் காரணமே நீ என் மனைவி கூட நடந்துகிட்ட உயர்ந்த பண்புதான்! நிச்சயம் அதுதான்!

ஆமா, நான் பாதகன்! உன் உருவத்தை வச்சே மனச்சாட்சி இல்லாம உன் பெண்டாட்டி பெண்களைக் கெடுத்தேன். நான் ஒரு பாபி! என்னை மன்னிச்சுடு!

உன்னுடைய மன்னிப்பு மட்டும் போதாது! இன்னும் பலபேருடைய மன்னிப்பு எனக்குக் கிடைக்கணும். அதுக்கும் ஒரு வழி பண்ணிட்டுத்தான் வந்திருக்கேன்.

இந்தா! இந்தக் கடிதத்தைப் படி! போலீசுக்கு எழுதியிருக்கேன். நீ நானில்லேனு சொல்லியிருக்கேன். நான் செய்ஞ்ச அநியாயத்தை எல்லாம் விளக்கியிருக்கேன்.

யாரு இவங்க? (திரும்பிப் பார்க்கிறான். சிரிக்கிறான்.) போலீஸ்! வாசனை புடிச்சு வந்திருக்காங்க! மைதான ஓரத்திலே பதுங்கிப் பார்க்கிறாங்க பார்! பயங்கரவாதியைப் பிடிக்கணும்! பிடிச்சுக்கட்டும்.

இந்தா! காகிதத்தை வச்சுக்க! என்னை மன்னிச்சுடு! மனித இனம் வாழ்க! மனித மனம் வாழ்க!

குரு அவன் என்ன செய்யப் போகிறான் என்று யோசிக்கு முன் துப்பாக்கியை இடது நெஞ்சில் வைத்து இழுத்தான்.

'டமீல்' என்று பயங்கரச் சத்தம்.

அவன் சிதறிக் கிடந்தான், கிமே...

குருவின் கண்களில் நீர். அவன் கைகளில் குமார் கொடுத்த கடிதம் படபடத்தது.

தூரத்தில் வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கமலம் அங்கே ஓடி வந்து அழுது நின்ற போதும் அவன் அப்படியே நின்றான்.

அவனைப் போலவே இருந்த உருவம் கிமே இறந்து கிடப்பதைப் பார்த்து, நடந்ததை ஊகித்து குருவின் காலடிகளைப் பிடித்துக் கொண்டு மன்னிப்புக் கேட்டுக் கண்ணீர் சிந்தியபோதும் அவன் அப்படியே நின்றான்.

வாசனை பிடித்து வந்த ரகசிய போலீசார் அவன் முன்னால் சூழ்ந்த போதும் அப்படியே நின்றான்.

— ஸார்! ஸார்! வருத்தப்படுகிறோம்! என்று எல்லாம் உணர்ந்து சொன்ன போதும் அப்படியே நின்றான்.

அவனுக்கு ஒன்றுமில்லை. சத்தியம் வென்று விட்டதே என்று நினைத்ததனால் ஏற்பட்ட அதிர்ச்சி அது!

வெல்லாது என்று அவன் தன் அனுபவத்தால் திட்டவட்டமாக நினைத்திருந்தான்.

இப்போது வென்றதும் அதிர்ச்சி!

ஆனந்தபூர்வமான அதிர்ச்சி!

அதிசயபூர்வமான அதிர்ச்சி!

அந்தக் கணங்களில் அவன் வாழ்க்கையை இறுக்கியிருந்த சிக்கல்கள் எல்லாம் மறைந்து விடுதலையானது போல் உணர்ச்சி அவனுள்ளே கூடியிருந்தது.

அதனால் அவன் ஒரு பரவச அதிர்ச்சியில் இருக்கிறான்.

அவனை விட்டு விடுங்கள்.

அதிலிருந்து அவன் மீண்டு வர சில மணி நேரங்களாவது ஆகும்.

ஆகட்டும்!

ANANDA VIKATAN
Registered No. M. 2135
Registered as a Newspaper in Sri Lanka
மலேசியாவில் :- (விமானப் பதிப்பு) 60 மலேசியா காசுகள்.




CASAP.44.183 TAM